# உஸ்மானிய துருக்கியர் எழுச்சியும் இஸ்லாமிய கிலாபத்தின் வீழ்ச்சியும்



எம்.ஐ.எம். அமீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'Samasri Desha Manya'
AL-Haj M.I.M. Abdullah J.P
President - MSSO

# உதுமானியத் துருக்கியர் எழுச்சியும் கிலாபத்தின் வீழ்ச்சியும்

எம். ஐ. எம். அமீன்
(முன்னாள் முதுநிலை விரிவுரையாளர்)
அறபு - இஸ்லாமிய நாகரித்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பு பற்றிய விபரம்

தலைப்பு : உதுமானியத் துருக்கியர் எழுச்சியும் கிலாபத்தின் வீழ்ச்சியும்

ஆசிரியர் : (c) எம். ஐ. எம். அமீன்

திகதி : 2020 ஜுன் 30

விலை : 400/=

ISBN : 978-955-38379-3-8

அச்சகம் : அல்பா பிரின்டிங் இன்டஸ்ரீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியரின் ஏனைய நூல்கள்

| | | |
|---|---|---|
| (1) | இஸ்லாமிய சட்டக்கலை (ஒரு வரலாற்று நோக்கு) | 1996 |
| (2) | இஸ்லாமிய நாகரிகம் | 1996 |
| (3) | இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் அறிஞர் சித்திலெப்பை | 1997 |
| (4) | அறேபியர் வாழ்வியல் | 1999 |
| (5) | இலங்கை முஸ்லிம்களின் வராலாறும் கலாசாரமும் (1870-1915) | 2000 |
| (6) | முஹம்மதுற்றசூலுல்லாஹ் (ஸல்) | 2002 |
| (7) | அபூபக்ர் ஸித்திக் (றழி) | 2004 |
| (8) | இஸ்லாமிய சட்டக்கலை மூலாதாரங்கள் | 2006 |
| (9) | முஸ்லிம்கள் வளர்த்த அறிவியல் அழகியற் கலைகள் | 2008 |
| (10) | இஸ்லாமிய குடும்ப வாழ்வு | 2008 |
| (11) | இலங்கை முஸ்லிம்களின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட முன்னோடிகள் | 2010 |
| (12) | ஹெம்மாதகம முஸ்லிம்களின் வாழ்வும் வரலாறும் | 2012 |
| (13) | கலிபாக்கள் வரலாறு | 2013 |
| (14) | முஸ்லிம் ஸ்பெயின் ஒரு வரலாற்று சமூகவியல் நோக்கு | 2014 |
| (15) | சிவப்பு கோடு | 2014 |
| (16) | அப்பாசியர் காலம் ஒரு வரலாற்று சமூகவியல் பார்வை | 2015 |
| (17) | வரலாற்று ஒளியின் நிழலில் | 2015 |
| (18) | உமையாக்கள் காலம் ஒரு வரலாற்று சமூகவியற் பார்வை | 2016 |
| (19) | ஹஜ் உம்றா | 2016 |
| (20) | விருட்சமும் விழுதுகளும் | 2017 |
| (21) | சீஆ கோட்பாடுகள் ஒரு பகுப்பாய்வு | 2018 |
| (22) | இஸ்லாமிய நாகரிகம் ஒரு பன்முகப்பார்வை | 2019 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய கல்வி நிறுவகம் வெளியிட்ட இவ்வாசியரின் மொடியூள் நூல்கள்

(23) இலங்கையில் இஸ்லாம் 1992
(24) இஸ்லாமிய கலாசாரப் பண்பாட்டு வளர்ச்சி 1992
(25) இஸ்லாமிய சமூக அரசியல் அமைப்பு 1992

பதிப்பித்த நூல்

(26) ஒ. எல். எம். இப்றாஹிம் ஆலிம் (நூரி) அவர்கள் எழுதிய நவவி இமாமின் நாயக வாக்கியங்கள் நாற்பது மொழிபெயர்ப்பும் விளக்கவுரையும் 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| முன்னுரை | | | vii - xi |
| அத்தியாயம் | I. | உதுமானியத் துருக்கியர் ஆட்சியின் தோற்றமும் வளர்ச்சியும் | 1 - 7 |
| அத்தியாயம் | II. | உதுமானியத் துருக்கியர் வீழ்ச்சி | 8 - 19 |
| அத்தியாயம் | III. | கிலாபத்தின் வீழ்ச்சிக்கு வழிகோலிய வரலாற்றுப் பின்னணி | 20 - 78 |
| | அ. | தன்ழீமாத் - சீர்திருத்தங்கள் | 34 - 39 |
| | ஆ. | துருக்கி மீதான ரஷ்யப் படை எடுப்பு | 39 - 41 |
| | இ. | சுல்தான் அப்துல் ஹமீத் பதவியில் இருந்து வெளியேற்றப்படல் | 41 - 46 |
| | ஈ. | முதலாம் உலகப் போரில் துருக்கி | 47 - 55 |
| | உ. | தேசியவாதிகளின் எழுச்சியும் கிலாபத் ஒழிப்பும் | 56 - 76 |
| அத்தியாயம் | IV. | இந்திய கிலாபத் இயக்கம் | 77 - 88 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | பக்கம் |
|---|---|---|---|
| அத்தியாயம் | V. | கிலாபத் கோட்பாடும் நடைமுறையும் ஒரு வரலாற்றுப் பார்வை | |
| | அ. | கிலாபத் அறிமுகம் | 89 - 95 |
| | ஆ. | சிந்தனைக் குழுக்களின் கிலாபத் கோட்பாடு பற்றிய சில கருத்துக்கள் | 96 - 97 |
| | இ. | சிந்தனையாளர் சிலரின் கிலாபத் கோட்பாடு பற்றிய கருத்துக்கள் | 97 - 118 |
| | ஈ. | கிலாபத்தின் மீள் அமைப்பு பற்றிய சில கருத்துக்கள் | 119 - 127 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தை மனதிருத்தி ஆரம்பிக்கின்றேன்.

மனித உடலுக்கு தலை எவ்வளவு முக்கியமோ அதேபோல மனித சமுதாயத்துக்கு அரசியற் தலைமை முக்கியமானது. அத்தலைமையை மக்களின் சம்மதத்தோடு தெரிவு செய்வதும், அத்தலைமைத்துவத்துக்கு குடிமக்கள் கீழ்ப்படிந்து செயற்படுவதும், அத்தலைமைத்துவம் குடிமக்களின் நலனைப் பேணி நாட்டைப் பரிபாலிப்பதும், அரசியற் கோட்பாட்டிலும் நடைமுறையிலும் முக்கியத்துவம் பெறுகின்றன. குலபாஉற்றாசிதூன்கள் காலத்தில் இப்பணி செவ்வனே நடைபெற்றதை வரலாறு காண்பிக்கின்றது.

ஸகீபா பனி ஸாதாவில் அவ்ஸ், கஸ்ரஜ் கோத்திரப் பிரமுகர்களும் குறைசிக் கோத்திரப் பிரமுகர்கள் சிலரும் மேற்கொண்ட நீண்ட கலந்துரையாடலின் பின் முதலாம் கலீபாவை ஏகமனதாகத் தெரிவு செய்தார்கள். பொதுமக்கள் "பைஅத்" செய்து தம் சம்மதத்தைப் பிரகடனப்படுத்தியதன் பின் அத்தெரிவு ஸ்திரமாகியது.

முதலாம் கலீபா மூத்த ஸஹாபாக்களுடன் தனிப்பட்ட முறையில் கலந்துரையாடி அவர்களின் விருப்பத்தை அறிந்தபின் எழுத்து வடிவிலான பிரகடனத்தின் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் கலீபாவை நியமித்தார்கள். மக்கள் "பைஅத்" செய்து தம் சம்மதத்தை வழங்கிய பின்பே அந்நியமனம் அங்கீகாரம் பெற்றது.

இரண்டாம் கலீபா இஸ்லாமியக் குடியரசின் முதன்மை பெற்ற அறுவரை நியமித்து அவர்களுள் ஒருவரை அவர்களே கலீபாவாக தெரிவு செய்யுமாறு அறிவுறுத்தியதற் கிணங்க ஒருவர் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு மக்கள் பைஅத் செய்த பின்பே மூன்றாம் கலீபாவின் தெரிவு உத்தியோகபூர்வமாகியது.

அசாதாரண சூழலில் சஹாபாப் பிரமுகர்கள் மஸ்ஜிதுல் நபவியில் கூடிக் கலந்துரையாடி நாலாம் கலீபாவைத் தெரிவு செய்தனர். பொதுமக்கள் தம் சம்மதத்தைத் தெரிவித்து அவருக்கு பைஅத் செய்தபின்பே அத்தெரிவு அங்கீகாரம் பெற்றது.

இரண்டாம் கலீபா உமர் கத்தாப் (றழி) அவர்களின் மகன் அப்துல்லாஹ் இப்னு உமரை அடுத்த கலிபாவாக நியமிக்குமாறு ஸஹாபாப் பிரமுகர்கள் சிலர் விடுத்த கோரிக்கைகளை உமர் (றழி) நிராகரித்தார்கள். அதுபோலவே அலி (றழி) அவர்களிடம் அவரது மகன் ஹஸன் (றழி) அவர்களை அடுத்த கலீபாவாக நியமிக்குமாறு விடுத்த கோரிக்கையை அலி (றழி) அவர்களும் நிராகரித்தார்கள்.

இந்நிகழ்வுகள் கலீபாக்கள் தகைமை பெற்ற மக்கள் குழுவினரால் தெரிவு செய்யப்பட்டு பொதுமக்களின் சம்மதத்தால் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதையும், வாரிசுரிமைக்கு இஸ்லாமிய கிலாபத் கோட்பாட்டில் இடமில்லை என்பதையுமே காண்பிக்கின்றன.

மேற்குறித்த முதல் நான்கு கலீபாக்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டாலும் தெரிவு செய்யும் வழிமுறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால சூழல் மாற்றங்களுக்கு ஏற்ப வித்தியாசப்பட்டுள்ளமை நோக்கத்தக்கதாகும். இவை இறைமைக் கோட்பாடு மாறாதபோதும் கலிபாத் தெரிவு முறைகள் சமூக வளர்ச்சிக்கு ஏற்ப மாறுபடலாம் என்பதைக் காண்பிக்கின்றன.

உமைய அப்பாசிய கோத்திர ஆட்சி ஏற்பட்டதும் மக்கள் சம்மதம் பெற்ற தெரிவு முறையைப் புறந்தள்ளி வாரிசுரிமை வழிமுறை முதன்மை பெற்றது. அதனால் கி. பி. 1924 இல் கிலாபத் ஒழிக்கப்படும் வரை அரச குடும்பத்துக்குள் மட்டுப்படுத்தப்பட்ட வாரிசுரிமை வழிமுறை நீடித்திருந்தது.

அப்பாசிய ஆட்சியில் அறிவியல், அழகியல், விஞ்ஞான தொழில்நுட்பவியல் என்பன வளர்ச்சி கண்டபோதும் அரசியல் விஞ்ஞானக் கலை குறிப்பிடத்தக்களவேனும் வளர்ச்சி காணவில்லை. அத்துறை பற்றிய கலந்துரையாடல்களோ ஆய்வுகளோ மேற்கொள்ளப்படவும் இல்லை. சில தனிநபர்கள் மன்னராட்சிக்கு குந்தகம் ஏற்படும் சூழலை உருவாக்காது அரசியல் நிர்வாகத்தின் சில அம்சங்களைச் சுட்டிக்காட்டி சில ஆக்கங்களைத் தந்துள்ளனர். எனினும் மன்னர்களின் நலனைப் பாதிக்கக்கூடிய தெரிவு முறை பற்றியோ அதிகாரப் பரவலாக்கல் பற்றியோ எதுவும் எழுதப்படவில்லை. அதற்கான காரணம் அத்துறை சார்ந்த தகுதியான அறிஞர்கள் தோன்றாமை என்பதைவிட மன்னராட்சியின் கெடுபிடிகள் அதற்கு இடம் அளிக்கவில்லை என்பதாகும்.

இஸ்லாமிய இராச்சிய வியாபகத்துக்கு ஏற்ப அதிகாரப் பரவலாக்கலும் நிர்வாக சீர்திருத்தமும் ஏற்படாததால் சிற்றரசுகள் பல தோன்றி ஆட்சி புரிந்ததை வரலாறு காண்பிக்கிறது. இஸ்லாமிய அரசியற் கோட்பாட்டின்படி ஒரு நேரத்தில் ஒருவரே ஒரு நாட்டிற்கு தலைவராக இருக்க முடியும். இச்சிந்தனைக்கு முரணாக சம காலத்தில் அரசியல் அதிகாரமுடைய ஒன்றுக்கு மேற்பட்ட தலைவர்கள் இருந்துள்ளனர். இது இஸ்லாமிய அரசியற் கோட்பாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பாட்டையும் குழறுபடிகளையும் தோற்றுவித்துள்ளது. கிலாபத் ஒழிக்கப்படும் வரை இந்நிலை நீடித்திருந்தது. கிலாபத் கோட்பாடு கால சூழலுக்கு ஏற்ப வளர்ச்சி கண்டிருந்தால் இச்சிக்கலில் இருந்து விடுபடுவதற்கு வழி பிறந்திருக்க முடியும். கிலாபத்தில் அதிகாரப் பரவலாக்கல் இடம் பெறாததால் சிற்றரசுகளாகவோ அதிகாரம் உள்ள பெருங்கோத்திரத் தலைவர்களாகவோ இருந்தவர்களைப் பங்கு கொள்ள வைத்து இஸ்லாமியப் பொதுநலவாயம் போன்ற ஒன்றையேனும் தோற்றுவிக்கவும் முடியவில்லை.

இஸ்லாமிய அரசியற் கோட்பாடு வளர்ச்சியுறாமையின் காரணமாகவே முஸ்லிம் நாடுகளில் தேசியவாத, சோஷலிஸ ஜனநாயக கோட்பாடுகள் புகுந்துள்ளன. முஸ்லிம்கள் விரும்பியோ விரும்பாமலோ இஸ்லாத்துக்கு வெளியேயுள்ள அரசியற் கோட்பாடுகளையும் கலாசார விழுமியங்களையும் முஸ்லிம்கள் உள்வாங்கியுள்ளனர் என்பதைக் கடந்த கால முஸ்லிம்களின் வரலாறு காண்பிக்கிறது.

கிலாபத்தின் வீழ்ச்சிக்கு வழிகோலிய வரலாற்றுப் பின்னணி எனும் தலைப்பில் "இஸ்லாமிய சிந்தனை" எனும் சஞ்சிகையில் கி. பி. 2008-2009 க்கு இடைப்பட்ட காலப் பகுதியில் வெளிவந்த எனது தொடர் கட்டுரைகள், சிற்சில திருத்தங்களுடன் இந்நூலில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன.

கிலாபத் வீழ்ச்சி இடம்பெற்ற உதுமானியத் துருக்கியர் ஆட்சி பற்றிய ஓர் அறிமுகமும், இஸ்லாமிய கிலாபத் கோட்பாட்டின் கடந்தகால வரலாறு பற்றிய விமர்சன ரீதியான ஒரு வரலாற்றுத் தகவலும், ஐந்தாம் அத்தியாயத்தில் இணைத்தக் கொள்ளப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய நாகரிகத்தைப் பயிலும் மாணவர்களின் பாடத்திட்டத்தில் "கிலாபத்தின் வீழ்ச்சி" ஓர் அலகாக சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பதால் அப்பாடத்தைப் பயிலும் மாணவர்க்கு இந்நூல் பயனுடையதாக அமையும் என்று கருதுகின்றேன்.

முஸ்லிம் சமூகம் கடந்த காலத்தில் எதிர்கொண்ட சவால்களை இனங்கண்டு தனது எதிர்கால சுபீட்ச வாழ்வுக்கு வழியமைக்க இந்நூலில் பரிமாறப்பட்டுள்ள சில தகவல்கள் உதவக்கூடும் என்றும் கருதுகின்றேன்.

இந்நூலின் ஆக்கத்துக்கும் அதன் வெளியீட்டிற்கும் பல்கலைக்கழகத்தில் என்னிடம் பயின்ற மாணவர்கள் உறுதுணையாக இருந்தள்ளனர். அவர்களை நினைவு கூர்கின்றேன். அத்துடன் பல சிரமங்களுக்கு மத்தியில் கணினிமயப்படுத்தித் தந்த சகோதரி ஏ. என். ஹிதாயா அவர்களுக்கும், அட்டைப் படத்தை வடிவமைத்த நிகவரடியைச் சேர்ந்த சகோதரர் கே. எம். யாசிர் அவர்களுக்கும் இதனை அச்சேற்றி உதவிய "அல்பா பிரின்டஸ் இன்டஸ்ரிஸ்" அச்சகத்தாருக்கும் எனது ஆழ்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே.

எம். ஐ. எம். அமீன்,
F 64/ 1, ஹிஜ்ராகம,
ஹெம்மாதகம,
2020.05.30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் I

## உதுமானியத் துருக்கியர் ஆட்சி தோற்றமும் வளர்ச்சியும்

மங்கோலியப் படை எடுப்பால் வீழ்ச்சியடைந்த செல்ஜூகியர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த அனடோலியா பிரதேசத்தில் துருக்கிய இன அடிமைக் கோத்திரங்கள் பல குடியேறின. அவை தாம் வாழும் பகுதியில் தத்தம் ஆதிக்கத்தை நிலை நாட்டிக் கொண்டன. அவை ஒவ்வொன்றும் தமக்குத் தலைமை தாங்கிய துருக்கிய வீரனின் ஆளுமைக்கு ஏற்பவே வளர்ச்சி கண்டது.

அனடோலியாவின் பைஸாந்திய எல்லைப் பகுதியில் குடியேறி இருந்த உதுமான் என்பவரின் தலைமையில் இயங்கிய சிற்றரசு நாளடைவில் உதுமானியப் பேரரசு என்றழைக்கப்பட்ட உலக வல்லரசாக வளர்ச்சி கண்டது.

அயலில் ஆட்சி செய்த பைஸாந்தியப் பேரரசின் பலவீனத்தை தனக்கு சாதகமாக உதுமான் பயன்படுத்தி படிப்படியாக பைஸாந்திய நிலப் பிரதேசத்தின் சில பகுதிகளைக் கைப்பறிக் கொண்டான் மங்கோலியப் படை எடுப்பால் சிதறிப் போயிருந்த முஸ்லிம் வீரர்கள் அனடோலியாவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து உதுமானின் கையைப் பலப்படுத்தினர். இதனால் பைஸாந்திய அரசை எதிர்ப்பதற்குத் தேவைப்படும் மனித வளத்தை உதுமான் இலகுவாகப் பெற்றுக்கொண்டார்.

கி. பி. 1299 அளவில் உதுமான் அவரது மகன் ஒர்குன் என்பவர்களால் தோற்றுவிக்கப்பட்ட இச்சிற்றரசு தன்னைப் படிப்படியாக வளர்த்துக் கொண்டது. ஏனைய துருக்கிய இன சிற்றரசுகளின் கூட்டுமொத்த நிலப் பரப்பை விட அதிகமான நிலப்பரப்பை அது கொண்டிருந்தது. கி. பி. 1326 இல் உதுமான் இறக்கின்ற போது புர்ஸா எனும் நகரைக் கைப்பற்றி தலைநகராக்கியிருந்தனர்.

இது காலவரை நாடோடி கோத்திரங்களின் வழி முறைகளைப் பின்பற்றி போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வெற்றி கண்டிருந்தாலும் கோட்டைகளால் பாதுகாக்கப்பட்டிருந்த நகர்களைக் கைப்பற்றுவதற்கு ஒர்குன் புதிய உத்திகளைக் கையாண்டார். இதனால் கி. பி. 1333 இல் பைஸாந்திய பேரரசின் எஞ்சியுள்ள கோட்டைகளைக் காப்பாற்றிக் கொள்ளும் நோக்கில் பைஸாந்தியர் ஒர்குனுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடாத்தினர்.

ஒர்குன் கி. பி. 1350 இல் டேர்டன் நீரிணையைக் கடந்து ஐரோப்பாவில் காற்பதித்தார். தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்ளும் நோக்கில் துருக்கிய நாடோடிக் குடும்பங்களை அங்கு குடியேற்றினார்.

இவ்வாறான வெற்றியை அடைவதற்கு பல்வேறு இன, கோத்திரக் குழுக்களிடையே சமய உணர்வை ஊட்டி உற்சாகமளித்தார். கைப்பற்றப்பட்ட பிரதேசங்களிலும் இஸ்லாம் வழங்கிய போராட்ட ஒழுங்கு விதிகளை கண்டிப்பாக பின்பற்றச் செய்தார். இதனால் அப்பிரதேசங்களில் வாழ்ந்த கிறித்தவக் குடிமக்கள் தமது ஆட்சியாளர்களிடம் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் கொள்ளமுடியாதுபோன பல நலன்கள் இம்முஸ்லிம் ஆட்சியாளர்களிடம் இருந்து பெற்றனர். இதனால் குடிமக்களின் ஆதரவுடன் உதுமானிய ஆட்சி வளர்ச்சி கண்டது.

கி. பி. 1380-1402 வரை ஆட்சி செய்த முதலாம் பாயதீத் 1402 இல் மங்கோலிய இனத்து முஸ்லிமான தைமூர் மேற்கொண்ட படையெடுப்பின் போது கைதுசெய்யப்பட்டு 1402 இல் கொலை செய்யப்பட்டார். அதனால் அவரது பிள்ளைகளான ஈசா, மூசா, சுலைமான், முஹம்மத் எனும் நால்வரும் அரசுரிமை கோரிப் போராட்டம் நடாத்தியதால் பதினொரு வருடங்கள் உள்நாட்டு கலவரம் நீடித்தது. ஈற்றில் இளையவர் முஹம்மத் ஆட்சியைக் கைப்பற்றினார்.

முஹம்மத்தின் காலத்தில் எல்லைப் புறங்களைப் பாதுகாப்பது இஸ்லாமிய கடமை என்ற உணர்வால் உந்தப்பட்டதால் கோஷ்டிகளாக பிரிந்திருந்தவர்கள் அனைவரும் ஓரணியாக ஒன்று சேர்ந்தனர்.

உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் பயனளிக்கும் “அகி” என்றழைக்கப்பட்ட சங்கத்தை நாடளாவிய ரீதியில் அமைத்துப் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்த முயற்சித்தார். மன்னன் ஓர்குன் தனது ஆட்சிக் காலத்தின்போது தனது நேரடிப் பரிபாலனத்தில் கீழ் பல இன மதக் கோத்திரக் குழுக்களில் இருந்து வீரர்களைத் தெரிவு செய்து “ஜனீசாரி” என்ற ஒரு புதியப்படை பிரிவை ஏற்படுத்தியருந்தார். முஹம்மத் அதனையும் உயிரூட்டினார்.

இப்படையில் கிரேக்க, சேர்பிய, அல்பேனிய, பல்கேரிய இனத்து வீரர்கள் இணைந்து இருந்தனர். பல்வேறு கலாசாரப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் ஓரணியாக ஒன்றுசேர்ந்து செயற்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டுக் கலவரத்தை வெற்றி கொண்டு கி. பி. 1410 இல் நிலையானதோர் ஆட்சியை அமைத்த முஹம்மத் 1421 இல் இறந்தார். அவரது மகன் இரண்டாம் முராத் (கி. பி. 1421-1451) ஆட்சிபீடம் ஏறினார். அவராலும் பைஸாந்திய பேரரசின் தலைநகரான கொன்ஸ்தாந்துநோபிலைக் கைப்பற்ற முடியவில்லை. எனினும் அதனைச் சூழ உள்ள பிரதேசங்களை தன் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார். அவரை அடுத்து கி. பி. 1451 இல் அவரது மகன் இரண்டாம் முஹம்மத் ஆட்சிபீடத்தில் அமர்ந்தார். பத்தொன்பது வயதை உடையவராக அவர் இருந்தார். நாட்டில் பேசுகின்ற பிரதான மொழிகள் ஆறில் அவர் நான்கு தேர்ச்சிப் பெற்றிருந்தார். இருந்தபோதும் பலமொழி, பல இன, பல பிரதேச வேறுபாடுகளையும் பன்முகப்பட்ட கலாசார விழுமியங்களையும் கொண்டிருந்த இவ்விராச்சியத்தைப் பரிபாலிக்கும் அனுபவம் அவருக்கு இல்லை என்று அவரது தந்தையின்கீழ் பணிபுரிந்த மூத்த நிருவாகிகள் கருதினர். அதனால் தன் ஆட்சியை அவர்கள் அபகரிக்க கூடும் என்ற சந்தேகம் ஆரம்பம் முதலே இரண்டாம் முஹம்மதிடம் இருந்தது.

கொன்ஸ்தாந்துநோபில் முன் எப்போதும் இல்லாதவாறு பலவீனமாக இருந்தபோதும் உதுமானிய அரசின் வர்த்தக, இராணுவ நடவடிக்கைகளுக்கு குறுக்கே நிற்கும் ஆற்றலை அது இன்னும் இழந்திருக்கவில்லை. இதுவும் தனது பரிபாலனத்துக்கு ஒரு சவாலே என்று இரண்டாம் முஹம்மத் சிந்தித்தார். தனது அரசின் எதிர்கால நலனைப் பேண இத்தடையை ஒழித்துவிடுவது அவசியம் என்று கருதினார்.

இச்சவால்களுக்கு மத்தியிலும் சமயரீதியான ஒரு நன்மாராயச் செய்தி ஒன்று தனக்கு அழைப்பு விடுப்பதாக அவர் உணர்ந்தார். முஸ்லிம்கள் கொன்ஸ்தந்து நோபிலைக் கைப்பற்றுவார்கள் என்ற ஒரு நற்செய்தியை நபிகளார் (ஸல்) அவர்கள் தான் உயிர்வாழும் காலத்தில் கூறியிருந்தார்கள். அவரது வாக்குப் பலிக்கும் என்ற நம்பிக்கை முஸ்லிம்களிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. இரண்டாம் முஹம்மத் நபிகளாரின் எதிர்வுகூறல் நிச்சயம். என்றோ ஒரு நாள் அது நிறைவேறும் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தார். ஆதலால் கொன்ஸ்தாந்து நோபிலைக் கைப்பற்றும் முயற்சியில் ஆர்வம் காட்டினார்.

நபிகளார் (ஸல்) அவர்களின் வாக்கு ஒரு பொழுதும் பொய்க்காது என்று முஸ்லிம்கள் நம்பியதால் ஹஸ ரத் முஆவியாவின் காலத்தில் இருந்து இடைக்கிடை கொன்ஸ்தாந்துநோபிலின் மீது படை எடுத்தபோதும் வெற்றியடைய முடியவில்லை. அதனால் இரண்டாம் முஹம்மத் அந்நகரை வெற்றிகொள்ள நன்கு திட்டமிட்டு போர் நடவடிக்கைகளை முன் எடுத்தார்.

கொன்ஸ்தாந்துநோபில் நகரின் மூன்று புறமும் நீரினால் சூழப்பட்டு இருந்தது. ஒரு புறம் மட்டுமே தரைத் தொடர்பைக் கொண்டிருந்தது. தரையூடாக வரும் படை எடுப்பில் இருந்து பாதுகாப்புப் பெற பன்னிரண்டு மீற்றர் உயரமும் ஆறு மீற்றர் கணமும் கொண்ட இரு சுவர்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஏனைய பகுதிக்கு கடற்படைப் பாதுகாப்பு இருந்தது.

ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரத்தில் இருந்து இரு நூற்றைம்பது கிலோ கிராம் பாரமுடைய குண்டை எறிவதற்காக எட்டு மீற்றர் நீளமானதும் இடத்துக்கிடம் கொண்டு செல்லக் கூடியதுமான ஒரு பீரங்கியை ஹங்கேரிய பொறியியலாளர் ஒருவரின் துணையுடன் இரண்டாம் முஹம்மத் நிர்மாணித்தார். ஒரு லட்சம் போர் வீரர்களையும் திரட்டினார். கொன்ஸ்தந்து நோபிலுக்கு இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் எழுபது போர்க் கப்பல்களை தயார் செய்து தரைமூலமாக அந்நகரின் கடல் எல்லையுள் கொண்டு சென்றார். இவ்வாறான திட்டமிட்ட நடவடிக்கை காரணமாக கி. பி. 1453 மே 29 ஆம் திகதி இரண்டாம் முஹம்மத் அந்நகரை தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்தார். அது முதல் இரண்டாம் முஹம்மத் "பாதிஹ்" (வெற்றியாளர்) என்றே அழைக்கப்படுகிறார். நபிகளார் (ஸல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் எதிர்வு கூறலை நனவாக்கிய பாதிஹ் முஸ்லிம் உலகின் கண்ணியத்திற்குப் பாத்திரமானார். மங்கோலியப்படை எடுப்புடன் இழந்த சுய கௌரவத்தை முஸ்லிம் உலகு மீண்டும் நிலை நிறுத்திக் கொண்டது.

இவ்வெற்றியைத் தொடர்ந்து பாதிஹ் சேர்பியா, பொஸ்னியா, அல்பேனியா மோல்டோவ் பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொண்டார். இத்தாலியைக் கைப்பற்றுவதற்கு திட்டமிட்டார். ஆயினும் கி. பி. 1481 இல் அவர் இறந்ததால் அத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியவில்லை. அவரது இராணுவ நடவடிக்கைகளை அடுத்துப் பதவியேற்ற இரண்டாம் பாயதீத், முதலாம் ஸாலிம் என்பவர்கள் தொடர்ந்து மேற்கொண்டனர். கி. பி. 1512-1520 வரை ஆட்சி புரிந்த ஸாலிமின் காலத்தில் பாரசீகத்தின் சபாவியரின் ஆட்சிப் பிரதேசங்கள் வெற்றி கொள்ளப்பட்டன. சிரியா, எகிப்து அறபு தீபகற்பம் என்பனவும் வெற்றி கொள்ளப்பட்டதால், மக்கா, மதீனா, ஜெரூசலம் எனும் புனித தலங்களின் பரிபாலனம் உதுமானியத் துருக்கியர் வசமாகியது. மங்கோலியர் கி. பி. 1258 இல் பக்தாதைக் கைப்பற்றியதால் கிலாபத்தின் தலைமைப்பீடம் எகிப்திற்கு மாற்றப்பட்டிருந்தது. எகிப்து துருக்கியர் வசமானதால் முதலாம் ஸாலிம் முஸ்லிம் உலகின் கலீபாவாக கி. பி. 1517 முதல் அங்கீகரிக்கப்பட்டார். அதனால் தன்பரிபாலனத்துக்குட்படாத வடஆபிரிக்கா முதல் இந்தோனேசியா வரையிலான பிரதேசங்களில் வாழ்ந்த முஸ்லிம்களின் நலனிலும் அவர் அக்கறை செலுத்தினார்.

துருக்கிய ஆட்சியாளர்கள் தாம் கைப்பற்றிய பிரதேசங்களில் வாழ்ந்த முஸ்லிம் அல்லாத பிரசைகளிடம் இஸ்லாத்தைத் திணிக்க முயற்சிக்கவில்லை. மாறாக அவர்களுக்கு சமய வழிபாட்டுச் சுதந்திரத்தை வழங்கி அவர்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்புத்தரவாதத்தை அளித்தார்கள். மட்டுப்படுத்தப்பட்ட எல்லையுள் தம்மைத் தாமே பரிபாலிக்கும் சுதந்திரத்தைக் கொண்ட "மில்லத்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றழைக்கப்பட்ட நிர்வாக அமைப்பை அவர்களிடையே அறிமுகம் செய்தார்கள். அரசுடன் தொடர்புற்றுக் கருமம் ஆற்றக்கூடிய தலைவர் ஒருவரைத் தம்மில் இருந்து தாமே தெரிவுசெய்யவும் அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது.

சுல்தான் சுலைமானின் (1520 - 1566) நாற்பத்தாறு வருட ஆட்சிக்காலம் உதுமானிய துருக்கியர் ஆட்சியின் பொற்காலமாகக் கருதப்படுகிறது. இக்காலப்பகுதியில் பால்கன் குடாநாடுகள், அறபு நாடுகள், வடஆபிரிக்க காகேசியா மலைத்தொடரின் ஒரு பகுதி, பாரசிகம் என்பன துருக்கியரின் ஆட்சிக்குட்பட்டிருந்தன. இவர் தனது அரசியல், இராணுவ, பொருளாதார செல்வாக்கின் துணை கொண்டு நாட்டின் சட்டத்துறையை சீர்திருத்தியமைத்தார். பிரதம முப்தி அபூஸஉத் எபந்தி என்பவரின் வழிகாட்டலில் குர்ஆன், சுன்னா மூலாதாரங்களின் துணையுடன் இச்சட்டத் தொகுப்பு தயாரிக்கப்பட்டது. நடைமுறையில் இருந்த இஸ்லாத்துக்கு இயைபாகாத விதிகள் நீக்கப்பட்டன. இப்பணி காரணமாக இவர் சுலைமான் கானூனி என்றழைக்கப்பட்டார்.

சுல்தான் சுலைமான் கானூனிக்குப்பின் பதவி யேற்றவர்கள் தூரநோக்கும் திறனும் அற்றவர்களாக இருந்ததால் இதுகாலவரை முன்னெடுத்த வளரச்சிப் போக்கு தேக்கமடைந்தது. கி. பி. 1571 இல் சைபிரஸ் உடன் நடைபெற்ற யுத்தத்தில் தோல்வி கண்டதால் துருக்கிய வரலாறு வீழ்ச்சியை நோக்கி மெது மெதுவாக நகரலாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் II

## உதுமானியத் துருக்கியர்களின் வீழ்ச்சி

உதுமானிய கிலாபத்தின் வரலாற்றுக் காலத்தை

I. துரித வளர்ச்சிக் காலம்
II. நீண்ட தேக்க காலம்
III. வீழ்ச்சிக்காலம்

என மூன்றாக வகைப்படுத்தலாம். அதன் துரித வளர்ச்சிக் காலம் சுல்தான் சுலைமானின் மரணத்துடன் (கி. பி. 1566) முடிவடைந்து தேக்க காலம் ஆரம்பித்தது. கி. பி. 1699 இல் இடம்பெற்ற கர்போவிட்ஸ் உடன்படிக்கையுடன் வீழ்ச்சிக்காலம் ஆரம்பமாகியது எனலாம்.

இவ்வீழ்ச்சிக்கான காரணிகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

(அ) எழுச்சிக் காலத்தில் பெற்றுக்கொண்டது போன்ற தெளிவான வெற்றிகளைப் போர்க்களத்தில் பெற்றுக் கொள்ள முடியாது போனமை.

அதன் எழுச்சிக் காலத்தில் தனது எதிரிகளை மிஞ்சிய, முன்னேற்றமடைந்த தொழில்நுட்பத் திறன்படைத்த போர் ஆயுதங்களை உதுமானியத் துருக்கியர் தம்வசம் வைத்திருந்தனர். உதுமானியர் வீழ்ச்சிக்காலம் என்பது ஐரோப்பியரின் மறுமலர்ச்சிக்காலமாகும். நீண்ட இருண்ட காலத்தில் இருந்த ஐரோப்பா கண்விழித்து பொருளாதாரத் துறையிலும் போர் ஆயுத உற்பத்தியிலும் துருக்கியரை விடப் பன்மடங்கு முன்னேறியிருந்தது. அதன் இராணுவ பலத்தை நிகர்த்ததாக வேனும் துருக்கியின் இராணுவ பலத்தை ஆட்சியாளர்கள் வளர்த்துக் கொள்ளவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) உதுமான் தன் சிற்றரசை வளர்த்துக்கொள்ள முதற்கட்டத்திலே போர்த்திறன் படைத்த வீரர்களை இணைத்தும், சிற்றரசு சற்று வளர்ந்தபின் "ஜனீசரி" என்ற புதுப்படை ஒன்றைக் கட்டி எழுப்பியும் இராணுவத்தை நவீனமயப்படுத்தியது போல மிக விசாலமான நிலப்பரப்பை எதிர்கொள்ளத் தேவையான இராணுவ சீரமைப்பையோ நிர்வாக சீரமைப்பையோ மேற்கொள்ளாமை மற்றொரு காரணியாகும்.

இதன் விளைவாகவே சுல்தான் சுலைமானின் மரணத்துடன் இராச்சிய வியாபகம் தேக்கமடைந்தது. எனினும் இக்காலப் பகுதியில் ஐரோப்பிய வல்லரசு என்ற நிலையில் இருந்து உதுமானியத் துருக்கி கீழே விழவில்லை. முன்பெல்லாம் படை எடுப்புகளின் போது "கனிமாப்" பொருட்கள் கிடைத்தன. அது முக்கியதொரு வருவாயாக இருந்தது. தேக்க காலத்தில் இந்நிலை மாறியது. வருவாய் பெறுவதற்கான புது வழிமுறைகளைக் காணவேண்டியிருந்தது. தகுதியற்ற தலைமைத்துவத்தால் அது சாத்தியம் ஆகவில்லை.

(இ) சுலைமானின் பின் பதவியேற்ற இரண்டாம் ஸாலிமின் காலத்திற்கு பின்வந்தோர் பலர் போர்க்களத்தில் தாம் காலம் கழிப்பதை விட மாளிகையில் சுகம் அனுபவிக்கவே அதிக ஆர்வம் காட்டினர். பரந்த சாம்ராஜ்யத்தின் பரிபாலனத்திலேனும் நேரடிப் பங்குகொள்ள முன்வரவில்லை. இரண்டாம் சாலிமுக்கு முற்பட்ட காலங்களில் படைகளுக்கு தாமே நேரடியாகத் தலைமை தாங்கியும் நிர்வாகத்தில் நேரடியாகப் பங்கு கொண்டும் வந்த மரபை விடுத்து தமக்குப் பதிலாக பிறிதொருவரைத் தளபதியாக்கி அனுப்பும் போக்கு ஆரம்பித்தது.

(ஈ) கி. பி. 1600 வரை சுல்தான் இறக்க அவரது வாரிசுகள் தம்மிடையே போராடியே ஆட்சிபீடத்தைக் கைப்பறினர். அதனால் திறமையான ஒருவரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவியில் அமர்ந்தார். எனினும் கி. பி. 1603 இல் பதவியேற்ற சுல்தான் முதலாம் அஹமத் அரச குமாரர்கள் அரண்மனையின் அந்தப்புறத்தில் சுகம் அனுபவிக்க வழி வகுத்துக் கொடுத்தார். ஆட்சியாளர் இறந்ததும் நிர்வாகிகள் அந்தப்புறத்தில் வாழ்ந்த மூத்த வாரிசை அரசபீடம் ஏற்றினர். பரந்த ஒரு சாம்ராஜ்யத்தைப் பரிபாலிப்பதற்குத் தேவையான எந்த ஒரு அற்ப பயிற்சியையும் பெறும் வாய்ப்பு அவர்களுக்கு இருக்கவில்லை. இத்தகைய ஒருவரால் பரிபாலனக் கடமைகளை சரியாகச் செய்ய முடியவில்லை. அதனால் நிர்வாக அதிகாரங்கள் முழுமையாகவே அமைச்சர்கள் வசமாயின. இதனால் கி.பி. 1600-1700 க்குமிடையிலான காலப்பகுதியில் திறமைமிக்க எந்த ஒரு சுல்தானையும் உதுமானிய துருக்கிய அரச குடும்பம் தோற்றுவிக்க முடியவில்லை.

(உ) துருக்கியர் கி. பி. 1453 இல் கொன்ஸ்தந்துநோப்பிலைக் கைப்பற்றியதால் ஐரோப்பியரின் கீழைத்தேய நாடுகளுக்கான தரை மார்க்கப் பாதை தடைபட்டது. அதனால் அவர்கள் அந்நாடுகளுக்கு செல்லக்கூடிய கடல்மார்க்கப்பாதைகளைத் தேடினர். இம்முயற்சியில் அவர்கள் வெற்றி கண்டு புதிய உலகம் என்று வர்ணிக்கப்பட்ட அமெரிக்காவையும், ஆசியாக் கண்ட நாடுகளையும் சென்றடைந்தனர். அங்கு காலனித்துவ நாடுகளை அவர்கள் அமைத்துக் கொண்டதால் இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின், ஒல்லாந்து, போர்த்துகல் முதலாம் நாடுகள் பெருஞ் செல்வந்த நாடுகளாயின. இதே காலப்பகுதியில் துருக்கியின் இராணுவ நடவடிக்கைகள் பயன்தராததால் இதுகாலவரை நாட்டின் முக்கிய வருவாய் வழியாக இருந்த “கனிமா” முடங்கியது. அதேவேளை வளர்ந்து வரும் ஐரோப்பிய நாடுகளின் செல்வ நிலைக்கு ஈடுசெய்தற்கான மாற்றுவழியையும் காணாததால் பொருளாதார ரீதியாக நலிவுற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஊ) ஸ்பெயினின் முஸ்லிம் பல்கலைக்கழகங்களில் படித்த ஐரோப்பிய கிறித்துவ மாணவர்கள் தத்தம் நாடுகளில் கல்வி நிலையங்களை தோற்றுவித்ததுடன் முஸ்லிம்களின் விஞ்ஞானத் தொழில்நுட்ப அறிவியல் பொக்கிசங்கள் உள்ளடங்கிய நூல்களை அறபுமொழியில் இருந்து தத்தம் மொழிக்கு மொழி பெயர்த்தனர். ஐரோப்பாவின் மறுமலர்ச்சிக் காலத்தில் அறபுகளிடம் இருந்து பெற்ற இவ்விஞ்ஞான தொழில்நுட்ப அறிவை மேலும் விருத்தி செய்து கொண்டனர். இவ்விஞ்ஞான தொழில்நுட்ப அறிவினதும், பொருளாதார வளத்தினதும் துணைகொண்டு நவீன போராயுதங்களையும் போர்க் கப்பல்களையும் உற்பத்தி செய்து ஐரோப்பாவுக்கு தலையிடி கொடுத்த துருக்கிக்கு எதிராக ஓரணியாக செயற்படலாயினர். திறமையற்ற துருக்கிய ஆட்சி யாளர்களும், சுயநலமிகளான நிருவாகிகளும் தம் எதிரிகளின் இவ்வளர்ச்சியைக் கண்டு கொள்ள வில்லை.

இப்பின்னணியில் துருக்கி அவுஸ்திரியா மீது கி. பி. 1683 இல் போர் தொடுத்தது. பதினான்கு வருடம் நீடித்த இந்த யுத்தத்தில் வெற்றி காண முடியாது துருக்கி தோல்வியைத் தழுவியது. இதன் விளைவாக கி. பி. 1699 ஜனவரி மாதம் 26 ஆம் திகதி கர்லோவிட்ஸ் உடன்படிக்கைக்குக் கைஒப்பம் இடவேண்டியதாகியது. அதன் விளைவாக துருக்கி ஹங்கேரிப் பிரதேசத்தை இழந்தது. இவ்வுடன்படிக்கை மூலம் போலந்தும் வெனிஸ் நகரமும் கூட துருக்கியின் சில நிலப் பரப்புகளை பெற்றுக்கொண்டன.

தான் இழந்த சில பிரதேசங்களை பெற்றுக்கொள்ளும் நோக்கில் கி. பி. 1710 இல் துருக்கி அவுஸ்திரியாவின் மீது போர் தொடுத்து தோல்வி கண்டது. அதனால் பஸரோவிட்ஸ் (Passorowitz) உடன்படிக்கையில் கையொப்ப மிட்டு கி. பி. 1718 இல் சேர்பியாப் பிரதேசத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையளித்தது. இதன்பின் சிலகாலம் அமைதி நிலவிய போதும் 1768-1774 காலப்பகுதியில் ருசியாவுடன் ஏற்பட்ட போரின் விளைவாக கிரீமியா, கரகேசியா மலைத்தொடரின் வடபகுதி என்பவற்றை இழந்ததுடன் துருக்கியில் வாழ்கின்ற கிறித்தவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதாகவும் வாக்களித்தது. இவ்வாறு பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் துருக்கி ஐரோப்பாவில் தனது ஆதிக்கத்துக்குட்பட்டிருந்த பல பிரதேசங்களை இழந்திருந்தது. இவற்றின் விளைவாக துருக்கி தனது பொருளாதார நலன்களை மட்டுமன்றி தனது பரிபாலனத்துக்குட்பட்ட கிறித்தவ சமூகத்தின் மீதான செல்வாக்கையும் இழக்கலாயிற்று.

முதலாம் ஸாலிம் பிரான்சியருக்கு விசேட சலுகைகளுடனான வர்த்தக வாய்ப்பை வழங்கும் உடன்படிக்கை ஒன்றுக்கு உடன்படவேண்டியேற்பட்டது. ஆரம்பத்தில் இரு தரப்பினருக்கும் இது பயன் உள்ளதாக இருந்த போதும் உதுமானியப் பேரரசு வீழ்ச்சியை நோக்கி நகரும்போது பிரான்சின் இராஜ தந்திர உதவியை நாடவேண்டியேற்பட்ட போது துருக்கி எல்லையுள் வாழும் பிரான்சிய குடிமக்களின் மீதான ஆட்சியுரிமையை பிரான்சுக்கு விட்டு கொடுக்க வேண்டியதாகியது. பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதி ஆகின்றபோது துருக்கியில் வாழ்கின்ற கத்தோலிக்க பிரசைகள் அனைவரையும் பிரான்சிய பிரசைகளாகக் கணித்து அவர்கள் மீதான ஆட்சியுரிமையை பிரான்சுக்கு வழங்க வேண்டியதாகியது. இதனால் துருக்கியில் வாழ்கின்ற கத்தோலிக்க பிரசைகள் விசேட சலுகைகளையும் பொருளாதார வாய்ப்புகளையும் பெற்றனர்.

இக்காலப்பகுதியில் துருக்கி ஐரோப்பாவின் நோயளியாக மாற்றம் பெற்றது. அது தனது வெளிநாட்டு வர்த்தக வாய்ப்பையும் முற்றாக இழந்தது. அவுஸ்திரியவினதும் ருஷியாவினதும் அச்சுறுத்தல்களை எதிர் கொள்வதற்கு பிரான்சின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணை தொடர்ந்து தேவைப்பட்டதால் துருக்கியின் மீதான தனது பிடியை பிரான்ஸ் மேலும் மேலும் இறுக்கியது. சுல்தான் அப்துல் மஜிதின் (கி. பி. 1839-1861) காலத்தில் நடைபெற்ற கிரிமிய யுத்தத்தால் நலிவுற்றிருந்த பொருளாதாரம் அவரது ஆடம்பர மாளிகை நிர்மாணம், ஆடம்பர வாழ்வு என்பதால் மேலும் பலவீனமாகியது. இதனால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தவிர்க்க வெளிநாடுகளில் இருந்து அதிக வட்டிக்குக் கடன் எடுத்ததால் நாட்டின் பொருளாதார நிலை மேலும் நலிவுற்றது.

## தன் ழீமாத்

உலக வல்லரசாகத் திகழ்ந்த துருக்கி தன் அந்தஸ்தை இழந்து வருவதை அவதானித்த துருக்கிய சுல்தான்கள் சிலர், அதன் மீள் எழுச்சியைக் கருத்திற் கொண்டு சமூக வாழ்வின் சகல துறைகளிலும் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று கருதினர். அதற்காக பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலம் முதல் மேற்கொண்ட சீர்திருத்த முயற்சிகளே "தன்ழீமாத்" என்றழைக்கப்படுகின்றன.

கி. பி. 1808-1839 வரை ஆட்சிபுரிந்த இரண்டாம் மஹ்மூத் இம்முயற்சியை ஆரம்பித்து வைத்தார். அதன் முதற்கட்டமாக இராணுவத்தை ஐரோப்பிய பாணியில் மறுசீரமைக்க நடவடிக்கை எடுத்தார். மாணவர்க்கு வழங்கும் பாடசாலைக் கல்வியையும் பிரான்ஸின் மாதிரியை முன்மாதிரியாகக் கொண்டு சீர்திருத்தினார். பாடசாலைகளில் பிரான்சிய மொழி கற்பிப்பதைக் கட்டாயமாக்கினார். உடைகளையும் ஐரோப்பிய மாதிரியில் அணிய ஊக்குவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்துப் பதவியேற்ற இரண்டாம் மஹ்முதின் மக்களான முதலாம் அப்துல் மஜித் (1839-1861) அப்துல் அஸிஸ் (1861-1876) ஆகிய இருவரும் தன்ழிமாத் எனப்பட்ட சீர்திருத்த முயற்சியை, துருக்கியின் அரச நிருவாகம், சமூக வாழ்வு எனும் எல்லாத் துறையையும் அளாவியதாக மேற்கொண்டனர். ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற தேசிய வாத சிந்தனை வழியிலான அரசுகளை முன்மாதிரியாக கொண்டே இச்சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றை அறிமுகப்படுத்தவும் வழிநடத்தவும் துறைசார்ந்த நிபுணர்களை ஐரோப்பிய நாடுகளில் இருந்து வரவழைத்தனர். பின்வரும் துறைகளில் இச்சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

I. தபால் துறை
II. வங்கித்துறை
III. வரிமறுசீரமைப்பு
IV. சனக்கணக்கெடுப்பு
V. தேசிய கீதம்
VI. கல்வி
VII. சட்டத்துறை

மேற்கத்தய சிந்தனைச் செல்வாக்கிற்கு ஏற்ப, சமய கலைகளைவிட சமய சார்பற்ற விஞ்ஞானக் கலைகளுக்கு ஊக்குவிப்பு வழங்கப்பட்டது. இதுகாலவரை சமய அறிவும் விஞ்ஞான அறிவும் ஒரே நிலையத்தில் வழங்கப்பட்டன. புதிதாக வழங்கப்பட்ட சீர்திருத்தத்தின் வழி சமய கல்வி, சமய சார்பற்ற கல்வி என்று கல்வித்துறை இரு கூறுகளாக்கப்பட்டு பின்னைய துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. விஞ்ஞானக் கலை சமூகப்பயன்பாடுடையதாகக் கணிக்கப்பட்டே அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

பிரான்ஸ் நாட்டு சட்டவியலின் அடிப்படையில் துருக்கியிலும் சட்டத்துறை மாற்றியமைக்கப்பட்டது. சுல்தான் சுலைமான் கானூனி அறிமுகப்படுத்தியிருந்த அரச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்துறை இதன்மூலம் மாற்றியமைக்கப்பட்டது. இதன் வழி அரச சட்டத்தின் அடிப்படை சரீஆவே என்ற நிலை ஒழிக்கப்பட்டு, சமூக வாழ்வில் சரீஆ புறக்கணிக்கப்பட்டது. வரலாற்றில் முதன்முறையாக தன் அரச நிர்வாகத்திற்கு சமய சார்பற்ற சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட முதல் முஸ்லிம் நாடு துருக்கியே எனலாம்.

இவற்றின் மூலம் துருக்கியிலும் தேசியவாத சிந்தனை வலுவடைந்தது. தேசிய வாத சிந்தனை, இனத்தையும் மொழியையும் அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி கண்டது. துருக்கியிலும் துருக்கி, அறபு, குர்தி ஆர்மினிய, யூத, சேர்பிய, பொஸ்னிய, கிரேக்க இனத்தவர்கள் வாழ்ந்தனர்.

இவர்கள் தேசியவாத சிந்தனையால் உந்தப்பட்டு சுயாட்சிகோரும் நிலை தோன்றியது. கி. பி. 1830 ஐரோப்பியக் கிறித்தவர்களின் துணையுடன் கிரேக்கர் சுதந்திரத்தைப் போராடிப் பெற்றனர். இதனைப் பின்பற்றி ஏனைய இனத்தவர்களும் சுதந்திரம் கோரினர். இதனால் துருக்கிய சாம்ராஜ்யம் சிதையும் நிலை தோற்றம் பெறலாயிற்று.

இச்சவாலை முறியடிப்பதற்காக இன, மத, வேறுபாடு களுக்கு அப்பால் நின்று "நாம் துருக்கியர்" என்ற சிந்தனையை வலுப்படுத்த ஆட்சியாளர்கள் முயற்சித்தனர். இதனால் துருக்கியில் வாழ்ந்த எல்லா இனத்தவர்களும் சமயத்தவர்களும் சமமான அந்தஸ்தில் கணிக்கப்படவேண்டியவராயினர். இருந்தபோதும் அனைவரும் நாம் துருக்கியர் என்ற சிந்தனைவழி சமத்துவத்தை நிலைநாட்ட முடியவில்லை. ஏற்கனவே கிறித்தவர்கள் விசேட சலுகைகளைப் பெற்று பொருளாதார ரீதியில் மற்றவர்களை முந்திக் கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் துருக்கியர் என்ற சிந்தனை எதிர்பார்த்த பலனைத் தரவில்லை. மாறாக சமூகங்களிடையே அமைதியின்மையையும் கிளர்ச்சியையும் தூண்டவே வழிகோலியது.

தன்ழீமாத் முயற்சிகள் எதிர்பார்த்த நலன்களை தரவில்லை. பொருளாதாரம் தொடர்ந்து வீழ்ச்சியை நோக்கி நகர்ந்தது. போல்கன் குடாநாட்டுப் பிரதேசத்தில் தேசிய வாத சிந்தனை வளர்ச்சியடைந்து துருக்கிக்கு அச்சுறுத்தலாக மாறியது. இதே வேளை தேசியவாத சிந்தனையில் கட்டி எழுப்பப்பட்டிருந்த ஐரோப்பிய நாடுகள், காலனித்துவ பொருளாதார முயற்சிகளால் மேலும் பொருளாதார ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் வளர்ச்சி கண்டன.

இவ்வளர்ச்சி தமக்கான ஓர் அச்சுறுத்தல் என்று இளம் துருக்கியர் என்று தம்மை அழைத்துக்கொண்ட படித்த வர்க்கத்தினர் கருதினர். தன்ழீமாதின் போது மேற்கொண்ட சீர்திருத்தங்கள் போதுமானவை அல்ல ஐரோப்பாவின் சமய சார்பற்ற சிந்தனை போக்கின் நடவடிக்கைகள் பரவலாக்கப்படவேண்டும் என்றும் சுல்தானின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் என்றும் இளம் துருக்கிய அமைப்பு குரல் கொடுத்தது. இவர்கள் சுல்தான் அப்துல் அஸீசை பதவியில் இருந்து கி. பி. 1876 இல் நீக்கி ஐந்தாம் முராத் என்பரைப் பதவியில் அமர்த்தினர். அவரின் செயற்பாட்டிலும் திருப்திகாணாத அவ்வமைப்பினர் அவரைப் பதவியின் நீக்கி கி. பி. 1876 இலேயே இரண்டாம் அப்துல் ஹமீதைப் பதவியில் அமர்த்தினர்.

உதுமானியத் துருக்கியர்களின் வீழ்ச்சிக் காலத்தில் தோன்றிய ஆளுமை மிக்க ஓராட்சியாளராக இரண்டாம் அப்துல் ஹமீத் கணிக்கப்படுகின்றார். இவர் நன்கு கற்ற, அரசியல் நடவடிக்கைகளில் பங்குகொண்ட, பல்துறைத் திறமைகளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுள் வளர்த்துக்கொண்ட, ஒருவர் ஆவார். ஒரு சிறந்த கவிஞன், மல்யுத்த வீரன், ஐரோப்பிய நாகரிகத்துடன் தொடர்பு கொண்ட ஆடம்பரமற்ற வாழ்க்கையை மேற்கொண்ட ஒருவர். நாட்டின் பொருளாதார நிலைகளையும் நாடு எதிர்கொண்ட சவால்களையும் நன்கு அறிந்திருந்தார். துருக்கி மீது ருஷ்யா தொடுத்திருந்த 1877-78 கால போருக்கு பதவியேற்ற சில மாதங்களில் முகங்கொடுத்தார். இப்போரில் தனது பல பிரதேசங்களை இழக்க வேண்டியதாகியது. இப்போரின் முடிவில் ரோமேனியா, சேர்பியா, மொன்டறிக்கோ முதலான மாகாணங்களை துருக்கி இழந்தது. போல்கன் குடா நாட்டின் எஞ்சியிருந்த பிரதேசங்களையும் படிப்படியாக கைநழுவ வேண்டியதாகியது. ருஷ்யாவின் மேலாதிக்கத்தைத் தன் சொந்த நலன்கருதி இங்கிலாந்து தடுக்கக் கருதி துருக்கிக்கு உதவி செய்ததால் துருக்கி சிதையாமல் இருந்தது.

இரண்டாம் அப்துல் ஹமீத் பதவியேற்பதற்கு முன்பே கி. பி. 1875 இல் துருக்கி ஒரு வங்குரோத்தான நாடாகப் பிரகடனப் படுத்தப்பட்டிருந்தது. வெளிநாட்டில் இருந்து பெற்ற கடனுக்கான வட்டியைக் கொடுக்க அதன் வருட வருமானத்தின் பெரும் பகுதியை ஒதுக்க வேண்டியிருந்தது.

தன்னைப் பதவியில் அமர்த்தியவர்கள் ஐரோப்பிய சிந்தனை வழிமுறையில் நாட்டின் சீர்திருத்தத்தை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்று அவரிடம் எதிர்பார்த்த போதும் அப்துல் ஹமீத் அவர் தனக்கே உரிய ஒரு தனித்துவ வழிமுறையில் நாட்டைப் பரிபாலிக்க முனைந்தார்.

சுல்தானின் அதிகாரங்களைக் குறைத்து பாராளு மன்றத்தின் அதிகாரத்தைக் கூட்ட வேண்டும் என்று தேசியவாதிகள் அவரிடம் எதிர்பார்த்த போதும் நேர்மாறாக சுல்தானின் அதிகாரங்களை மேலும் கூட்டுவதிலேயே அவர் கவனம் செலுத்தினார். தான் பதவியேற்றதும் தாராண்மை வாதிகளால் தொகுக்கப்பட்ட யாப்பை அவர் நடைமுறைப்படுத்திய போதும் கி. பி. 1877-1878 இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற்ற ருசியாவின் போர் நடவடிக்கையை எதிர்கொள்ள அதிக அதிகாரம் தேவை என்ற நிலைப்பாட்டில் யாப்பை கி. பி. 1878 இல் காலவரையறை இன்றி இடை நிறுத்தினார்.

உதுமானியத் துருக்கியரின் பொற்காலத்தில் போலன்றி இரண்டாம் அப்துல் ஹமீத் காலத்தில் கிறித்தவக் குடிமக்களைக் கொண்ட போல்கன் குடா நாட்டுப் பிரதேசங்களைத் துருக்கி இழந்திருந்தது. அதனால் பல இன, பல மத குடிமக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருந்த நிலை நீங்கி முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட நாடாக துருக்கி மாறியிருந்தது. இழந்த பிரதேசங்களில் இருந்து கிறித்தவ ஆட்சியாளர்களால் துரத்தப்பட்ட முஸ்லிம் குடிமக்களும் அகதிகளாக வந்து குடியேறியிருந்தனர். இதனால் துருக்கி முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு நாடாக மாறியது. ஏற்கனவே துருக்கிய தேசியவாத சிந்தனையை அறிமுகப்படுத்தி இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்த முயற்சித்தமை எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை. என்பதனை அறிந்திருந்த இரண்டாம் அப்துல் ஹமீத் துருக்கிய-அறபு-அல்பேனிய இன முஸ்லிம்களிடையே இஸ்லாத்தை மையக்கருத்தாக வைத்து அனைவரையும் முஸ்லிம்கள் என்ற தோரனையில் ஐக்கியப்படுத்தக் கருதினார். ஏற்கனவே கி. பி. 1517 இல் துருக்கிய ஆட்சியாளரான முதலாம் ஸாலிம் தன்னை முஸ்லிம் உலகின் கலீபாவாகப் பிரகடனப் படுத்தியிருந்தார். ஆயினும் பின்வந்த துருக்கி சுல்தான்கள் அச்சிந்தனையை பிரபல்யப்படுத்துவதில் அக்கறை காட்டவில்லை. இரண்டாம் அப்துல் ஹமீத் தன்னை முஸ்லிம் உலகின் கலீபா என்று பிரகடனப்படுத்தியதோடு மட்டுமல்லாது ஆபிரிக்கா முதல் இந்தோனேசியா வரையிலான பிரதேசங்களில் சிறுபான்மையாக வாழ்கின்ற முஸ்லிம்களின் மீது அக்கறை செலுத்தினார். அவர்களிடையே ஆன்மீக ரீதியான தனது தலைமைத்துவத்தை உணர்த்தி நின்றார். இதனால் ஐரோப்பிய நாடுகளுடன் பேரம் பேசும் போது துருக்கியின் அதிபதி என்ற நிலைக்கு அப்பால் நின்று முஸ்லிம் உலகின் கலீபா என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைப்பாட்டில் தன்னைப் பிரதிநிதித்துவப்படுத்தினார். பல பிரதேசங்களில் வாழ்கின்ற முஸ்லிம்களிடையே கலாசார, ஆன்மீக ரீதியிலான உறவைப் பலப்படுத்த முயற்சித்தார். துருக்கிக்கும் புனித தலங்களுக்கும் இடையிலான உறவை வளர்த்தார். தூதுக்குழுக்களை துருக்கிக்கு வெளியே உள்ள முஸ்லிம் சமூகங்களிடையே அனுப்பி உறவை நிலைப்படுத்தினார். இலங்கைக்கான துருக்கி கவுன்சிலரை நியமித்து அவருக்கு "எபந்தி" எனும் பட்டத்தையும் கொடுத்து கௌரவித்தார். (Zionist) ஸியனிசவாதிகள் துருக்கி கொடுக்கவேண்டிய கடனின் பெரும்பகுதியை தாம் கொடுப்பதாகவும் அதற்குப் பிரதியுபகாரமாக ஜருசலத்தைத் தமக்கு தருமாறு விடுத்த வேண்டுகோளை நிராகரித்தார். ஊழலைக் குறைத்து வருவாயைக் கூட்டி கடன் பழுவைப் படிப்படியாக குறைத்தார். ஐரோப்பிய நாடுகளுடனான உறவை சமய சார்பற்ற சிந்தனை வழி மேலும் பலப்படுத்த தகுதிவாய்ந்த தூதுவர்களை நியமித்து நடவடிக்கை எடுத்தார். ஜர்மனிய இராணுவ ஆலோசகர்களை அழைத்து தன் இராணுவத்தை நவீனமயப்படுத்த முயற்சித்தார். போர்க்கப்பல்களையும் கடற்படைக்குப் பெற்றுக்கொடுத்தார். குடிமக்கள் கல்வி நிலையைப் பெருக்கவும் பாடசாலைகளை தோற்றுவித்தார்.

இஸ்லாமிய சிந்தனை வழியிலும், அரச குடும்ப ஆட்சியை நிலைப்படுத்தும் இலக்குடனும் சீர்திருத்தத்தையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்த இரண்டாம் அப்துல் ஹமீத் எடுத்த முயற்சியை சமய சார்பற்ற சிந்தனையாளர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை. ஐரோப்பிய சிந்தனை வழியிலான சமய சார்பற்ற அரசை நிறுவ வேண்டும் என்று "இளம் துருக்கியர்" என நாமமிட்டுக்கொண்ட குழுவினர் இரண்டாம் அப்துல் ஹமீதை கி. பி. 1909 இல் பதவியில் இருந்து கவிழ்த்தனர். ஈற்றில் கி. பி. 1924 இல் உதுமானிய துருக்கிய ஆட்சி முற்றாக முடிவுற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் III

## கிலாபத்தின் வீழ்ச்சிக்கு வழிகோலிய வரலாற்றுப் பின்னணி

இறைதூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் மதீனாவில் ஹிஜ்ரத்தின் பின் இஸ்லாமியக் குடியரசு ஒன்றினைத் தோற்றுவித்தார்கள். அவரது மரணத்தின் பின் அவர்களது தோழர்கள் அவரின் பிரதிநிதிகளாக நின்று அக்குடியரசை ஆட்சிபுரிந்தார்கள். இவ்வாட்சியாளர்கள் கலீபாக்கள் என்றழைக்கப்பட்டனர். அவர்களின் ஆட்சி கிலாபத் ஆட்சி என்றழைக்கப்பட்டது. நாட்டை அவர்கள் ஆட்சிசெய்யக் கையாண்ட சிந்தனை கிலாபத் கோட்பாடு என்று வழங்கப்படுகிறது.

துருக்கியின் அரசியல் ஆதிக்கத்தைக் கைப்பற்றிய முஸ்தபா கமால் கி. பி. 1924 இல் கலீபாப் பதவியைத் துறந்ததன் மூலம் முஸ்லிம் உலகின் கிலாபத் ஆட்சி ஒழிக்கப்பட்டது. ஆயிரத்து இருநூற்றி தொண்ணூறு ஆண்டுகளைக் கொண்ட நீண்டகால வரலாற்றை இந்த கிலாபத் ஆட்சி கொண்டிருந்தது. கி. பி. 661 இல் ஆரம்பித்த உமையா ஆட்சியில் கோத்திரச் செல்வாக்கு வளர்ந்தது. இதன் விளைவாக அப்பாஸியர்க்கள் காலத்தில் கோத்திரங்கள் ஒன்றை ஒன்று வீழ்த்தி அதிகாரத்தைக் கைப்பற்றியபோதும், கிலாபத் கோட்பாட்டை அங்கீகரித்தன. அதனால் கிலாபத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரளவிலேனும் தொடர்ந்து நீடித்தது. கி. பி. பதினொன்றாம் நூற்றாண்டு முதல் சிலுவை வீரர்கள் மற்றும் ஐரோப்பிய அரசுகள் ஒன்றிணைந்து ஜெரூஸலத்தைக் கைப்பற்றிய பின்னரும் மங்கோலியர் கி. பி. 1258 இல் பக்தாதை முற்றாக அழித்து குடிமக்களைக் கொன்று குவித்தபோதும், கிலாபத் ஆட்சியை அவர்களால் ஒழிக்க முடியவில்லை. முஸ்லிம்கள் என்று தம்மை அழைத்துக் கொண்டவர்களே கி. பி. 1924 இல் கிலாபத் ஆட்சியை ஒழித்து கிலாபத் சிந்தனையைப் புறம் தள்ளினார்கள். மிக நீண்ட காலம் நிலைத்திருந்த கிலாபத் ஆட்சி ஒழிக்கப்பட்டமைக்கான வரலாற்றுப் பின்னணியை அறிவது கிலாபத்தின் வீழ்ச்சி பற்றி விளங்கிக்கொள்ளப் பெரிதும் துணைசெய்யும்.

## கிலாபத் ஒழிக்கப்பட்டமைக்கான வராற்றுப் பின்னணி

முஸ்லிம் சமூகம் தூய இஸ்லாமிய சிந்தனையுடனும் கலப்பற்ற இஸ்லாமிய வாழ்க்கை முறையுடனும் வாழ்ந்த காலத்தில் ஆசிய, ஆபிரிக்க, ஐரோப்பியக் கண்டங்களைச் சேர்ந்த பல நாடுகளைத் தன் ஆதிகத்கத்துக்குள் கொண்டு வந்தது. இதனால் குறிப்பாக ஐரோப்பியக் கிறிஸ்தவர்கள் முஸ்லிம்களுடன் தீராத பகைமை பூண்டனர். இப்பகைமை அரசியல், சமய, பொருளாதார ரீதியான உணர்வுகளை மையமாகக் கொண்டு வளர்ந்தது. பைஸாந்தியரின் ஆட்சிக்குட்பட்டிருந்த சிரியா, பலஸ்தீன், ஜோர்தான், எகிப்து முதலான பிரதேசங்களை முஸ்லிம்கள் இரண்டாம் கலீபாவின் காலத்தில் கைப்பற்றினர். தமது அரசியல் ஆதிக்கத்துக்கும், கண்ணியத்துக்கும் இது ஒரு களங்கம் என்று பைஸாந்தியர் கருதினர். இதனால் தம் கண்ணியத்தைக் காக்க இழந்த பிரதேசங்களை எவ்வாறாயினும் மீட்டெடுக்க வேண்டும் எனச் சிந்தித்தனர். இதனால் அரசியல் ரீதியான பகைமை தொடர்ந்தது. கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோர் கிறிஸ்தவத்தைக் கைவிட்டு இஸ்லாத்தை ஏற்றனர். அதனால் அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியாக மட்டுமன்றி சமய ரீதியாகவும் இப்பகைமை முற்றி, இஸ்லாத்துக்கும் கிறிஸ்தவத்துக்கும் இடையிலான சமயப் போராட்ட வடிவத்தையும் அது பெற்றது.

முஸ்லிம்கள் கைப்பற்றிய மத்திய கிழக்கு, வட ஆபிரிக்க நாடுகள் பைஸாந்திய வர்த்தகர்களின் வர்த்தக சந்தைகளாக நீண்ட காலம் இருந்தன. இந்த நாடுகள் முஸ்லிம்கள் வசமாகியதால் பைஸாந்தியர் தம் வர்த்தகச் சந்தைகளை இழந்தனர். அதனால் அரசியல், சமய ரீதியாக மட்டுமன்றி பொருளாதார ரீதியான பகைமையாகவும் அது மாற்றம் கண்டது. தாம் இழந்த அரசியல், சமய, பொருளாதார நலன்களை மீளப் பெறவும் தம் சமயத்தை வியாபிக்கச் செய்யவும் கருதி, கி. பி. பதினொன்றாம் நூற்றாண்டு முதல் சிலுவை வீரர்கள் இஸ்லாமிய கிலாபத்தை அழிக்க முயற்சி மேற்கொண்டனர். ஐரோப்பிய மறுமலர்ச்சியின் பின் இப்போராட்டத்தை அவர்கள் தீவிரப்படுத்தினார்கள். பயங்கரவாதத்தை ஒடுக்குதல் என்ற பெயரில் தற்கால முஸ்லிம் நாடுகள் மீது தொடரும் படையெடுப்பும் இதன் தொடரே. தம் இலக்கினை அடைவதற்காக சிந்தனாரீதியான மாற்றத்தை முஸ்லிம்களிடையே ஏற்படுத்த முயற்சித்ததுடன் அரசியல், ராஜதந்திர, இராணுவ, பொருளாதார நடவடிக்கைகளையும் ஐரோப்பிய கிறிஸ்தவ உலகு மேற்கொண்டு வந்துள்ளது.

ஐரோப்பாவில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சி காரணமாக பிரிட்டன், பிரான்ஸ், போர்த்துக்கல், ஒல்லாந்து, ஜேர்மனி, இத்தாலி போன்ற நாடுகள் ஆசிய, ஆபிரிக்க, அமெரிக்க கண்டங்களில் காலனித்துவ நாடுகளைப் பெற்றுக்கொண்டன. அதன் விளைவாக தத்தம் நாடுகளின் கைத்தொழில் ஆலைகளுக்குத் தேவையான மூலப் பொருட்களை அந்நாடுகளிலிருந்து குறைந்த விலைக்குப் பெற்றுக்கொண்டனர். தம் உற்பத்திக்கான சந்தையாகவும் அந்நாடுகளை ஆக்கிக் கொண்டனர். இதன் மூலம் குவிந்த அபரிமிதச் செல்வத்தைப் பயன்படுத்தி நவீன ஆயுதங்களை உற்பத்தி செய்ததுடன் பெரும் படைகளையும் திரட்டினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் கடந்த வர்த்தகத்தின் பாதுகாப்புக்காக காலனித்துவ நாடுகளைத் தம் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க கடற் படையையும் கட்டி எழுப்பினர்.

போல்கன் பிரதேசத்தைத் தன் ஆதிக்கத்தில் வைத்திருந்த துருக்கியப் பேரரசு ஒன்று மட்டுமே ஐரோப்பாக் கண்டத்தின் ஒரே ஒரு முஸ்லிம் நாடாகும். கைத்தொழிற் புரட்சியால் பொருள் வளமும் இராணுவப் பலமும் பெற்று வளர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகள் எல்லாம் கிறிஸ்தவ நாடுகளாகும். அவை தாம் முன்பு இழந்த ஸ்பெயினையும் சிசிலியையும் மீளக் கைப்பற்றியிருந்தன. தாம் முன்பு இழந்த ஏனைய பிரதேசங்களையும் கைப்பற்றுவதற்காக துருக்கியைப் பலவீனப்படுத்த அவை கருதின. அதற்காக துருக்கிய ஆட்சியின் கீழ் இருந்த அறபு நாடுகளைக் கைப்பற்ற முயற்சித்தன. ஐரோப்பியக் கிறிஸ்தவ உலகு தன் பொது எதிரியாக முஸ்லிம்களைக் கருதியதால் துருக்கியை எதிர்ப்பதில் கருத்தொற்றுமைப்பட்டது.

ஐரோப்பாவில் எழுந்த இப்புதிய மாற்றங்களைக் கண்டுகொள்ளாமல் உதுமானிய துருக்கியப் பேரரசு தனது மரபு ரீதியான படையில் நம்பிக்கை வைத்துச் செயற்பட்டது. முஸ்லிம் உலகின் அறிஞர்கள் குழாமும் "தக்லீத் சிந்தனை யில் ஊறிப்போய் இருந்ததால் இப்புதிய எழுச்சியைக் கண்டு கொள்ளாமல் இருந்தனர்.

உதுமானியத் துருக்கியர் கி. பி. 1517 முதல் கிலாபத்தின் பரிபாலனப் பொறுப்பை ஏற்றிருந்தனர். துருக்கியர் அறபு மொழி பேசாதவர்களாகவும் அறபு இனத்தவர் அல்லாதவர்களாகவும் இருந்தபோதும் அவர்களது கிலாபத்தை அறேபியர் உட்பட உலகில் வாழ்ந்த அனைத்து முஸ்லிம்களும் அங்கீகரித்திருந்தனர். அறேபியர் கலீபாவுக்கு பைஅத் செய்திருந்தனர். துருக்கியர்களின் கீழ் அறேபியர்கள் அமைச்சர்களாகவும், தளபதிகளாகவும், உயர்தர உத்தியோகத்தர்களாகவும் கடமை புரிந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன, மொழி, பிரதேச உணர்வுகளுக்கு அப்பால் நின்று சமயத்தினால் கட்டுண்டு சுமுகமாக அவர்கள் வாழ்ந்தனர். இன, மொழி, பிரதேச வேறுபாட்டுக்கு மத்தியிலும் சமய ரீதியான சிந்தனையின் வழி நின்றே ஒரு குடையின் கீழ் வாழ்ந்தனர். தாம் அறேபியர் என்றோ துருக்கியர் என்றோ சிந்திக்காது தாம் முஸ்லிம்கள் என்று சிந்தித்தனர். பொருளாதார ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் பலவீனமடைந்திருந்த துருக்கிய கிலாபத் சிதைவுறாது இருப்பதற்கு சமய ரீதியான இச்சிந்தனையே துணையாகியது. துருக்கியரிடம் இருந்து அறபுப் பிரதேசங்களைப் பிரித்து துருக்கியைப் பலவீனப்படுத்த சமய ரீதியிலான இவ்வொற்றுமை தடையாக இருப்பதாக ஐரோப்பியர் கருதினர். சமய ரீதியாக துருக்கியரும் அறேபியர்களும் முஸ்லிம்களாக இருக்கும் நிலையிலே அவர்களிடையே வேற்றுமையை வளர்த்துவிடத் திட்டமிட்டனர். துருக்கியருக்கு எதிரான மனோபாவத்தை அறேபியர்களிடம் வளர்க்கவும், அதே போன்ற எதிர் மனோபாவத்தை துருக்கியரிடம் வளர்க்கவும் ஐரோப்பிய அறிஞர் குழாத்தினர் குறிப்பாக யூத அறிஞர்கள் கடும் பிரயத்தனம் செய்தனர். அதற்காக அறபுத் தேசிய உணர்வை அறேபியரிடமும் துருக்கிய தேசிய உணர்வை துருக்கியரிடமும் வளர்க்கவும் திட்டமிட்டு செயற்பட்டனர்.

நெப்போலியன் கி. பி. 1798 இல் எகிப்தைக் கைப்பற்றியது முதல் இம் முயற்சி ஆரம்பமாகியது. "எகிப்திய பவுன்டேசன்" எனும் நிறுவனத்தை அவன் ஆரம்பித்து வைத்தான். அந்நிறுவனம் எகிப்தின் பழம் பெருமையையும் எகிப்திய கலாசாரத்தையும் உயிர்ப்பித்து "நாம் எகிப்தியர்" என்ற தேசிய உணர்வை ஏற்படுத்த முயற்சித்தது. பிரித்தானியர் நெப்போலியனை எகிப்தில் இருந்து துரத்தியபோதும் நெப்போலியன் ஆரம்பித்த அச்செயற்பாட்டை பிரித்தானியர் எகிப்தில் தொடர்ந்தனர். நெப்போலியனின் கனவை நனவாக்கக் கடுமையாக முயற்சித்தனர். சில்வெஸ்டர் டி சச்சி என்னும் பிரான்சியன் பண்டைய எகிப்திய நாகரிகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய நூலை எழுதினான். இதனால் தூண்டப்பட்ட எகிப்திய தேசியவாதியான தஹ்தாவியும் அவனது சிந்தனைக்கு வழிப்பட்டோரும் எகிப்தியரிடையே தேசியவாத சிந்தனையை வளர்த்தனர். இச்சிந்தனை வயப்பட்ட முகம்மதலி எகிப்தில் துருக்கியருக்கெதிரான கிளர்ச்சியைத் தூண்டினான். மேற்கு மயப்பட்ட கலாநிதி தாஹா ஹுசைன் எனும் தேசியவாதி "முஸ்தக்பலு அஸ்ஸகாபா ..பீ மிஸ்ர்" எனும் தனது நூலில், எகிப்து முஸ்லிம் உலகுடனான தொடர்பைத் துண்டித்து ஐரோப்பாவுடனான தொடர்பைக் கூட்டிக்கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுத்தார். இதேபோல துருக்கிய தேசிய வாத உணர்வை துருக்கியர்களிடையேயும் சிலர் தூண்டினர். ஐரோப்பிய யூதர்கள் மூவரே துருக்கிய தேசியவாத உணர்வை உயிர்ப்பித்தனர்.

துருக்கிய இனம், அறபு இனம் உட்பட ஏனைய எல்லா இனங்களையும் விட மேம்பட்ட ஓர் இனம் என்பதையும், துருக்கிய மொழி, துருக்கிய இலக்கியம் என்பவற்றின் சிறப்புக்களையும் துருக்கியின் வரலாற்றுச் சாதனைகளையும் எழுதி துருக்கியரை இன, மொழி, பிரதேச ரீதியாக சிந்திக்க வைக்க அவர்கள் முயற்சித்தனர். இளம் துருக்கியர் எனும் நாமம் பூண்ட குழுவினர் துருக்கியத் தேசிய உணர் வினால் தூண்டப்பட்டே கலீபா அப்துல் ஹமீதுக்கு எதிராக கி. பி. 1909 இல் கிளர்ச்சி செய்து அவரைக் கைது செய்தனர். இவ்விளம் துருக்கியர் வெகுசனத் தொடர்புச் சாதனங்களூடாக துருக்கிய தேசிய உணர்வுகளைத் தூண்டும் பிரசாரங்களை மேற்கொண்டனர். இதனால் ஆத்திரமடைந்த அறேபியர் உயர்கல்வி பெறுவதற்காக தம்பிள்ளைகளைத் துருக்கிக்கு அனுப்புவதை தவிர்த்து ஐரோப்பாவுக்கு அனுப்பலாயினர். பிரான்சியரும் பிரித்தானியரும் தேசியவாதத்தின் பெயரால் அரபியர் துருக்கியர் எனும் இவ்விரு இனத்தவரிடையே பொறாமையையும் பகைமையையும் பூசலையும் வளர்ப்பதில் வெற்றி கண்டனர். எகிப்திற் போலவே சிரியா, லெபனான், ஜோர்தான் போன்ற ஏனைய அறபுப் பிரதேசங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியவாத நச்சுக் காற்றை பரப்பினர். இந்நாடுகளில் வாழ்ந்த அறபுக் கிறித்தவர்கள் ஐரோப்பியரின் கையாட்களாக நின்று செயற்பட்டனர். தேசியவாத சிந்தனைக்குப் பலியான இவ்வறேபியர்கள்தான் முதலாம் உலக மகாயுத்தத்தின்போது துருக்கிய அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். அறேபியர் சுதந்திரப் போராட்டம் எனும் பாவனையில் துருக்கிக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்து துருக்கியைப் பலவீனப்படுத்தினர். இதன் மூலம் துருக்கியைப் பலவீனப்படுத்தும் தமது முயற்சியில் ஐரோப்பியர் வெற்றி கண்டனர்.

அறேபியரிடையேயும் துருக்கியரிடையேயும் தேசிய உணர்வைத் தூண்டி சிந்தனா ரீதியான மாற்றத்தை ஏற்படுத்தி துருக்கியைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த அதே காலப் பகுதியில், பொருளாதார ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் பலவீனப்படுத்தும் முயற்சிகளையும் ஐரோப்பியர் தொடர்ந்து செய்து கொண்டிருந்தனர்.

கி. பி. 16 ஆம் நூற்றாண்டு முதல் 1924 வரை உதுமானிய துருக்கிய ஆட்சியாளர் முஸ்லிம் உலகின் கலீபாவாக உலக முஸ்லிம்களால் அங்கீகரிக்கப்பட்டிருந்தபோதும், அவரது நேரடி ஆட்சிக்கு ஈரான், இந்தோனேஷியா, இந்தியா போன்ற நாடுகள் உட்பட்டிருக்கவில்லை. கலீபாவைத் தம் ஆன்மீகத் தலைவராக ஏற்று செயற்பட்ட இவர்கள். உலகியல் விவகாரங்களில் சுதந்திரமாகவே இயங்கினர். கலீபாவின் நேரடி ஆட்சிக்குட்பட்டிருந்த வட ஆபிரிக்க நாடுகள், எகிப்து, சவுதி அரேபியா போன்ற நாடுகளிலும் நகர் புறங்களில் மட்டுமே துருக்கியர் ஆட்சி உணரப்பட்டது. உள்நாட்டில் அவ்வப் பகுதியில் வாழ்ந்த பெருங்கோத்திரங்களின் ஆட்சியே நீடித்திருந்தது. (இந்நிலை முஸ்லிம்களின் வரலாற்றைப் பொருத்தவரை புதியதல்ல. அப்பாஸிய ஆட்சிக் காலத்திலும் இந்நிலையே இருந்தது. அப்பாஸிய கலீபாவை ஆன்மீகத் தலைவராக ஏற்றுக்கொண்டு தம் இஷ்டம்போல் ஆட்சி செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல சிற்றரசுகள் இருந்தன.) இதனால் ஐரோப்பியரின் இராணுவ ரீதியான அச்சுறுத்தலின்போது தானும், முஸ்லிம் உலகின் இராணுவ, பொருளாதார மனிதவள பலத்தை முழுமையாகப் பிரயோகிக்க துருக்கிய அரசு சக்தி பெறவில்லை. துருக்கிக்கு அண்மையிலிருந்த மத்திய கிழக்கு, வட ஆபிரிக்கக் கரை நாடுகள் தானும் துருக்கிய அரசுக்கு பக்கபலமாக இருக்குமளவு உறவு கட்டியெழுப்பப்பட்டிருக்கவில்லை. நெப்போலியன் கி. பி. 1798 இல் எகிப்தைத் தாக்கிய பின்புதான் எகிப்தைப் பலப்படுத்துவதன் அவசியத்தைத் துருக்கி உணர்ந்தது. அல்பேனியரான முஹம்மதலி பாச்சா என்பவரை எகிப்தின் கவர்னராக கி. பி. 1805 இல் துருக்கி நியமித்தது அவர் துருக்கிய - அரேபிய படை ஒன்றை கட்டி எழுப்பினர். கி. பி. 1809 இல் பிரிடிஷார் அலெக்சாந்திரியாவைத் தாக்கியபோது இப்படையின் துணையுடன் பிரிட்டிஷ் படையைத் துருக்கியர் துரத்தியடித்தார்.

இக்காலப் பகுதியில் இந்திய உபகண்டத்தில் தம் ஆதிக்கத்தை நிலைநாட்ட பிரிட்டிஷார் பெரும் முயற்சி செய்துகொண்டிருந்தனர். தென்ஆபிரிக்கக் கரையைச் சுற்றிச் செல்லும் செலவையும் நேரத்தையும் சிக்கனப்படுத்தக் கருதி எகிப்தினூடாக செங்கடலை அடையும் வாய்ப்பைப் பெறும் நோக்கில் எகிப்தின் மீது செல்வாக்குச் செலுத்த பல வழிகளிலும் பிரிட்டிஷார் முயற்சித்தனர். முஹம்மதலி அதற்கு இடம் கொடுக்கவில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் அரைப் பகுதியில் பிரிட்டன் எகிப்தையும், பிரான்ஸ் மொரொக்கோவையும் டியூனிசியாவையும், ரஷ்யா போல்கன் குடா நாடுகளையும், கருங் கடல் பிரதேசத்தையும் துருக்கியிடம் இருந்து பறித்துப் பங்குபோட்டுக்கொள்ள முயற்சித்தன. ரஷ்யா கருங்கடலில் ஆதிக்கம் செலுத்தினால் மத்தியரைக்கடல் வழியாக தம் அபிலாஷைகளுக்கு சவாலாக ரஷ்யா வளரும் எனப் பயந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிட்டனும் பிரான்சும் ரஷ்யாவின் திட்டத்தை எதிர்த்தன. பிரிட்டனும் பிரான்சும் சேர்ந்து தனது சாம்ராஜ்யத்தின் தெற்குப் பிரதேசங்களை கைப்பற்ற முயற்சிப்பதைத் தடுப்பதற்கு துருக்கி முயற்சித்தபோது பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா நாடுகளின் கூட்டுப்படை கி. பி. 1827 ஷைப்பிரஸ் கரையோரக் கடற்பரப்பில் துருக்கியப் படையை வெற்றிகண்டது. இதனால் மத்திய தரைக் கடலாதிக்கம் ஐரோப்பியர் வசமாகிய போதும் கி. பி. 1849 இல் அப்பாஸ் எகிப்தின் கவர்னராகும் வரை எகிப்தில் ஆதிக்கம் செலுத்த பிரிட்டனுக்கு முடியவில்லை. அப்பாஸின் நிர்வாக காலத்தில் போரினால் அதுகாலவரை சாதிக்க முடியாது போன தனது இலக்கை பிரிட்டன் இராஜதந்திர ரீதியாக சாதித்துக் கொண்டது.

அலெக்சாந்திரியா துறைமுகத்தில் இருந்து கெய்ரோ வரையிலான தரைப் பாதையை பிரிட்டன் முதற் கட்டத்தில் (1851-1854 இடையில்) அமைத்துக் கொடுத்தது. பின் அதனை சுயஸ் வரை நீட்டிக் கொடுத்தது. அதனால் பிரிட்டன் தன் வணிகப் பண்டங்களை செங்கடலினூடாக, மத்தியதரைக்கடல் வழியாக கொண்டு செல்லும் வாய்ப்பைப் பெற்றது. கி. பி. 1854 இல் பிரான்ஸ் சுயஸ் கால்வாயைத் தோண்டும் உடன்படிக்கை ஒன்றை எகிப்துடன் செய்துகொண்டது. பிரான்ஸ் கால்வாயைத் தோண்டுவதற்குத் தேவையான இயந்திர உபகரணங்களை வழங்கவும் எகிப்து தேவைப்படும் மனித வளத்தினை வழங்கவும் இணங்கி இரு தரப்பினரும் இதில் பங்காளிகளாயினர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் துருக்கியின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த எகிப்தில் பிரிட்டனும் பிரான்சும் இராஜதந்திர ரீதியாக ஆதிக்கம் செலுத்த முயற்சிக்கும் அதேவேளை கி. பி. 1854-1856 இல் ரஷ்யா போர் முகத்தில் துருக்கியைச் சந்தித்தது. கிரிமியன் யுத்தம் என்றழைக்கப்படுகின்ற இந்த யுத்தம் வெற்றி தோல்வியின்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவடைந்தாலும் துருக்கியின் வீழ்ச்சி இப்போருடன் ஆரம்பமாகியது. இப்போர் துருக்கிக்கு பாரிய பொருட் செலவையும் பெரும் எண்ணிக்கையிலான ஆள் சேதத்தையும் ஏற்படுத்தியது. ஐரோப்பாவின் உண்மையான நோயாளியாக துருக்கி மாறியது. அதன் பொருளாதாரம் பெரும் வீழ்ச்சி கண்டது. கைத்தொழில் புரட்சியுடன் வளர்ச்சி கண்ட ஐரோப்பிய வல்லரசுகளின் ஆதிக்க வெறியில் இருந்தும் ஆக்கிரமிப்பு நடவடிக்கையிலிருந்தும் தன்னைக் காத்துக் கொள்ள துருக்கி பெருந்தொகையான நிதியை வருடம் தோறும் செலவிட வேண்டியேற்பட்டது. பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீட்சி பெறும் நோக்கில் தன் வரலாற்றில் முதன் முறையாகத் துருக்கி ஐரோப்பிய வங்கிகளிலிருந்து கி. பி. 1854 இல் வட்டிக்கு கடன் வாங்கியது.

மத்தியத்தரைக் கடலில் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டும் நோக்கில் துருக்கிய பிரதேசங்களைக் கைப்பற்றும் தனது நீண்டகாலக் கனவை நனவாக்க, நலிவடைந்திருந்த துருக்கியைத் தாக்க இதுவே தருணம் என்று கருதி கி. பி. 1878 இல் ரஷ்யா மீண்டும் துருக்கி மீது படையெடுத்தது. இப்போரில் துருக்கி சரணடையாத போதும் படுதோல்வியடைந்தது. அதனால் ஐரோப்பிய வல்லரசுகள் விதிக்கும் நிபந்தனைகளை ஏற்கவேண்டிய நிர்ப்பந்தம் துருக்கிக்கு ஏற்பட்டது. இதன் விளைவாக போல்கன் நாடுகளுக்கு அதிக அளவில் சுய ஆட்சி உரிமையைக் கொடுத்ததுடன் ரஷ்யாவுக்கு போர்ச் செலவுக்காக வருடம் ஒன்றுக்கு மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் குருவு நாணயங்களை நூறு வருடங்கட்கு செலுத்தவும் இணங்கியது. இதனால் துருக்கி வங்கிகளிடம் மேலும் மேலும் கடன் வாங்க வேண்டியதாயிற்று. இதனால் கி. பி. 1878 இல் தனது மொத்த வருவாயில் 80% ஐ வங்கிகளுக்குச் செலுத்தும் நிலை உருவாகியது. வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பட்ட பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்காக தன் குடி மக்களிடம் உள்நாட்டில் கடன் வாங்கியது. அத்துடன் பணநோட்டுக்களையும் அச்சடித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் பணவீக்கம் ஏற்பட்டது. துருக்கிய நாணயத்தின் பெறுமதியும் குறைந்தது. அதனால் சர்வதேசக் கடனைச் செலுத்த மேலும் அதிக பணம் தேவைப்பட்டது. துருக்கி லண்டனின் வங்கிகளிலிருந்தே கடன்பட்டிருந்ததால் கடனை ஆயுதமாகப் பயன்படுத்தி பிரிட்டன் துருக்கியின் அரசியலில் தலையிட்டது. வருடந்தோறும் இத்தலையீடு புதிய புதிய நிபந்தனைகளுடன் அதிகரித்தது. இதன்வழி துருக்கிய அரசியலில் தன் பிடியை அது இறுக்கியது.

மத்திய கிழக்கு நாடுகளிலும் வட ஆபிரிக்க நாடுகளிலும் துருக்கிய கவர்னர்கள் இருந்தபோதும் அந்நாடுகளின் பொருளாதாரச் செயற்பாடுகள் அவ்வவ் நாட்டவர்களாலேயே மேற்கொள்ளப்பட்டன. எகிப்து பிரான்சுடன் சுயஸ் கால்வாயைத் தோண்டுவதற்காக செய்த உடன்படிக்கையின் படி அக் கால்வாயைத் தோண்ட ஆள் வளத்தை வழங்க வேண்டியிருந்தது. அதற்காக எகிப்து தனது பருத்தி உற்பத்தியின் வருமானத்தை நம்பி ஐரோப்பிய வங்கிகளில் இருந்து கடன் வாங்கியது. கி. பி. 1861-65 இடையே நடைபெற்ற அமெரிக்க உள்நாட்டு யுத்தம் காரணமாக எகிப்திய பருத்திக்கு நல்லதொரு சந்தை வாய்ப்பும் இருந்தது. கி. பி. 1865 இல் அமெரிக்காவின் உள்நாட்டுக் கலவரம் முடிவடைந்ததால் எகிப்தின் பருத்திச் சந்தை வாய்ப்பு வீழ்ச்சி கண்டது. பருத்தியின் விலை நானூறு மடங்காகக் குறைந்தது. இதே காலப்பகுதியில் எகிப்தின் கவர்னராக இருந்த இஸ்மாயில் பாச்சாவின் தூர நோக்கற்ற செயற்பாடுகளால் அதன் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடைந்தது. செங்கடலில் இருந்த எகிப்தியத் துறைமுகத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை துருக்கியிடம் இருந்து அவர் ஏற்றார். வாரி சுரிமை அடிப்படையிலான ஆட்சியுரிமையைப் பெற அதிகரித்த திறைப் பணத்தை துருக்கிக்கு செலுத்துவதற்கும் இணங்கினார். எதியோப்பியாவின் மீது பயனற்ற ஒரு போரைத் தொடுத்து பொருளாதார சுமையை விலைக்கு வாங்கினார். நாட்டின் அபிவிருத்திப் பணிக்கு மட்டுமன்றி ஆடம்பரச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவுகளுக்காகவும் அதனை செலவிட்டார். இதனால் எகிப்தின் பொருளாதாரம் வங்குரோத்தாகியது. மக்கள் மீது அதிக வரிச்சுமையைச் சுமத்தியும் பொருளாதாரச் சிக்கலில் இருந்து விடுபட முடியவில்லை. வங்கிகளுக்குக் கொடுக்கவேண்டிய வட்டித் தொகையைக் கொடுக்கவும் திணறியது. அதனால் சுயஸ் கால்வாயில் எகிப்துக்கு உரிய பங்கை இஸ்மாயில் பாச்சா 1875 இல் பிரித்தானியக் கம்பனி ஒன்றுக்கு விற்றார். அதனால் வங்கிக் கடனில் ஒரு பகுதியை செலுத்த முடியுமான போதும் வங்கிக் கடனில் இருந்து முழுமையாக மீட்சிபெற முடியவில்லை. எஞ்சிய வட்டித் தொகையை அறவிட வங்கிகள் வழக்குத் தொடுத்தன. வங்கிக் கடனைச் செலுத்துமாறு நீதிமன்றம் கட்டளையிட்டதால் தனது சொந்த நிலபுலன்களை விற்று இஸ்மாயில் பாச்சா கடனில் ஒரு பகுதியை அடைத்தார். எஞ்சிய கடன் அறவிட்டுக் கொள்வதற்காக புகையிலை, மதுசாரம் என்பவற்றின் விற்பனை உரிமையையும் புகையிரதப் பாதை மூலம் வரும் வருமானத்தையும் பெற்றுக்கொள்ள பிரிட்டனுக்கு இஸ்மாயில் பாச்சா ஒப்புதல் வழங்குவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்.

எகிப்து துருக்கிய அரசுக்குட்பட்ட ஒரு நாடு என்பதால் எகிப்தின் கடனை துருக்கியின் மீது திணிக்க பிரிட்டனும் பிரான்சும் முயற்சித்தன. எகிப்து தரவேண்டிய கடனை துருக்கி பொறுப்பேற்று எகிப்தைக் கடன் சுமையிலிருந்து விடுவித்து துருக்கி தன் பரிபாலனத்தின் கீழ் எகிப்தை வைத்திருக்க தாம் அனுமதிப்பதாக அறிவித்தன. துருக்கியைத் தூண்டிலில் சிக்க வைக்க எடுக்கும் முயற்சி இது என்று கலீபா இரண்டாம் அப்துல் ஹமீது கருதி இக்கோரிக்கையை நிராகரித்தார்.

ஐரோப்பிய வங்கிகளுக்குச் செலுத்தவேண்டிய கடன் தொகை காரணமாக ஐரோப்பிய அரசுகட்கு அரசியல் ரீதியாகக் கட்டுப்பட வேண்டிய நிர்ப்பந்தம் எகிப்துக்குத் தொடர்ந்து உருவாகியது. இதன் விளைவாக எகிப்து நாட்டின் வருமான வழிகளைத் தம் வயமாக்க அவை முயற்சித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்காக ஆர்மீனிய தேசியவாதி ஒருவரை எகிப்தின் பிரதமராகவும், ஆங்கிலேயர் ஒருவரை நிதியமைச்சராகவும். பிரான்ஸியர் ஒருவரை பொதுநலப் பணித் திணைக்களத்தின் அமைச்சராகவும் நியமிக்க இஸ்மாயில் பாச்சா இணங்கினார். இதுவே எகிப்தின் அரசுக்கு எதிராக கி. பி. 1882 இல் கிளர்ச்சி ஏற்பட வழிவகுத்தது. இதனைச் சாட்டாக பயன்படுத்தி டெல் அல் கபிரில் பிரிட்டன் கிளர்ச்சியை அடக்கி முற்றாக எகிப்தைக் கைப்பற்றியது.

பிரான்சிய வங்கிகளிடம் பெற்ற கடனைச் செலுத்த டியூனிசியாவுக்கு முடியாது போன போது ஐரோப்பிய வல்லரசுகள் தலையிட்டு கி. பி. 1869 இல் டியூனிசியாவின் பொதுப் பணித் திணைக்களத்தைப் பரிபாலிக்கும் பொறுப்பையும் மூலப் பொருட்களைக் கையாளும் உரிமையையும் பிரான்சுக்குப் பெற்றுக் கொடுத்தன.

அதற்கு அடுத்த கட்டமாக பிரான்ஸ் டியூனிசியாவைத் தனது காலனித்துவ நாடாக்கிக் கொண்டது. இவ்வாறு ரஷ்யா போல்கன் நாடுகளையும், பிரான்ஸ் அல்ஜீரியா, டியூனிசியா நாடுகளையும். பிரிட்டன் எகிப்தையும் கைப்பற்றிக் கொண்டதால் துருக்கி தனது சனத் தொகையில் 60% ஐ இழந்ததுடன் பெருமளவிலான நிதிவளங்களையும் இழந்தது. ரஷ்யா போல்கன் நாடுகள் மீது போர் தொடுத்தபோது மேற்கொண்ட பயங்கர படுகொலைகள் காரணமாக ஏராளமான குடிமக்கள் அகதிகளாக வந்து குவிந்தனர். அவர்களை பராமரிக்க வேண்டிய சுமையும் துருக்கிக்கு ஏற்பட்டதால் பொருளாதார ரீதியாக துருக்கி முடமாகியது. எதிரிகளுக்கு முகம்கொடுக்குமுகமாக இராணுவத்தை மறுசீரமைக்கவோ நவீன போர் கருவிகளைப் பெறவோ நாட்டின் சீர்திருத்தங்களை மேற்கொள்ளவோ முடியாது திணறியது. கிலாபத்தின் வீழ்ச்சிக்கு இப் பொருளாதார வீழ்ச்சி பாதையை வெட்டிக் கொடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஐரோப்பிய நாடுகள் தமது விஞ்ஞான தொழில்நுட்ப அறிவையும், கடல் கடந்த வர்த்தகத்தினூடாகக் கிடைத்த பெரும் நிதிக் குவியலையும் பயன்படுத்தி தத்தம் இராணுவங்களை நவீனமயப்படுத்தின. அதற்கு ஈடுகொடுக்க முடியாத துருக்கி அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பெரிதும் பின்னடைந்தது. ஐரோப்பியக் கிறிஸ்தவ நாடுகள் துருக்கியில் வாழ்ந்த கிறிஸ்தவக் குடிமக்களின் நலனில் அக்கறை காட்டுவதாகக் கூறி துருக்கியின் அரசியல் விவகாரங்களில் தலையிட்டன. அதனால் தன்னைக் காத்துக் கொள்வதற்காகவேனும் சில சீர்திருத்தங்களை செய்யவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு துருக்கி உள்ளாகியது. அதனால் சுல்தான் அப்துல் மஜீதின் (1839-1861) காலத்தில் இருந்து சுல்தான் இரண்டாம் அப்துல் ஹமீத் கி. பி. 1909 இல் பதவி இறக்கப்படும் காலம் வரை பல சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இச்சீர்திருத்தங்கள் பொதுவாக "தன்ழீமாத்" என்றழைக்கப்படுகின்றன. அரசியல், பொருளாதாரம், அரச நிருவாகம், இராணுவம் முதலாம் பல்துறைகளில் இச்சீர்திருத்தம் இடம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

President - MSSD

## (அ) தன்ழீமாத் - சீர்திருத்தங்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலப் பகுதியில் துருக்கிய சாம்ராஜ்யம் ஐரோப்பிய, ஆபிரிக்க, ஆசியக் கண்டங்களைச் சேர்ந்த பல நாடுகளை உள்ளடக்கி விசாலமான நிலப்பரப்பையும் இரண்டு கோடிக்கும் அதிகமான குடிமக்களையும் கொண்டிருந்தது. இக்குடிமக்கள் பல இனக் குழுக்களையும், பல தேசங்களையும், பல சமயங்களையும் சேர்ந்தவர்களாவர். இவர்களில் 75% மேலானோர் முஸ்லிம்கள். எஞ்சியோருள் கிறிஸ்தவர்கள், யூதர்கள், கிப்தியர்கள் முதலானோர் அடங்குவர். மேற்காசியாவிலும் வட ஆபிரிக்காவிலும் முஸ்லிம்கள் அதிக எண்ணிக்கை யிலும் போல்கன் பிரதேசத்தில் கிறிஸ்தவர்கள் அதிக எண்ணிக்கையிலும் வாழ்ந்தனர். முஸ்லிம்களில் துருக்கியர், அரேபியர், எகிப்தியர், பேர்பர், அல்பேனியர், பொஸ்னியர் முதலாம் தேசிய இனங்களைச் சேர்ந்தவர்கள் இருந்தனர். கிறிஸ்தவர்களில் கிரேக்கர், பல்கேரியர், சேர்பியர் முதலாம் தேசிய இனங்களைச் சேர்ந்தவர்கள் அடங்குவர். இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகள் பலம் மிக்க ஆட்சியாளர்களின் கீழ் அடங்கியிருந்தாலும் பலவீனமான ஆட்சியாளர்களின் கீழ் பிரச்சினைகளைத் தோற்றுவிக்க வழிவகுப்பது இயல்பே.

மேற்குறித்தவாறான பல வேறுபாடுகளைக் கொண்டி ருந்த தன் குடிமக்களைப் பரிபாலிக்க துருக்கி ஷரீஆ சிந்த னையுடன் இணைந்து சென்ற "மில்லத்" கோட்பாட்டை நடைமுறைப்படுத்தியது. "மில்லத்" கோட்பாடு இறை வேதத் தையும், இறைதூதரையும், வாழ்வியலுக்கான ஓர் ஒழுக்க வரம்பையும் கொண்டுள்ள சமயக் குழுக்களை அங்கீகரித்து அவர்களுக்கு சில உரிமைகளை வழங்க வழிகோலியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கிணங்க முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், யூதர்கள், ஆர்மீனியர்கள், கிப்தியர்கள், தூருஸீக்கள் என்பவர்களுக்கு தத்தம் தனியார் சட்டங்களைப் பின்பற்றப் பூரண உரிமை வழங்கப்பட்டது. அதனை அமுல் செய்யத் தேவையான ஏற்பாடுகளையும் அரசு செய்து கொடுத்தது. நாட்டைப் பாதுகாப்பதற்காகப் போராடுவதற்காக ஒவ்வொரு முஸ்லிமும் நான்கு வருடங்கள் இராணுவ சேவையிலும், ஆறு வருடங்கள் தொண்டர் படையிலும், பத்து வருடங்கள் ஊர்காவற் படையிலும் சேவை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர். ஏனைய சமயக் குழுக்களைச் சார்ந்தவர்களுக்கு "ஜிஸ்யா" செலுத்திவிட்டு இராணுவத்தில் இணையாதிருக்கும் உரிமை வழங்கப்பட்டிருந்தது.

நாட்டைப் பரிபாலிப்பதில் இராணுவத்தினர், சிவில் நிர்வாகிகள், பிரதம அமைச்சர், பிரதம முப்தி அல்லது சேகுல் இஸ்லாம், சுல்தான் எனும் ஐந்து நிறுவனத்தினர் முக்கிய பங்கு கொண்டிருந்தனர். நாட்டின் சிவில் நிர்வாகம் சுல்தானால் நியமிக்கப்பட்ட பிரதம அமைச்சரின் தலைமையில் இயங்கியது. நீதித்துறை கலீபாவினால் நியமிக்கப்பட்ட சேகுல் இஸ்லாத்தின் கீழ் சுதந்திரமாக இயங்கியது.

மில்லத் அமைப்பு அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு சமய குழுவுக்கும் சமய சுதந்திரத்தினையும், தனியார் சட்டங்களில் பூரண சுதந்திரத்தினையும் வழங்கியதால் சிறுபான்மை சமயக் குழுக்கள் ஆரம்ப காலத்தில் நாட்டின் அமைதிக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் ஸ்திர நிலைக்கும் துணை நின்றன. ஆயினும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் செல்வாக்குப் பெற்ற தேசியவாத சிந்தனை, பல்தேசிய இனங்களிடையே சமய சிந்தனை வழியிலான சமூக வாழ்க்கைக் கோட்பாட்டை இரண்டாம் இடத்துக்குத் தள்ளியது. இதனால் ஐரோப்பிய வல்லரசு நாடுகளான ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன், ஆஸ்திரிய-ஹங்கேரி முதலாம் நாடுகள் துருக்கியின் பல்லினக் குடிமக்களைத் தேசிய உணர்வின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரில் சுதந்திரக் கோரிக்கைகளை முன்வைக்கத் தூண்டின. அதற்காக ஏற்கனவே துருக்கி வழங்கியிருந்த சமய சுதந்திரத்தை ஆயுதமாகப் பயன்படுத்தின. தேசிய உணர்வைத் தூண்டி துருக்கிய சாம்ராஜ்யத்தை சிதைக்கும் நோக்கில் செயற்பட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் நான்கு தசாப்தத்தில் ஏற்பட்ட கிளர்ச்சிகளை, போர்களை எதிர்கொண்ட துருக்கி தனது இராணுவம் மிகப் பலவீனமாக இருப்பதைக் கண்டுகொண்டது. ஆதலால் வெளியில் இருந்து வருகின்ற சவால்களுக்கு முகம் கொடுக்கவும் தனது பலவீனங்களைக் களையவும் பல சீர்திருத்தங்களை கி. பி. 1839 முதல் அறிமுகப்படுத்தியது. இச் சீர்திருத்தங்கள் பின்வரும் இலக்குகளைக் கொண்டிருந்தன.

1. நிர்வாகத் துறையில் மக்களைப் பங்குகொள்ளச் செய்தல், நிருவாகத் திறனை விருத்தி செய்தல்.
2. கல்வியை நவீனமயப்படுத்தல்.
3. இராணுவத்தை நவீனமயப்படுத்தல்.
4. வரி அறவீட்டை நேர்த்தியானதாக்குதல்.

இச்சீர்திருத்த முயற்சிகளை அறிமுகப்படுத்திய சுல்தான் முதலாம் அப்துல் மஜீத், பல்துறை அனுபவமும் ஆற்றலுமுடைய தனது முதலமைச்சர் முஸ்தபா ரசித் பாச்சாவின் ஆலோசனையுடன் சீர்திருத்தங்களை முன்னெடுத்தார். அதன் முதற்கட்டமாக சட்டத்தின் முன் குடிமக்கள் அனைவரும் சமமானவர்கள் என்று கி. பி. 1839 இல் பிரகடனப்படுத்தினார். பல்வேறு அமைச்சுகளைச் சேர்ந்த பிரமுகர்களையும் உயர் அதிகாரிகளையும் உள்ளடக்கிய ஒரு சபை, சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டது. புதிய பிரேரணைகள் இங்கு கலந்துரையாடப்பட்டு ஈற்றில் அங்கீகாரத்துக்காக சுல்தானிடம் சமர்ப்பிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சபை கி. பி. 1861 இல் மேலும் விஸ்தரிக்கப்பட்டு சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை எனும் மூன்று துறைகளிலும் சீர்திருத்தம் மேற்கொள்ள தனித்தனி மூன்று குழுவினர் அச்சபையினரில் இருந்து உருவாக்கப்பட்டனர். ஒவ்வொரு குழுவினரதும் அதிகார வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இதனால் சுல்தான், அரச மாளிகை உறுப்பினர்கள், கவர்னர் முதலானோரின் சட்ட ஆக்க உரிமை குறைந்தது. பிரதம அமைச்சரும் ஏனைய அமைச்சர்களின் நல்லெண்ணத்தைப் பெற்றே முடிவுகள் எடுக்க வேண்டியதாகியது.

இராணுவத்தை நவீன மயப்படுத்தும் நோக்காக மேலதிகாரிகளை ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பி பயிற்சியளித்ததுடன் ரஷ்ய, பிரித்தானிய நிபுணர்களை அழைத்தும் ஆயுதப் படைகளுக்குப் பல்துறைப் பயிற்சி அளித்தனர்.

மத்ரஸா அமைப்பில் இருந்த கல்வித்திட்டத்தை மாற்றி சமய சார்பற்ற மேற்கின் கல்வியமைப்பை அறிமுகப்படுத்தினர். போதனா வழிமுறையும், பாடத்திட்டமும் மாற்றியமைக்கப்பட்டன. வெளியேறும் மாணவர்கள் பெற்றிருக்க வேண்டும் என்று எதிர்பார்த்த இலக்கும் வித்தியாசமானதாக இருந்தது. கி. பி. 1869 இல் அறிமுகப்படுத்திய பொதுக் கல்வி பற்றிய மசோதா கல்வித்துறையின் நிருவாக அமைப்பையும் மறுசீர் அமைத்தது. சமய சார்பற்ற கல்வி, விஞ்ஞானத் தொழில்நுட்பக் கல்வி என்பன பெரிதும் ஊக்குவிக்கப்பட்டன. நிர்வாக சீர்திருத்தங்கள் அதிக பணச் செலவை எதிர்கொண்டன. அதனைத் திரட்ட வரி சேகரிப்பு முறையிலும் பெருமாற்றம் அறிமுகப்படுத்தப்பட்டது.

அறிமுகப்படுத்தப்பட்ட இத்தகு சீர்திருத்தங்களால் உதுமானிய சமூகத்தின் இயல்புகளில் மாற்றங்கள் தோன்றின. சமய சார்பற்ற சக்திகள் செல்வாக்குப் பெற்றன. இளம் துருக்கியர் என்ற குழு உருவாவதற்கும், அக்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. பி. 1909 இல் கலீபாவை பதவி இறக்குவதற்கும் சமய சார்பற்ற சிந்தனைப் போக்கு துணையாகியது. உதுமானியப் பேரரசைக் காப்பதற்காக எடுத்த இச்சீர்திருத்த முயற்சிகள் வெற்றிதரவில்லை என்றே வரலாற்றாசிரியர்கள் கருதுவர். அதற்குப் பின்வரும் காரணிகளை அவர்கள் காணிபித்தனர்:

i. முற்றுகையாளர்களிடமிருந்து தம் நாட்டைக் காப்பாற்றத் தேவையான நடவடிக்கைகளுக்காக ஐரோப்பிய வங்கிகளில் இருந்த வட்டிக்கு எடுத்த கடனிலிருந்து மீளமுடியாது போனமை.

ii. அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் ஐரோப்பாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு பொது மக்களிடம் திணிக்கப்பட்டமை.

iii. முஸ்லிம் அறிஞர்கள் குழாம் தமது சமய கலாசாரப் பின்னணியில் இருந்து சமூக முன்னேற்றத்துக்குத் தேவைப்படும் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தத் தவறியமை.

iv. உள்நாட்டில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் மில்லத் கோட்பாடு வழங்கிய சுதந்திரத்தைப் பயன்படுத்தி ஐரோப்பிய சக்திகளுக்கு சார்பாக ஐந்தாம் படையாக செயற்பட்டமை.

v. வடக்கில் இருந்து ரஷ்யாவும் தெற்கே பிரிட்டனும் பிரான்சும் துருக்கியப் பிரதேசங்களைக் கைப்பற்ற ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டமை.

தன்ழீமாத் சீர்திருத்தம் சமய சிந்தனை வழியில் அமையாதிருந்தமை மட்டுமன்றி சமய சிந்தனையைப் புறந்தள்ளுவதாகவும் இருந்தமைதான் தன்ழீமாத் தோல்வி யடையக் காரணம் என்று முஹம்மத் அப்துஹு கருதுகின்றார். தன்னை ஸ்திரப்படுத்தி முன்னேற்றம் காண உதவும் என்று கருதி துருக்கி மேற்கொண்ட சீர்திருத்த முயற்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனற்றுப்போனது மட்டுமன்றி கிலாபத்துக்கு எதிராக இயங்கும் துருக்கிய இளைஞர் குழு ஒன்று உருவாகவும் வழிவகுத்தது. கலீபா அப்துல் ஹமீதைப் பதவியில் இருந்து துரத்த வேண்டும் என்று அவர்கள் குரல்கொடுத்தனர். இதனால் இருபதாம் நூற்றாண்டின் முதல் தாசப்தத்துக்குள்ளே துருக்கிய சுல்தானுக்கு எதிராக செயற்படக்கூடிய துருக்கிய பிரசைகள் குழு உருவாகியது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் இருந்தே ஐரோப்பிய அரசுகள் துருக்கியில் வாழும் சிறுபான்மைக் கிறிஸ்தவக் குடிமக்களுக்கு அதிக உரிமைகளை வழங்க வேண்டும் என்று நிர்ப்பந்தித்தன. துருக்கி மேற்கொண்ட சீர்திருத்த முயற்சிகளூடாக பல சலுகைகளை வழங்கியபோதும் ஐரோப்பிய அரசுகள் அதனைக் கொண்டு திருப்தியடையாது துருக்கியின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களைக் கைப்பற்றவே முயற்சித்தன.

## (ஆ) துருக்கி மீதான ரஷ்ய படையெடுப்பு

கி. பி. 1853-1856 காலப்பகுதியில் ரஷ்யாவுக்கும் துருக்கிக்கும் இடையில் நடந்த கிரிமியன் யுத்தம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தாலும், போரின் முடிவில் பிரான்ஸில் வைத்துக் கையொப்பம் இட்ட சமாதான உடன்படிக்கையின்படி துருக்கியின் ஆட்சிக்குட்பட்டிருந்த பிரதேசங்கள் மீதான துருக்கியின் ஆட்சியுரிமையை ஐரோப்பிய நாடுகள் அங்கீகரித்தன. இதனை மீறி ரஷ்யா கி. பி. 1877 இல் டான்யூப் நதியினைக் கடந்துவந்து துருக்கியைத் தாக்கியது. ரஷ்யாவின் மற்றொரு படைப் பிரிவு துருக்கியின் கிழக்குத்திசையூடாகவும் தாக்கியது. இப்பின்னைய பகுதியில் வாழ்ந்த துருக்கியப் பிரசைகளான கிறிஸ்தவர்கள், துருக்கிக்கு எதிராக சகல வழிகளிலும் ரஷ்யாவுக்கு உதவி செய்தனர். இப்போரில் துருக்கி ஏராளமான போர் வீரர்களையும் போர் ஆயுதங்களையும் இழந்தது. பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கையிலான சாதாரண முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டனர். இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் முஸ்லிம் அகதிகள் தலைநகர் இஸ்தாம்பூலில் தஞ்சமடைந்தனர். போல்கன் குடாநாட்டு முஸ்லிம்கள் பெரும் எண்ணிக்கையில் படுகொலை செய்யப்பட்ட முதல் நிகழ்வு இதுவாகும். கி. பி. 1878 மார்ச் மாதத்தில் ரஷ்யாவும். தோல்வியைத் தழுவிய துருக்கியும் உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட்டன. இவ்வுடன்படிக்கையின்படி போல்கன் குடாநாடுகளில் ரஷ்யாவின் ஆதிக்கம் வலுவடையும் என்பதால் பிரித்தானியாவும் பிரான்சும் இவ்வுடன்படிக்கையை எதிர்த்தன. இதனால் கி. பி. 1878 ஜுலையில் பெர்லின் நகரில் ஐரோப்பிய அரசுகள் சமாதான மகாநாட்டைக் கூட்டின. இங்கு கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கையின்படி.

i. பல்கேரியாவின் வடபகுதி ரஷ்யாவின் வழிகாட்டலில் சுதந்திரமாக இயங்க அனுமதிக்கப்பட்டது.

ii. ருமேனியாவின் கிழக்குப் பகுதி துருக்கியின் பரிபாலனத்தில் இருக்கும் என்றும் இதன் பரிபாலனம் முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களையும் உள்ளடக்கிய நிர்வாகக் குழுவால் மேற்கொள்ளப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்நிருவாகக் குழு வல்லரசுகளின் மேற்பார்வையில் விடப்பட்டது.

iii. பல்கேரியாவின் தென்பகுதி துருக்கியின் நேரடி பரிபாலனத்தில் விடப்பட்டது.

iv. சேர்பியாவுக்கும் மொன்டெனகுரோவுக்கும் சுதந்திரம் வழங்கப்பட்டது. சைபிரஸ் பிரித்தானியாவிடம் கையளிக்கப்பட்டது.

v. வருடந்தோறும் 350000 குருவு நாணயங்கள் ரஷ்யாவுக்குக் கொடுக்கவும் துருக்கி இணங்க வேண்டிய தாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர்லினில் நடைபெற்ற சமாதான மகாநாட்டின் முடிவு ஐரோப்பிய பிரதேசங்கள் மீதான துருக்கியின் பிடியை நன்கு தளர்த்தியது. அல்பேனியா மட்டுமே ஸ்தான்பூலின் ஆதிக்கத்தின் கீழ் மிஞ்சியிருந்தது.

## (இ) சுல்தான் இரண்டாம் அப்துல்ஹமீத் கலீபா பதவியில் இருந்து வெளியேற்றப்படல்

பதவியேற்ற முதல் இருவருடங்களில் இக்கசப்பான அனுபவத்தைப் பெற்றுக் கொண்ட சுல்தான் இரண்டாம் அப்துல்ஹமீத் துருக்கி எதிர்கொள்ளும் பயங்கர அச்சுறுத்தலுக்குத் தொடர்ந்தும் முகம் கொடுக்க வேண்டியவரானார்.

குர்ஆன், சுன்னா, ஹனபி மத்ஹப் பிக்ஹ் முதலானவற்றை இளமையில் கற்று புலமை பெற்றிருந்த அப்துல்ஹமீத் நக்ஷபந்தி தரீக்காவில் சேர்ந்து ஆன்மீகப் பயிற்சிகளையும் பெற்றிருந்தார். அதனால் வணக்க வழிபாடுகளில் அதிக ஆர்வம் காட்டினார். சமகாலப் பிரச்சினைகள் பற்றி தன்ழீமாத் முயற்சிகளில் ஈடுபட்ட அறிஞர்களுடனும், வங்கி முகாமையாளர்களுடனும் அரசியல் விற்பன்னர்களுடனும் கலந்துரையாடி விடயங்களை அறிந்துகொள்ளும் பண்புடையவராகவும் இருந்தார்.

தன்ழீமாத் சீர்திருத்த முயற்சிகளுடன் வளர்ந்த இளம் துருக்கியர்கள் கலீபா அப்தல் அஸீஸை கி. பி. 1876 இல் பதவியிறக்கி, இரண்டாம் அப்துல்ஹமீதிடம் அரசியல் யாப்பை உருவாக்கும் வாக்குறுதியை வாங்கிக்கொண்டே அவரை கலீபாப் பதவியில் அமர்த்தினர். இச்சதிமுயற்சியில் ஈடுபட்ட மித்ஹா பாச்சாவின் தலைமையில் யாப்பு உருவாக்கப்பட்டு 23.12.1876 இல் தேர்தல் நடத்தி தேசிய அசெம்பிளியை உருவாக்கினர். இத்தேசிய அசெம்பிளி கலீபாவை விமர்சித்ததால் கி. பி. 1878 இல் கலீபா இதனை இடைநிறுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் உலகின் ஆதரவைப் பெறும் நோக்கில் சுல்தான் அப்துல்ஹமீத் தன்னை முழு முஸ்லிம் உலகின் கலீபாவாக அறிமுகப்படுத்தி உலகளாவிய முஸ்லிம் பிரமுகர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். ஹஜ்ஜாஜிகளின் வசதி கருதி டமஸ்கஸில் இருந்து மதீனாவுக்கான ஒரு ரயில் பாதையை உள்நாட்டு முஸ்லிம் தனவந்தர்களதும் முஸ்லிம் உலகின் கொடைவள்ளல்களதும் நிதியுதவியைப் பெற்று அமைத்தார்.

உற்பத்தியைப் பெருக்கக்கூடியதான வெளிநாட்டு மூலதனங்களை வரவேற்றார். துருக்கி வெளிநாட்டு வங்கிகளுக்கு செலுத்தவேண்டியிருந்த 23 பில்லியன் குர்ஷ் நாணயக் கடனை அவ் வங்கிகளுடன் கதைத்து 12 பில்லியன்களாகக் குறைத்தார். வட்டியாக வருவாயின் 80% ஐ பஜட்டில் இருந்து கி. பி. 1878 முதல் கொடுக்க வேண்டி யிருந்தது. இதனை வரவு செலவுத் திட்டத்தின் 20% மாகக் குறைக்கச் சக்தி பெற்றார். நாட்டின் உற்பத்தியைப் பெருக்கி கி. பி. 1908 இல் வருமானத்தை 40 % வீதத்தால் அதிகரித்தார். இதனால் வட்டியாக வரவு செலவுத் திட்ட வருமானத்தில் 7% மட்டுமே செலுத்த வேண்டியதாகியது. நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் சுல்தான் ஓரளவு வெற்றிகண்ட போதும் தன்னைப் பதவியில் அமர்த்திய இளம் துருக்கியருடன், தேசிய அசெம்பிளியை இடைநிறுத்தியதன் விளைவாக முரண்படவேண்டியேற்பட்டது. பதவி இறக்கப்படும் காலம் வரை அடக்குமுறை ஆட்சியையே கலீபா மேற்கொண்டிருந்தார். பத்திரிகைத் தணிக்கையை அமுல்படுத்தி, பொதுக் கூட்டங்களை தடைசெய்து, ஒற்றர்களின் செய்திகளை நம்பி எதிரணியினரைக் கொடுமைப்படுத்தும் வேலைகளையும் செய்தார். இதனால் இளம் துருக்கியர்களால் வழிநடாத்தப்பட்டவர்கள் C. U. P. (Committee for Union and Progress) எனும் பெயரில் இரகசியமாக இயங்கினர். இவ்வியக்கத்தில் அரசாங்க உத்தியோகத்தர்களில் உயர் பதவிகளில் கடமையாற்றியவர்கள். எழுத்தாளர்கள், இராணுவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரர்கள் போன்றோரும் சேர்ந்திருந்தனர். இவர்களின் கடும் எதிர்ப்புக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை கலீபாவுக்கு உருவாகியது.

இப்பின்னணியில் கி. பி. 1909 மார்ச் 31 ஆம் திகதி ஒரு பெரும் கிளர்ச்சி தோன்றியது. துருக்கிய சாம்ராஜ்யத்தின் வரலாற்றில் ஒரு திருப்பு முனையைத் தோற்றுவிக்க சக்திபெற்ற இக்கிளர்ச்சியை முன்னெடுத்தவர்கள் யார் என்பது பற்றிய கருத்து வேறுபாடு அறிஞர்களிடையே உண்டு. சமய சார்பற்ற மேற்கு சிந்தனையின் வழி நாட்டை வழிநடத்த எடுத்த முயற்சிக்கு எதிரானவர்கள் இக்கிளர்ச்சியை முன்னெடுத்தனர் என்று ஒரு சாரார் கருதுவர். ஆளும் வர்க்கத்தின் அடக்கு முறைக்கு எதிராக சமயவாதிகளும் பிற்போக்கு வாதிகளும் கிளர்ச்சியை முன்னெடுத்தார்கள் என்று பிறிதொரு சாரார் கருதுவர். கலீபாவைப் பதவி இறக்குவதற்காக வெளிநாட்டு சக்திகளின் துணையுடன் Committee for Union and Progress குழுவினர் மேற்கொண்ட கிளர்ச்சி இது என்று இன்னொரு சாரார் கூறுவர். இவர்கள் சமயவாதிகளைத் தூண்டி கிளர்ச்சியை முன்னெடுத்தனர். இதனால் தலைநகர் இஸ்தான்பூலில் அமைதி குலைந்தது. அமைதியை நிலைநாட்டுவதற்காக முஸ்தபா கமாலின் சொந்தவூரான செலோனிகாவில் இருந்து அழைத்துவந்த வீரர்களே ஊர்வலம் சென்றவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். கிளர்ச்சிக்காரர்கள் “எங்களுக்கு ஷரீஆ தேவை; எங்களுக்கு பிரதம அமைச்சர் ஹுசைன் ஹில்மி பாச்சா தேவையில்லை” என்பன போன்ற சுலோகங்களை மொழிந்தனர்.

சமயம் சார்பானவர்களைத் தம்பக்கம் இணைத்துக் கொள்ளும் நோக்குடனும் தமது உண்மையான தோற்றத்தை மறைத்துக்கொள்ளும் நோக்கத்துடனும் கிளர்ச்சிக்காரர்கள் இத்தகைய சுலோகங்களைக் கூறினார்கள் என்று கருதப்படுவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு தினங்கள் நீடித்த இக் கிளர்ச்சியைக் கட்டுப்படுத்த மஸிடோனியாவில் இருந்த ஒரு படைப் பிரிவு மார்ஷல் மஹ்முத் செவகட் என்பவரின் தலைமையில் இஸ்தான்பூல் வந்தது. இவ்விரு படைப் பிரிவுகளும் மோதிக் கொள்வதைத் தவிர்ப்பதற்காக இப்பின்னைய படைப் பிரிவை தானே அழைத்ததாக கலீபா பிரகடனப்படுத்தி இரு பிரிவினரும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யக் கூடாது என்றும் அவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் செய்வதாயின் தன்னை முதலில் கொன்றுவிட்டு துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார். கலீபாவின் முயற்சியால் இருபடைப் பிரிவுகளும் தத்தம் முகாம்களுக்குத் திரும்பிச் சென்றன.

தனக்குப் போட்டியாக அமைந்த தேசிய அசெம்பிளியை ஓரம்கட்ட நினைத்தே கலீபா திட்டமிட்டு கிளர்ச்சியை உருவாக்கினார் என்று கலீபா மீது குற்றம் சாட்டினர். கிளர்ச்சியில் கலீபாவுக்கு எதுவிதப் பங்கும் இல்லை என்றே அறிஞர்கள் பலர் கருதுவர். நாட்டில் அமைதியை நிலைநாட்டும் நோக்கில் கிளர்ச்சிக்காரர்களை அமைதிபடுத்தவே கலீபா கடுமையாக முயற்சித்தார் என்று அவர்கள் கருதுகின்றனர்.

ஆளும் குழுவைச் சேர்ந்த தலாது பாச்சாவும் இக்கிளர்ச்சியில் கலீபாவுக்குப் பங்கில்லை என்றே கூறியுள்ளார். தனக்கு இக்களிர்ச்சியில் எவ்விதப் பங்கும் இல்லை என்றும். தன்மீது விருப்பம் இல்லையேல் தான் பதவி துறக்கத்தயார் என்றும் கலீபா அறிவித்தார். இக்கிளர்ச்சியில் தனக்குப் பங்குண்டா என்பதனைப் பற்றி ஆராய உயர் நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட ஒரு குழுவை அமைக்கலாம் என்றும் அவர் அறிவுறுத்தினார். கலீபா நிரபராதி என்ற தீர்ப்பை இக்குழு வழங்கினால் தம் நிலை என்னவாகும் என்று பயந்த தேசிய அசெம்பிளி சார்பானவர்கள் இந்த யோசனையை நிராகரித்தனர். இத்தகையதொரு பின்னணியில் ஹரகத் ஓர்தூசு (Harakath Ordusu) எனப்பட்ட படைப் பிரிவு சுல்தான் அப்துல் ஹமீதின் மாளிகையை முற்றுகையிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரடங்குச்சட்டத்தையும் பிரகடனப்படுத்தியது. இப்படைப் பிரிவு கிளர்ச்சிக்குத் துணையாக இருந்தவர்களைக் கைதுசெய்து தூக்கிலிட்டது. சமய சார்பான பிற்போக்குவாதிகளைக் கொண்ட "இத்திஹாத்-இ- முஹம்மத்-இ-சியாமதி" குழுவின் தலைவரான தர்வேஷ் வஹ்ததி என்பவரையும் தூக்கிலிட்டனர்.

240 பிரதிநிதிகளையும் 34 பிரபுக்களையும் உள்ளடக்கிய தேசிய அசெம்பிளி கி. பி. 1876 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட யாப்பின் அடியாக உருவாக்கப்பட்டது. இந்த யாப்பில் காலியாகும் கலீபாப் பதவி எவ்வாறு நிரப்பப்பட வேண்டும் என்ற வழிமுறையைக் குறித்திருந்தாலும் கலீபா ஒருவரைப் பதவி நீக்குவது எவ்வாறு என்று எதனையும் குறிப்பிடவில்லை. ஆதலால் இராணுவப் புரட்சி மூலம் அல்லது செய்குல் இஸ்லாத்தின் பத்வாவைக் கொண்டு பதவி இறக்கும் மரபு ரீதியான வழிமுறையைக் கையாண்டு கலீபாவைப் பதவி நீக்கம் செய்ய வேண்டியிருந்தது. சுல்தான் முஸ்தபா (கி. பி. 1617-1623) செய்குல் இஸ்லாம் முஹம்மத் இஸ்ஸத் எபந்தி (இறப்பு கி. பி. 1625) யின் பத்வாவின் மூலம் பதவி இறக்கப்பட்டார். பொது மக்களின் எதிர்ப்பைத் தவிர்க்கும் நோக்காக இப் பின்னைய வழிமுறையை தேசிய அசெம்பிளி பின்பற்ற முடிவெடுத்தது.

கலீபாவைப் பதவி இறக்குவதற்காக பத்வாவைப் பெறும் பொறுப்பு தலாது பாச்சாவிடம் ஒப்படைக்கப்பட்டது. தேசிய அசெம்பிளிக்கு சேகுல் இஸ்லாத்தைக் கூட்டிச் சென்றனர். தேசிய அசெம்பிளியின் தலைவராக செய்யத் பாச்சா இருந்தார். இந்த அவையில் கலீபாவைப் பதவி இறக்கும் பத்வாவை எழுத சேகுல் இஸ்லாம் மறுத்தார். அந்த பத்வாவை ஹமீத் யாஸிர் எபந்தி என்பவர் எழுதினார். அதிற் கையொப்பமிட வற்புறுத்தப்பட்டார். அதற்கு மறுத்தபோது காரணம் கேட்டனர். கலீபா அப்துல் ஹமீதைத் தான் குற்றவாளியாகக் காணவில்லை என்று பதில் உரைத்தார். கையொப்பம் இடாதிருந்தால் முற்றுகையிடப்பட்டுள்ள நிலையில் உள்ள கலீபாவைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொன்றுவிடுவர் என்று பயமுறுத்தியதினால் அவர் அந்த பத்வாவில் கையொப்பமிட்டார். கையொப்பமிட்ட அன்றைய தினமே தேசிய அசெம்பிளியில் அதனைச் சமர்ப்பித்து அதன் அங்கீகாரத்தைப் பெற்று சுல்தான் அப்தல் ஹமீதைக் கலீபாப் பதவியிலிருந்து நீக்கினர். அவரது சகோதரரை முஹம்மத் கான் என்ற பெயரில் பதவியில் அமர்த்தினார். அவர் ஒரு கைப்பாவையாக செயற்படவே அனுமதிக்கப்பட்டார்.

தேசிய அசெம்பிளியின் முடிவை அறிவிக்கச் சென்ற நால்வர் குழுவில் தேசிய அசெம்பிளியில் செலோனிகாவைப் பிரதிநிதித்துவப்படுத்திய கராசு (KARASU) என்ற யூதனும் இருந்தான். பலஸ்தீனை யூதர்கள் வசம் பெற முயற்சி செய்த யூதர் குழுவைச் சேர்ந்தவன் இவன் என்று கூறப்படுவதுண்டு. துருக்கிய சாம்ராஜ்ஜியத்தை சிதைக்க விரும்பிய மேற்குலகத்தினதும் யூதர்களினதும் அபிலாஷையை நிறைவேற்றும் ஒரு கட்டமாகவே கலிபாவைப் பதவி இறக்குவது அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ஈ) முதலாம் உலகப் போரில் துருக்கி

துருக்கியின் அரசியல் ஸ்திரமற்ற தன்மையை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி கி. பி. 1908 இல் ஆஸ்திரியா பொஸ்னியாவைக் கைப்பற்றிக் கொண்டது. போல்கன் பிரதேச நாடுகள் தேசியவாதச் சிந்தனையின் தாக்கத்தால் சுதந்திரக் கோரிக்கையை முன்வைத்தன. முஸ்லிம்களை அதிகமாகக் கொண்டிருந்த அல்பேனியா, அல்பேனிய மொழிக்கும் கலாசாரத்துக்கும் முதன்மை வேண்டும் எனக்கேட்டு சுதந்திரம் கோரியது. இதனைக் கட்டுப்படுத்த முயற்சித்துக் கொண்டிருக்கும் போது கி. பி. 1911 இல் இத்தாலி துருக்கியிடம் இருந்த லிபியாவைக் கைப்பற்றிக் கொண்டது. துருக்கியப் படை லிபியாவை மீளக் கைப்பற்ற முயற்சித்த போது சேர்பியா கொசோவாவை அபகரித்துக்கொண்டது. பல்கேரியர் "எதிரின்" நகரைக் கைப்பற்றினர். இதன்போது பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் ஈவிரக்கமின்றி கிறிஸ்தவர்களால் படுகொலை செய்யப்பட்டனர். பத்து இலட்சத்துக்கும் அதிகமானோர் அகதிகளாக இஸ்தம்பூலை அடைந்தனர். கி. பி. 1913 இல் இடம்பெற்ற போல்கன் போரில் துருக்கி தன் ஐரோப்பியப் பிரதேசங்களை இழந்துவிட்டது.

இத்தகையதொரு சூழலில்தான் கி. பி. 1914 ஜுலை 28 ஆம் திகதி உலக யுத்தமே ஆரம்பமாகியது. ஆஸ்திரிய இளவரசர் பிரான்ஸிஸ் பேர்டினன்டை சேர்பியன் ஒருவன் சுட்டுக் கொன்றதால் ஆஸ்திரியா சேர்பியாவின் மீது போர்ப் பிரகடனம் செய்தது. ஆஸ்திரியாவுக்கு உதவியாக ஜெர்மனி களத்தில் இறங்கியது. ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய மூன்று வல்லரசுகளின் கூட்டமைப்பு சேர்பியாவுக்கு சார்பாகக் களம் இறங்கியது. இப்போரில் நடுநிலை வகிக்கவேண்டும் என்பது துருக்கிய மக்களதும் உலகளாவிய முஸ்லிம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களதும் எதிர்ப்பார்ப்பாக இருந்தது. எனினும் எவரும் எதிர்பாராத விதமாக துருக்கி ஜெர்மன் சார்பாக யுத்தத்தில் குதித்தது.

கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக துருக்கியின் மீது ஐரோப்பிய நாடுகள் போர் தொடுத்த போதெல்லாம் பிரிட்டன் மறைமுகமாகவேனும் துருக்கி சார்பாகவே செயற்பட்டது. கி. பி. 1798 இல் நெப்போலியன் எகிப்தைக் கைப்பற்றிய போதும், கி. பி. 1853-56, கி. பி. 1877 ஆண்டுகளில் ரஷ்யா துருக்கியப் பிரதேசங்களைத் தாக்கிய போதும் துருக்கிக்கு சார்பாகவே பிரிட்டன் செயற்பட்டது. இத்தகு செயற்பாட்டின் நோக்கம் துருக்கியின் நலன் என்பதைவிட ரஷ்யா துருக்கியூடாக வந்து மத்தியதரைக் கடலில் ஆதிக்கம் செலுத்தி தனக்குப் போட்டியாக வளர்வதைத் தவிர்ப்பதாகும். ஆதலால், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் துருக்கி அரசை ரஷ்யாவுக்கு எதிரான ஒரு கேடயமாக வளர்த்துவிட விரும்பியே பிரிட்டன் செயற்பட்டது. ஆயினும் தனது நலன் துருக்கியுடன் நேரடியாகக் குறுக்கிட்டபோது துருக்கியின் கீழ் இருந்த எகிப்தையோ, சைப்பிரசையோ தன்னாதிக்கத்தில் கொண்டுவருவதற்கு பிரிட்டன் தயங்கவில்லை. துருக்கி பிரிட்டனுடன் தனக்கு இருந்த சுமுக உறவைப் பயன்படுத்தி, முதலாம் உலக மகாயுத்தத்தில் பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா என்ற முக்கூட்டணிக்குச் சார்பாக நின்று போரிடவே விரும்பியது. இக் கோரிக்கையை இம்முக்கூட்டு வல்லரசுகள் நிராகரித்தன. இப் போரில் துருக்கி நடுநிலை வகிக்க வேண்டும் என்று அவை விரும்பின. பிரிட்டன் இத்தகையதொரு முடிவை ஆதரிக்கக் காரணம் ரஷ்யாவைப் பகைத்துக்கொள்ள விரும்பாமையாகும். துருக்கியப் பிரதேசங்களைக் கைப்பற்றும் நோக்கில் கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக ரஷ்யா முயற்சித்தது. இப்போரின் மூலம் துருக்கியப் பிரதேசங்களூடாக மத்திய தரைக்கடலை அடைவதையே அது தன் நோக்கமாகக் கொண்டிருந்தது. இதனை அறிந்திருந்த துருக்கி தனது அனடோலியா பிரதேசத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் ஏற்கனவே இழந்த போல்கன் குடாநாடுகளை மீளக் கைப்பற்றிக் கொள்வதற்குமாகவே போரில் பங்குகொள்ள விரும்பியது. நடுநிலை வகிப்பதால் இது சாத்தியமில்லை. ஆதலால், சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து ஜெர்மனியையும் பகைத்துக்கொள்ளாது கவனமாகச் செயற்பட்டது.

இளம் துருக்கியர்கள் (C.U.P.) தான் துருக்கிய கலீபாவை வழிநடத்தினர். இக்குழுவைச் சேர்ந்த தலாது பாஷ்ஷா உள்நாட்டமைச்சராகவும், அன்வர் பாஷ்ஷா பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்தனர். அன்வர் பாஷ்ஷா மிகவும் இரகசியமாக ஜெர்மனியுடன் பேச்சு வார்த்தை நடாத்தி கி. பி. 1914.08.02 ஆம் திகதி இரகசிய உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டிருந்தார். கி. பி. 1913 இல் போல்கன் போரில் தனது பொருளாதார பலத்தைப் பெருமளவில் இழந்திருந்ததால் போரில் பங்குகொள்ளக்கூடிய சக்தி உண்மையில் துருக்கிக்கு இருக்கவில்லை. எனினும் ஜெர்மனிய, ஆஸ்திரியப் படைகள் ஆரம்ப கட்டத்தில் அடைந்த வெற்றி, தான் இழந்த போல்கன் நாடுகளை மீளக் கைப்பற்றுவதில் கொண்ட ஆவல் என்பன துருக்கியைக் களமிறங்கத் தூண்டின. துருக்கி ஜெர்மனி சார்பாகக் களமிறங்கியதால் கி. பி. 1914 நவம்பர் ஐந்தாம் திகதி முக்கூட்டு வல்லரசுகள் துருக்கியின் மீது போர்ப் பிரகடனம் செய்தன. அதனை அடுத்து பிரிட்டன் இராணுவ ரீதியாக மட்டுமன்றி இராஜதந்திர ரீதியாகவும் துருக்கிக்கு எதிராகச் செயற்படலாயிற்று. தனது ஆட்சிக்குட்பட்டிருந்த இந்திய உபகண்டத்தின் ஆள்வளம், மத்திய கிழக்கின் அறபு சமூகம், அவ்வப் பிரதேசங்களின் பொருள் வளம் அனைத்தையும் அது துருக்கிக்கு எதிராகப் பயன்படுத்தியது. எகிப்து, சிரியா, ஜோர்தான், லெபனான் பிரதேசங்களில் கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக தோற்றுவித்து வளர்த்த தேசியவாத சிந்தனையின் பலனை அறுவடை செய்ய முனைந்த அரேபியர்களை துருக்கிக்கு எதிராக போரில் குதிக்க ஊக்குவித்தது. மத்திய கிழக்கில் வாழ்ந்த கிறிஸ்தவர்களைத் தூண்டி துருக்கிக்கு எதிரான கிளர்ச்சிகளை முன்னெடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிட்டன் தனது ஆட்சிக்குட்பட்டிருந்த இந்தியாவில் பத்து இலட்சம் போர் வீரர்களைக்கொண்ட ஒரு படையைக் கட்டி எழுப்பியது. இந்தியாவில் டில்லிக்கும் பெஷாவருக்கும் இடையே வாழ்ந்த மக்களில் இருந்தே இப்பெரும் படையின் பெரும் பகுதியினர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இப் போர்வீரர்களில் பெரும்பான்மையினர் முஸ்லிம்களே. அதே போல பிரிட்டன் எகிப்திலிருந்தும் பெரும் எண்ணிக்கையிலான முஸ்லிம் போர் வீரர்களைத் திரட்டியது. பிரான்சும் அல்ஜீரியாவிலிருந்து ஏராளமான முஸ்லிம் வீரர்களைப் படை அணியில் சேர்த்தது. இம்மூன்று நாட்டிலும் திரட்டிய முஸ்லிம் படை வீரர்களை முஸ்லிம் நாடாகிய துருக்கியை எதிர்த்துப் போராடப் பயன்படுத்தினர். ஈராக், எகிப்து, வட ஆபிரிக்கா, பலஸ்தீன், சிரியா முதலாம் முஸ்லிம் நாடுகளில் இப்படை வீரர்கள் துருக்கியப் படையை எதிர்த்துப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

துருக்கியின் மீது போர் தொடுத்த பின் பிரிட்டன் ஒன்றுக்கு ஒன்று முற்றிலும் வேறுபட்ட சில உடன்படிக்கைகளை நயவஞ்சகமாக செய்து கொண்டது.

பிரிட்டனின் பிரதிநிதியான ஹென்றி மக்மோஹன் அறேபியாவில் வளர்ந்த தேசியவாத சிந்தனையைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி மக்கா, மதீனா உட்பட்ட அறபுப் பிரதேசங்களின் துருக்கிய கவர்னராகக் கடமையாற்றிய ஷரீப் ஹுசைன் என்பவருடன் ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டான். இவ்வுடன்படிக்கை மூலம் ஷரீப் ஹுசைன் பிரிட்டிஷாருக்கு ஆதரவாக செயற்படக் கடமைப்பட்டார். பிரதியுபகாரமாக ஷரீப் ஹுசைனுக்கு சுதந்திரமான அறபு நாடு ஒன்றை உருவாக்கிக் கொடுக்க பிரிட்டன் உடன்பட்டது. ஸவுதி அரசின் அமீர் அப்துல் அஸீஸ் இப்னு ஸவுத் உடன் பிரிட்டன் மற்றொரு உடன்படிக்கை செய்து கொண்டது. அதன்படி ஷரீப் ஹுசைனுக்கு எதிராக ஸவுதி செயற்படாதிருக்கவும், பிரதியுபகாரமாக அமீர் அப்துல் அஸீஸிற்கு நிதியுதவி செய்யவும் பிரிட்டன் வாக்குறுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளித்தது. இதன்மூலம் மத்திய கிழக்கின் அரேபியர்களை துருக்கிக்கு எதிராக கிளர்ச்சி செய்யவும் போராடவும் பிரிட்டன் தூண்டியது. அறபுத் தேசியவாதத்தின் நப்பாசையைத் தனக்கு சாதகமாக்கிக் கொண்ட பிரிட்டன், உலகளாவிய யூதர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ளும் முகமாக கி. பி. 1917 இல் ஸியோனிஸத் தலைவர்களுடன் பல்பூர் உடன்படிக்கையை மிக இரகசியமாகச் செய்து கொண்டது. இதன்படி அரேபியர்களுடைய நிலமான பலஸ்தீனில் ஸியோனிஸ்ட்களுக்கான ஒரு புதிய நாட்டை உருவாக்கித் தருவதாக வாக்களித்தது. இது தம்மை ஆதரித்த அரபுகளின் முதுகில் குத்துவதாக மட்டுமன்றி முஸ்லிம் உலகின் மீது படை எடுப்பதாகவும் அமைந்தது. அதே வேளை தனது இந்திய முஸ்லிம் குடிமக்களை அமைதிப்படுத்தவும், போருக்கான ஆள் வளத்தைப் பெற்றுக் கொள்ளும் முகமாகவும் பிரிட்டிஷ் அரசு பின்வருமாறு அறிவித்தது: "துருக்கியுடன் தாம் மேற்கொண்டுள்ள யுத்தம் ஒரு சமயப் போர் அல்ல. இஸ்லாத்தின் புனிதத் தலங்கள் தாக்கப்படமாட்டா. புனித யாத்திரை செய்வோருக்கு எதுவித இடைஞ்சலும் செய்யப்படமாட்டாது". முஸ்லிம் உலகை ஏமாற்று முகமாக இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்ட பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா எனும் முக்கூட்டு வல்லரசுகள் துருக்கியைத் தமக்கிடையே பங்குபோடத் தீர்மானித்தன. 1916.05.16 ஆம் திகதி அவை தமக்கிடையே Sykes - Picot என்றழைக்கப்படும் உடன்படிக்கையை செய்து கொண்டன. இதன்படி எகிப்து, ஈராக், பலஸ்தீன் நாடுகள் பிரிட்டனுக்கும், சிரியாவும் லெபனானும் பிரான்சுக்கும், கிழக்கு அனடோலியாவும், ஸ்தான்புலும் (கொன்ஸ்தாந்து நோபிள்) ரஷ்யாவுக்கும் வழங்கப்படும். அனடோலியா பிரதேசம் பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, இத்தாலி ஆகிய நாடுகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். பாரசீகம் இரு பகுதிகளாகப் பிரிகப்பட்டு வடபகுதி ரஷ்யாவுக்கும் தென் பகுதி பிரிட்டனுக்கும் வழங்கப்படும்.

அறபு நாடுகட்கு சுதந்திரம் கொடுப்பதாக ஆசைகாட்டி, ஷரீப் ஹுசைனுக்கு சுதந்திர நாடொன்றைத் தருவதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்களித்து உடன்படிக்கை செய்துகொண்ட மேற்கு நாடுகள் அதனை எல்லாம் உதறித்தள்ளி தமக்கிடையே முஸ்லிம் நாடுகளைப் பங்குபோட மேற்குறித்தவாறு இரகசிய உடன்படிக்கை செய்துகொண்டன. அதன் மூலம் துருக்கியருக்கும் அறாபியருக்கும் முஸ்லிம்களுக்கும் யூதர்களுக்கும் இடையில் நல்லுறவை முறித்து பகைமையை வளர்க்கவும் திட்டமிட்டு செயற்பட்டன.

உலகளாவிய முஸ்லிம் மக்களின் சிந்தனையை துருக்கிக்கு எதிராகத் தூண்ட பிரித்தானியா முயற்சித்தது. துருக்கிய கலீபா அனைத்து முஸ்லிம்களுக்கும் கலீபாவாகத் தகுதியற்றவர் என்ற கருத்தை சமய கண்ணோட்டத்தில் வலியுறுத்திப் பிரசாரம் செய்யுமாறு தம்முடன் ஏற்கனவே நட்புறவு உடன்படிக்கையைச் செய்து கொண்டிருந்த ஷரீப் ஹுசைன் என்பவரை பிரிட்டிஷார் தூண்டினர். அதற்கிணங்க மக்காவில் வாழ்ந்த உலமாக்களும், ஷே. மாரும் கி. பி. 1917 இல் ஒரு பத்வாவை வெளியிட்டனர். உலகளாவிய முஸ்லிம் உம்மத்துக்கு துருக்கிய ஆட்சியாளர்கள் கலீபாவாக முடியாது என்ற கருத்தை இந்த பத்வா வலியுறுத்தியது. அத்துடன் துருக்கியர்கள் நாத்திகர்கள் என்றும், சமய கண்ணோக்கில் அறேபியாவைப் பரிபாலிக்கும் ஷரீப் தான் கலீபாவாகத் தகுதியானவர் என்ற கருத்தையும் இந்த பத்வா வழங்கியது. துருக்கியருக்கு எதிரான தேசிய உணர்வு ஒன்றை அறபு மக்களிடையே ஏற்படுத்த சக்தி பெற்றிருந்த பிரித்தானியர் இந்த பத்வாவின் மூலம் இந்தியாவில் வாழ்ந்த முஸ்லிம்களையும் துருக்கிக்கு எதிராகத் தூண்டி விட முயற்சித்தனர். அவ்வருடம் இந்தியாவில் இருந்து ஹஜ்ஜுக்குச் சென்றிருந்த தேவ்பந்து அறபு மத்தரஸாவில் அதிபராக இருந்த மவ்லானா மஹ்மூத் அல் ஹஸனிடமிருந்தும் அந்த பத்வாவுக்கு கைஒப்பம் இடுமாறு தம் கையாட்கள் மூலம் வேண்டினர். அந்த பத்வாவை மக்காவின் சைகுல் இஸ்லாம் மவ்லானா மஹ்மூத் அல் ஹஸ னிடம் அனுப்பினர். மக்காவின் ஹரம் சரீபில் கற்பிக்கும் அறிஞர் குழாத்தினர் வெளியிட்ட பத்வா என்று அந்த பத்வாவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பிடப்பட்டிருந்தது. தான் மக்காவைச் சேர்ந்த அறிஞராகவோ, க.்.பாவில் கற்பிக்கும் அறிஞராகவோ இல்லை என்பதை சுட்டிக்காட்டி அவர் கையொப்பமிட மறுத்தார். அதனால் அவரை ஆட்சியாளர்கள் கைது செய்தனர். இவ்வாறு பிரிட்டிஷார் துருக்கிக்கு எதிராக முஸ்லிம்களைத் தூண்டும் பணிகளைத் தொடர்ந்து செய்தனர்.

பிரித்தானியா அறபு நாட்டைத் தன்னிடம் தருவதாக வாக்களித்த கூற்றை நம்பிய ஷரீப் ஹுஸைன் துருக்கிக்கு எதிரான போராட்டத்தை ஹிஜாஸில் மேற்கொண்டார். பல இடங்களில் கொரில்லாத் தாக்குதல்களை மேற்கொண்டு ஹிஜாஸுக்கான ரயில் பாதையை அழித்துவிட்டார். மக்கா, மதீனா, ஜித்தா போன்ற நகர்களையும் யெமனையும் துருக்கியின் பிடியிலிருந்து துண்டித்துவிட்டார். பிரித்தானியா இந்தியாவில் திரட்டிய படை வீரர்களைக் கொண்டு கி. பி. 1917 இல் பக்தாதைக் கைப்பற்றியது. காஸா, அக்கா, ஜபா, றம்ழா நகர்களும் கி. பி. 1917 இல் பிரித்தானியரிடம் வீழ்ச்சியடைந்தன. பிரான்ஸ் கி. பி. 1917 இல் லெபனான் கரையோரங்களையும் தலைநகர் பெய்ரூத்தையும் கைப்பற்றியது. டமஸ்கஸை காத்து நின்ற துருக்கியப் படைகளுக்கு எதிராக அறபுத் தேசிய வாதிகள் கிளர்ச்சி செய்ததால் துருக்கிய வீரர்கள் டமஸ் கஸிலிருந்து வாபஸ் ஆயினர். இந்நகர்களைக் கைப்பற்றி பிரித்தானியப் படைவீரர்கள் முன்னோக்கிச் செல்லும்போது சுல்தான் சலாஹுத்தீனின் அடக்கஸ்தலம் குறுக்கிட்டது. அதனைத் தம் காலால் உதைத்து இடிக்கவே நாம் இங்கு வந்துள்ளோம் என்று பிரித்தானிய வீரர்கள் மகிழ்ச்சியின் பிரவாகத்தில் கூச்சலிட்டனர். சிலுவை யுத்தத்தின்போது கிறிஸ்தவ வீரர்களைக் கொண்டு சாதிக்க முடியாது போனதை முஸ்லிம்களைக் கொண்டே சாதித்து விட்டதை ஐரோப்பிய கிறிஸ்தவத் தளபதிகள் தமது கீழ்த்தரமான இந்நடவடிக்கை மூலம் சுட்டிக் காட்டினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு போர் நடந்துகொண்டிருக்கும் நிலையில் ரஷ்யா போர்க்களத்தில் பல இழப்புகளைச் சந்தித்தது. அதன் பொருளாதாரமும் வீழ்ச்சியடைந்தது. குடிமக்கள் பொருளாதாரச் சுமையைத் தாங்க முடியாதவாறு கஷ்டப்பட்டனர். உணவுப் பண்டங்களைத்தானும் பெற்றுக்கொள்ள முடியாத நிலை தோன்றியது. இச் சூழ்நிலையில்தான் சோவியத் புரட்சி கி. பி. 1917 ஒக்டோபரில் ஏற்பட்டது. சோவியத் புரட்சி இதுகாலவரை நிலவிய ரஷ்ய-துருக்கிய உறவில் பெரும் மாற்றத்தைத் தோற்றுவித்தது. இதுகாலவரை துருக்கியப் பிரதேசங்களைக் கைப்பற்றும் நோக்கில் ரஷ்யா செயற்பட்டு வந்திருந்தது. இப் போக்கிற்கு முற்றிலும் மாறாக சோவியத் புரட்சிக் குழு துருக்கியுடன் நட்புறவு உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டது. துருக்கியப் பிரதேசங்களில் உரிமை கொண்டாடுவதையும் ரஷ்யா கைவிட்டது. அத்துடன் துருக்கிய சாம்ராஜ்யத்தைத் துண்டுபோட வல்லரசுகள் மிக இரகசியமாக செய்துகொண்ட Sykes-Picot ஒப்பந்தத்தையும் பகிரங்கப்படுத்தி மேற்கு நாடுகளின் உண்மைத் தோற்றத்தை வெளியுலகுக்குப் பகிரங்கப்படுத்தியது.

சோவியத் புரட்சி உலக மகாயுத்தத்தின் போக்கில் ஒரு பெரும் திருப்பத்தைத் தோற்றுவித்திருக்க முடியும். ஆயினும் அமெரிக்கா கி. பி. 1917 ஏப்ரலில் பிரித்தானியா சார்பாக களம் இறங்கியிருந்ததால் பெரும் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. தொடர்ந்து நீடித்த போர் காரணமாக ஜெர்மனியும் துருக்கியும் பொருளாதார ரீதியாகவும் மனிதவள ரீதியாகவும் களைப்படைந்திருந்தன. அதனால் தொடர்ந்து போரிட முடியாது ஜெர்மனியும் துருக்கியும் கி. பி. 1918 இல் தோல்வியைத் தழுவின. இதைத் தொடர்ந்து கைஒப்பம் இட்ட இடைக்கால சமாதான ஒப்பந்தத்தின்படி இஸ்தான்பூல் பிரதேசத்தையும், குர்திஷ்கள் வாழ்கின்ற பகுதிகளையும் பிரித்தானியா தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தது. பிரான்ஸ் சிரியாவில் இருந்து தென் அனடோலியா வரையிலான பிரதேசத்தை அபகரித்துக்கொண்டது. இத்தாலி துருக்கியின் தெற்குப் பிரதேசத்தில் தனது படையை இறக்கியது. இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்காரா நகரைச் சுற்றியுள்ள ஒரு சிறு பகுதி தவிர ஏனைய அனைத்துப் பிரதேசங்களையும் எதிரிகள் தமதுடமையாக்கினர். அத்துடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் துருக்கி உடன்பட வேண்டியதாகியது.

i. துருக்கி தனது படைகளைக் கலைத்துவிட வேண்டும். கனரக ஆயுதங்களைத் தாங்காத ஐம்பதாயிரம் வீரர்களை மட்டும் கொண்ட ஒரு படையை மட்டும் வைத்திருக்க முடியும்.

ii. நாட்டின் நிதித்துறை வெற்றியாளர்களின் நேரடிப் பரிபாலனத்தில் இருக்கும்.

iii. பொலிஸ் படை கிரேக்க, ஆர்மீனிய நிருவாகிகளின் மேற்பார்வையில் இருத்தல் வேண்டும்.

இவ்வதிகாரங்களைப் பயன்படுத்தி அண்மையில் விடுவிக்கப்பட்ட பல இராணுவ வீரர்களைக் கொலை செய்தனர். முஸ்லிம்களை இரண்டாம் தரப் பிரஜைகளாகக் கணித்து நடத்தினர். அரசாங்கப் பாடசாலைகளில் கிறிஸ்தவ மாணவர்கட்கு மட்டும் அனுமதி வழங்கி முஸ்லிம் மாணவர் களுக்கு அனுமதி மறுத்தனர். கிறிஸ்தவ மிஷனரிகளிடம் அனாதை நிலையப் பரிபாலனத்தை வழங்கினர். அவர்கள் அவ்வனாதைகளைப் பகிரங்கமாகவே கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றினர்.

துருக்கியின் கீழ் இருந்த அறபு நாடுகளை மட்டுமன்றி துருக்கியர் வாழ்ந்த பிரதேசங்களையும் கைப்பற்றி துருக்கிய சாம்ராஜ்யத்தை முற்றாக ஒழித்து விடுவதற்கே பிரித்தானியாவும் பிரான்சும் விரும்பின. அறபுப் பிரதேசங்களையும் புனித நகரான ஜெரூஸலத்தையும் மட்டுமன்றி, பாரசீகக் குடாவில் இருந்த எண்ணெய் வளங்களையும் அவர்கள் தமதுடமையாக்கிக் கொண்டனர். ஷரீப் ஹுசைனுடன் செய்துகொண்ட உடன் படிக்கையைக் காற்றில் பறக்கவிட்டனர். போருக்குப் பின் கி. பி. 1919 இல் லண்டனில் துருக்கியின் தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய கூட்டத்துக்கு ஷரீப் ஹுசைன் அழைக்கப்பட வில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (உ) தேசிய வாதிகளின் எழுச்சியும் கிலாபத் ஒழிப்பும்

கிலாபத்தை ஒழித்துவிடுவதை இலட்சியமாகக் கொண்டே பிரித்தானியாவும் பிரான்சும் செயற்பட்டன. சுமார் 1300 ஆண்டுகள் நீடித்த கிலாபத் பல பிரதேச, பல இன மக்களை ஒரு கொடியின் கீழ் ஒன்றாகப் பிணைத்து ஒரே இலக்குக்காக செயற்பட இடமளித்தது. அறபி-அஜமி என்ற பேதமோ குறைசியர்-துருக்கியர் என்ற வேறுபாடோ இன்றி கிலாபத் எனும் கிரீடம் ஆட்சி அதிகாரம் பெற்றவர்களை அலங்கரித்தது.

கிலாபத்தை ஒழித்துவிடுவதன் மூலம் தேசிய உணர்வால் வழிநடாத்தப்பட்டதும், ஒன்றோடொன்று சண்டை பிடிக்கக் கூடியதுமான தனி நாடுகளாக துருக்கிய சாம்ராஜ்யத்தைப் பிரித்துவிடலாம் என்று ஐரோப்பிய சக்திகள் கருதின. உருவாக்கப்படும் புதிய நாடுகளுக்கு புதிய எல்லைகளை வகுத்தும், புதிய ஆட்சியாளர்களை நியமித்தும் அந்நாடுகளைத் தம் இஷ்டப்படி ஆடும் நாடுகளாக்க முடியும் என்றும் அவை கருதின. அத்துடன் இஸ்லாத்தின் பெயரால் முஸ்லிம்கள் ஓரணியாகத் திரள்வதைத் தவிர்த்து முஸ்லிம்களைப் பலவீனப்படுத்தலாம் என்றும் கருதின. அதனால் முதலாம் உலக மகா யுத்தத்தின் முடிவில் துருக்கிய சாம்ராஜ்யத்தைத் துண்டாடி அங்காரா நகருக்குள் துருக்கிய அரசை மட்டுப்படுத்த நடவடிக்கைகளை எடுத்தன.

கிலாபத்தை ஒழிக்க எடுக்கும் நடவடிக்கைகளை உலகளாவிய முஸ்லிம்கள் கடுமையாக எதிர்த்தனர். துருக்கியைத் துண்டுபோட்டு உலக வரைபடத்தில் இருந்து துருக்கிய சாம்ராஜ்யத்தைத் துடைத்தெறிந்துவிட எடுக்கும் முயற்சியை துருக்கிய குடிமக்களும் கடுமையாக எதிர்த்தனர். எனினும் கி. பி. 1918 முதல் துருக்கியை ஆட்சிசெய்த ஆறாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஹம்மது துருக்கிய கிலாபத்தைக் காப்பதைவிட தன் கலீபாப் பதவியைக் காப்பதிலேயே அதிக அக்கறை காட்டினார். தன் அரசைப் பங்கு போட்ட பின் எஞ்சும் பகுதியையாவது தன் ஆதிக்கத்துக்குள் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற கண்ணோக்கில் அவர் செயற்பட்டார். அதனால் துருக்கிய குடிமக்கள் துருக்கிய சுல்தானில் நம்பிக்கை வைக்காது தம் நாட்டைக் காப்பதற்காக சுயமாக செயற்பட்டனர். தேசியவாத சிந்தனையால் உந்தப்பட்டிருந்தவர்கள் ஏற்கனவே பாராளுமன்றத்தில் பரிபாலன அமைப்பொன்றைப் பெற்றுக்கொண்டிருந்தனர். முழு அளவிலான சுதந்திர பரிபாலனத்தை அவ்வமைப்பு கொண்டிராதபோதும் குடிமக்கள் நலனுக்காகக் குரல் கொடுக்கும் ஓர் ஸ்தாபனமாக அம்மன்றம் இயங்கியது. அதனால் கலீபாவைக் கருத்திற் கொள்ளாது செயற்படும் ஸ்தாபனமாக அது பலம் பெற்றிருந்தது.

தற்காலிகப் போர்நிறுத்தமும் இடைக்கால சமாதான உடன்பாடும் கி. பி. 1918 இல் ஏற்பட்டதிலிருந்து துருக்கிய சமூகத்தின் பலதரத்துக்குடிமக்களும் ஆக்கிரமிப்பாளர்களின் செயற்பாட்டுக்கு எதிராக ஒருமுகப்பட்டு இயங்கலாயினர். குறிப்பாக ஆக்கிரமிப்பாளர்களின் நேரடிப் பரிபாலனத்துக்குட்பட்ட துருக்கிய பிரதேசத்தில் வாழ்ந்தவர்கள் தமதுரிமைகளைப் பாதுகாக்க முயற்சித்தனர். அதற்காகக் கண்காணிப்புக் குழுக்களை அமைத்துக்கொண்டனர். இக்குழுக்களே நாளடைவில் தேசத்தைப் பாதுகாக்கும் தேசியப் படையாக வளர்ச்சி கண்டன. இப்படைக்கு அங்காராவைத் தலைநகராகக் கொண்டு இயங்கிய தேசியவாதிகளின் ஆதரவும் கிடைத்தது. இப்படையினர் அந்நியர்களின் ஆட்சிக்குட்படாத பகுதிகளிலிருந்து ஆயுதங்களையும் தளபாடங்களையும் ஏனைய உதவிகளையும் பெற்றனர்.

ரஷ்யாவின் ஆட்சியை கி. பி. 1917 இல் கைப்பற்றிய போல்ஷவிக் புரட்சியாளர்களிடமிருந்து ஆயுத உதவிகளையும் ஏனைய உதவிகளையும் பெற்றனர். இதன் காரணமாக கலீபாவின் உதவியின்றியே ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராடும் துணிவையும் தைரியத்தையும் தேசிய படையணியினர் பெற்றனர்.

முதலாம் உலக மகாயுத்தத்தில் தோல்வியைத் தழுவி நிலை தளர்ந்து தள்ளாடிக்கொண்டிருக்கும் துருக்கியின் பிரதேசங்களைக் கைப்பற்றி தனது நீண்ட காலக் கனவை நனவாக்க விரும்பிய கிரேக்கர் கி. பி. 1919 மே மாதம் 14 ஆம் திகதி துருக்கியைத் தாக்கினர். பிரித்தானியா, பிரான்ஸ், அமெரிக்கா நாடுகளுக்குச் சொந்தமான கப்பல்களில் அந்நாடுகளின் ஆசீர்வாதத்துடன் கிரேக்கப் போர்வீரர்கள் துருக்கியின் இஸ்மீர் பிரதேசத்தில் தரையிரங்கினர். அப்பிரதேசத்தைப் பேரழிவுக்குள்ளாக்கிய பின் புர்ஸா நகரைச் சென்றடைந்தனர். பெண்களைக் கற்பழித்தும் குடிமக்களைப் படுகொலை செய்தும் அக்கிரமம் செய்தனர். இக்கொடுமைகளில் கிரேக்க வீரர்கள் மட்டுமன்றி கிரேக்கக் குடிமக்களும் பங்குகொண்டனர். இதனால் ஆத்திரமடைந்த தேசப் பற்றுமிக்க துருக்கிய குடிமக்கள் கலீபாவை எதிர்பாராது சுயமாகச் செயற்படலாயினர். இப்போராட்டத்திற்குத் தலைமைதாங்க பிரித்தானியாவின் கைப்பாவையாகச் செயற்பட்ட கலீபா எவ்வகையிலும் தகைமையற்றவராக இருந்தார். தீரமும் துணிவும் நாட்டுப் பற்றும் மிக்க ஒருவரைத் தலைவராக்கிக்கொள்ள மக்கள் அவாவினர். இச்சந்தர்ப்பத்தில்தான் இஸ்லாமிய கிலாபத்தின் வரலாற்றை முற்றாக மாற்றியமைத்த முஸ்தபா கமால் துருக்கிய மக்களின் தலைவராக்கப்பட்டார்.

ஐரோப்பிய வல்லரசுகளின் கொடூரப்பிடியிலிருந்து துருக்கியைக் காப்பாற்ற முஸ்தபா கமாலின் தலைமையில் இயங்கிய தேசியப்படை சக்தி பெற்றதாயினும் முஸ்தபா கமாலின் சமய சார்பற்ற சிந்தனைப் போக்கும் கிலாபத்தை ஒழிப்பதில் கமால் வகித்த பங்கும் சமயப் பற்றுடையவர்களின் வெறுப்புக்கு அவரை ஆளாக்கியதுண்மையே. அதே வேளை துருக்கி அவாவி நின்ற தலைமைத்துவத்தை வழங்கி துருக்கியின் தன்மானத்தைக் காத்த பெருமையில் முஸ்தபா கமாலுக்குப் பெரும் பங்குண்டு என்பதை மறுப்பதற்கில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. பி. 1881 இல் ஸலோனிகா நகரின் ஏழைக் குடும்பம் ஒன்றில் பிறந்த கமால், இஸ்தம்புலில் இருந்த இராணுவக் கல்லூரி ஒன்றில் சேர்ந்து இராணுவப் பயிற்சி பெற்றார். கி. பி. 1905 முதல் துருக்கிய இராணுவத்தின் தளபதிகளில் ஒருவராகப் பதவியுயர்த்தப்பட்டார். ஐரோப்பியப் படைகளுக்கு எதிராக லிபியாவிலும், சிரியாவிலும் துருக்கியப் படைப் பிரிவுகளுக்குத் தலைமை தாங்கிப் போரிட்டுத் தன் திறமைகளை அவர் வெளிப்படுத்தியிருந்தார். தேசிய வீரனாகப் பாராட்டத்தக்க சாதனைகளை அவர் புரிந்திருந்ததால் தேசிய வாதிகளிடம் அவர் நன்கு அறிமுகமாகியிருந்தார். அதனால் துருக்கி எதிர்நோக்கும் பயங்கரப் புயலுக்கு எதிராக முகம் கொடுக்க அவரது தலைமையை தேசியவாதிகள் நாடினர். முஸ்தபா கமால் தேசியவாதிகளின் தலைமைத்துவத்தை ஏற்றதால் தேசிய அசெம்பிளி கமாலை ஆதரித்தது. இதனால் துருக்கி இரு முரண்பட்ட கோணங்களில் இருந்து சிந்திக்கும் இரு தலைவர்களின் பரிபாலனத்திற்குட்பட்டது. தனது ஆட்சியைக் காத்துக்கொள்வதையே இலட்சியமாகக் கொண்டு செயற்பட்ட கலீபா ஒரு புறத்திலிருந்தார். அவருக்கு மரபு ரீதியான அரசியற் தலைமைத்துவத்தை ஆதரிப்போரும் பிரித்தானியரும் துணை நின்றனர். மறுபுறம் முஸ்தபா கமால் தேசிய நலனுக்காகப் போராடினார். தேசிய அசெம்பிளியும் தேசியவாதிகளும் அவருக்கு ஆதரவாக இருந்தனர். கலீபா ஸ்தான்பூலையும், கமால் அங்காராவையும் தலைமையாகக் கொண்டு இயங்கினர். இவ்விரு நகரும் அனடோலியா மாகாணத்திலேயே இருந்தன.

முஸ்தபா கமால் இராணுவத்தைக் கட்டியெழுப்ப முயற்சி செய்தார். ரஷ்யாவுக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பி உதவிகளைப் பெற முயற்சித்தார். துருக்கியைத் தனது கொம்யூனிச வட்டத்துள் கொண்டுவரலாம் என்ற எண்ணத்தில் ரஷ்யா ஆயுத உதவி வழங்க முன்வந்தது. இதனை அடுத்து துருக்கியத் தாய்நாடு பேராபத்தில் சிக்கியுள்ளது என்றும் அனைத்து வெளிநாட்டுப் படைகளையும் துருக்கியிலிருந்து வெளியேற்றுவதே தமது இலட்சியம் என்றும் கி. பி. 1919.06.19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் திகதி முஸ்தபா கமால் பிரகடனப்படுத்தினார். கலீபாவும் அமைச்சர்களும்கூட தேசிய வாதிகளின் இம்முயற்சிக்குத் துணைசெய்யவே விரும்பினர். பிரதம அமைச்சர் பதவி ஏற்றிருந்த அலி ரீசா பாச்சாவும் தேசியவாதிகளுடன் தொடர்புகளை வைத்திருந்தார். அனடோலியாவின் எந்த ஒரு பகுதியையும் எதிரிகளின் கையில் ஒப்படைக்கக் கூடாது என்பதில் தேசியவாதிகளுடன் ஒத்த கருத்துடையவராக அவரும் இருந்தார். இதனை பிரித்தானிய அரசு விரும்பாததால் தேசியவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி கலீபாவைத் தூண்டியது. பிரித்தானியருடன் இணைந்து செல்வதன் ஊடாக தன் பதவியைக் காத்துக் கொள்ளலாம் என்று கருதிய கலீபா தேசியவாதிகளைக் கிளர்ச்சிக்காரர்கள் என்று பிரகடனப்படுதினார். கிளர்ச்சிக்காரர்களைக் கொலை செய்யலாம் என்று சைகுல் இஸ்லாம் “பத்வா”க்கொடுத்தார். இதனால் தேசியவாதிகளில் சிலர் கைதுசெய்யப்பட்டனர்; சிலர் நாடுகடத்தப்பட்டனர்.

இப்பின்னணியில் முதலாம் உலகப் போரில் வெற்றிபெற்ற நேசநாட்டுத் தலைவர்கள் கி. பி. 1920 ஆகஸ்ட் மாதத்தில் ஸிவ்ரஸ் உடன்படிக்கை (Treaty of Severes) என்றழைக்கப்பட்ட உடன்படிக்கையில் கையொப்பம் இடுமாறு துருக்கிய கலீபாவை நிர்ப்பந்தித்தனர். இவ்வுடன்படிக்கை துருக்கிய சாம்ராஜ்யத்தைப் பின்வருமாறு பங்கிட்டுச் சிதைத்தது:

அ. ஹிஜாஸ் மாகாணத்துக்குப் பெயரளவிலான சுதந்திரம் வழங்கப்பட்டு பிரிட்டிஷாரின் பொறுப்பில் விடப்பட்டிருந்தது.

ஆ. ஆர்மீனியப் பிரதேசம் கிறிஸ்தவக் குடியரசாக மாற்றப்பட்டு சர்வதேச பாதுகாப்புத்தரவாதம் வழங்கப் பட்டது.

இ. சிரியா, மொசபதேமியா, பலஸ்தீன், டிரான்ஸ் ஜோர்தான் என்பன சர்வதேச சங்கத்தின் பொறுப்பில் விடப்பட்டது. சிரியாவின் பரிபாலனம் பிரான்ஸிடமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய நாடுகளின் பரிபாலனம் பிரித்தானியாவிடமும் வழங்கப்பட்டது.

ஈ. கலேஸியா, தெற்கு அனடோலியா என்பன இத்தாலியின் செல்வாக்குக்குட்பட்ட பிரதேசங்களாக அங்கீகரிக்கப்பட்டன.

உ. டாடனல்ஸ், பொஸ்பரஸ் என்பன சர்வதேச சொத்தாக்கப்பட்டன.

துருக்கியப் படை கலைக்கப்பட வேண்டும் என்றும், துருக்கியிடம் விடப்பட்டுள்ள பிரதேசங்களின் நிதித் துறை, இராணுவத்துறை என்பவற்றின் பரிபாலனம் நேச நாடுகளின் கட்டுப்பாட்டில் இருத்தல் வேண்டும் என்றும் நிபந்தனையிடப்பட்டிருந்தது. கலீபா இதற்கு இணங்கி இவ்வுடன்படிக்கையில் கையொப்பம் இட்டபோதும் அன்காரா விலிருந்த தேசியவாதிகளின் தலைமைத்துவம் இதனை நிராகரித்தது.

இதே காலப் பகுதியில் கிரேக்கர்கள் துருக்கியின் எஞ்சியிருந்த சில பகுதிகளைத் தாக்கிக் கைப்பற்றினர். ஆர்மீனியர்களும் துருக்கியின் கிழக்குப் பிரதேசத்தைத் தமதாக்கினர். இவர்களைத் துருக்கிய தேசியவாதிகளின் படையணி துரத்தியடித்தது. போர்முனையில் சாதிக்க முடியாதுபோனவற்றை அரசியல் உபாயத்தின் மூலம் சாதிக்க பகைவர்கள் முனைந்தனர். அதற்காக கி. பி. 1921 இல் லண்டனில் ஒரு மகாநாட்டைக் கூட்டினர். கலீபா வுக்குப் பணிந்துபோகுமாறு தேசியவாதிகளை அம்மாநாடு நிர்ப்பந்தித்தது. தேசியவாதிகள் அதற்கு இணங்கவில்லை. கலீபாவின் பிரதிநிதிகளுடன் தேசியவாதிகள் பேசவுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. பி. 1922 செப்டம்பரில் கிரேக்கர் மீண்டும் துருக்கியைத் தாக்கியபோது தேசியப் படையணி அவர்களைத் துரத்தியது. கிரேக்க வீரர்கள் பலர் களத்தில் மடிந்தனர். எஞ்சியோர் தப்பி ஓடினர். அதனையடுத்து தேசியப் படையணி பிரித்தானியப் படையணியைத் தாக்கியது. இதனால் பிரித்தானியப் படையும் வாபஸ் வாங்கியது. இப்போர் நடவடிக்கை மூலம் இழந்த அறபுப் பிரதேசங்களை மீட்க துருக்கிக்கு முடியாமல் போனாலும் முற்றுகையாளருக்குச் சரணடையாது தன் சுதந்திரத்தைக் காத்துக்கொள்ள அதற்கு முடிந்தது. இப்போராட்டத்தின் போது கலீபா வஹீதுத்தீன் பிரிட்டிசாருக்கு சார்பாக நடந்துகொண்டதால் பிரிட்டிஷ் போர்க் கப்பல் ஒன்றின் மூலம் தப்பிச் சென்றார். அதன்பின் பதவியேற்ற கலீபா இரண்டாம் அப்துல் மஜீதும் தேசியவாதிகட்கு எதிராகச் செயற்பட்டதால் கலீபாவுக்கும் தேசியவாதிகட்கும் இடையே பகைமை தொடர்ந்து வளர்ந்தது.

முதலாம் உலக மகா யுத்தத்தின் முடிவுடன் இவ்வாறு கலீபாவுக்கும் தேசிய வாதிகட்கும் இடையில் அதிகாரப் போட்டி வளர்ந்தது. இதன்விளைவாக கி. பி. 1920.4.23 ஆம் திகதி கூடிய தேசிய அசெம்பிளி முஸ்தபா கமாலை அதன் தலைவராகத் தெரிவு செய்தது. இறைமை தேச மக்களுக்கே சொந்தமானது என்றும், தேசிய அசெம்பிளியே தேச மக்களின் உண்மையான பிரதிநிதி என்றும், சட்ட ஆக்க அதிகாரமும் அதனை அமுலாக்கும் அதிகாரமும் தேசிய அசெம்பிளிக்கே உண்டு என்றும் அது ஒரு பிரகடனத்தை வெளியிட்டது. கி. பி. 1922 இல் தேசிய அசெம்பிளி துருக்கியின் அரசியலில் இருந்து கிலாபத் நிறுவனத்தைப் புறந்தள்ளி துருக்கியை ஒரு குடியரசாகப் பிரகடனப்படுத்தியது. துருக்கியைப்பரிபாலிக்கும் ஆட்சி உரிமை துருக்கியக் குடியரசுக்கே உண்டு என்ற தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றியது. எனினும் முஸ்தபா கமால் மரபு ரீதியான சிந்தனைப் போக்குடையவர்களின் கடுங் கோபத்தைத் தணிக்குமுகமாக "துருக்கியர் கலீபாவை எப்போதும் மிக கண்ணியப்படுத்தும் சுபாவம் உடையவர்கள் என்றும் ஐரோப்பிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசுகள் பாப்பாண்டவரைக் கண்ணியப்படுத்துவது போல நாமும் தொடர்ந்து கலீபாவைக் கண்ணியப்படுத்துவோம்" என்று பிரகடனப்படுத்தினார். இதனால் மரபு ரீதியான சிந்தனைப் பாங்குடையவர்கள் ஆறுதலடைந்தனர். கலீபாவின் அரசியல் அதிகாரம் அனைத்தும் பறிக்கப்பட்டு ஆட்சி அதிகாரம் முழுவதும் தேசிய அசெம்பிளிக்குக் கிடைத்தமையால் தேசிய வாதிகள் ஆனந்தமடைந்தனர்.

முஸ்தபா கமால் ஒரு தேசியவாதி அதனால் அவரை கிலாபத் சிந்தனைக்கு எதிராகப் பயன்படுத்தலாம் என்று கருதிய பிரித்தானியர் மிகத் தந்திரமாகவே துருக்கிய விடயத்தில் காய் நகர்த்தினர். இந்திய கிலாபத் இயக்கம் பிரிடிஷாருக்கு ஒரு பெருந்தலையிடியாக இருந்ததால் கிலாபத் பதவியையே ஒழித்துவிடுமாறு முஸ்தபா கமாலை பிரித்தானியர் தூண்டினர் அதனால் கி. பி. 1922 ஆம் ஆண்டின் அரச பிரகடனத்தின் மூலம் கிலாபத்தின் அச்சுறுத்தல் முற்றாக ஒழிக்கப்பட்டிருந்த நிலையிலும் 1924-3-3 ஆந் திகதி கிலாபத்தை தேசியவாத அரசு ஒழித்தது.

முஸ்லிம்கள் என்று பெயர் தாங்கிய சமய சார்பற்ற தேசியவாதிகள் கிலாபத்தை ஒழித்துக்கட்டி மேற்கு நாட்டினரின் நீண்டகால அவாவை நிறைவேற்றி வைத்தனர். ஆயிரத்து முன்னூறு ஆண்டுகள் நிலவிய கிலாபத்தை சட்டபூர்வமாக முஸ்லிம்களே ஒழித்தனர். இவர்களின் இச்செயற்பாடு முஸ்லிம் உலகில் அதிர்ச்சியொன்றை ஏற்படுத்தியது. மீண்டும் கிலாபத்தைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற உணர்வால் உந்தப்பட்ட சிலர் அதற்காக உழைக்கலாயினர். வேறு சிலர் கிலாபத் நிறுவனம் சமயக் கடமை அல்ல என்று கூறத் தலைப்பட்டனர்.

ஒழிக்கப்பட்ட கிலாபத்தை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டும் என்ற உணர்வு அறபு முஸ்லிம்களை விட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய உபகண்டத்து முஸ்லிம்களிடம் அதிகமாக இருந்தது. அறபுத் தேசிய உணர்வால் உந்தப்பட்டு துருக்கியரிடம் இருந்து தமது பிரதேசங்களின் ஆதிக்கத்தை தாமே பெற வேண்டும் என்ற எண்ணப் பாங்குடையவர்களாக அறபுகள் இருந்தமை கிலாபத்தை உயிர்ப்பிக்க வேண்டும் என்ற சிந்தனை அறபியர்களிடம் செல்வாக்குப் பெறாமைக்கான ஒரு காரணியாக இருக்க முடியும். இந்திய உபகண்ட முஸ்லிம்கள் உமையா அப்பாஸிய காலங்களில் கலீபாவின் நேரடிப் பரிபாலனத்துக்குட்பட்டிருந்தனர். கஸ்னி ஆட்சியுடன் இந்தியாவில் அறிமுகமாகிய முஸ்லிம் சிற்றரசுகளும் கலீபாவை அங்கீகரித்து செயற்பட்டதால் இந்திய முஸ்லிம்கள் கிலாபத்துடன் உலகியல், ஆத்மீகம் எனும் இரு துறைகளிலும் உறவை வைத்திருந்தனர். எனினும் பிரித்தானியர் இந்தியாவைத் தமதாதிக்கத்தின் கீழ் கொண்டுவந்த பின் கிலாபத்துடனான உறவு ஆன்மீக ரீதியாக மட்டும் நீடித்திருந்தது. மக்கா, மதீனா, பைதுல் முகத்திஸ் ஆகிய முக்கிய மூன்று புனித தலங்களின் பரிபாலகர்களாக துருக்கிய கலீபாக்கள் இருந்தனர். அதனால் ஏற்பட்ட ஆன்மீக ரீதியானதும் ஹஜ் வணக்கத்துடன் நேரடியான தொடர்புடையதுமான உறவு இந்திய முஸ்லிம்களின் உள்ளத்தில் கலீபா பற்றி பசுமையான எண்ணங்களை தோற்றுவித்தது. அதன் காரணமாக முதலாம் உலகப் போரில் துருக்கி பங்கு கொண்டது முதல் துருக்கிய கிலாபத்தின் நலனைப் பேணுவதில் இந்திய முஸ்லிம்கள் அக்கறை காட்டினர். துருக்கிக்கு எதிரான போராட்டத்தைக் கொண்டு நடத்த பிரித்தானியா தனது ஆட்சிக்குட்பட்டிருந்த இந்தியாவின் பொருளாதார வளத்தையும் மனித வளத்தையும் பயன்படுத்தியது. கணிசமான இந்திய முஸ்லிம்கள் பிரித்தானியப் படையில் சேர்ந்திருந்தனர். இதனால் பிரித்தானியா இந்திய முஸ்லிம்களின் அபிலாசைகளுக்கு மதிப்பளிப்பதுபோல் நடித்து முனாபிக் தனமாக நடந்துகொண்டது. இந்திய முஸ்லிம்களைத் திருப்திப்படுத்தும் வகையில் பின்வரும் பிரகடனத்தை பிரிட்டிஷ் அரசு கி. பி. 1914 நவம்பரில் பிரகடனப்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இது ஒரு சமயப் போர் அல்ல. இப்போருக்கு சமய முலாம் பூசப்பட மாட்டாது. முஸ்லிம்களின் புனித தலங்கள் மீதும் ஜித்தா துறைமுகம் மீதும் தாக்குதல் நடாத்தப்படமாட்டாது; இந்தியாவில் இருந்து ஹஜ்ஜுக்குச் செல்வோருக்கு எந்த இடைஞ்சலும் செய்யப்படமாட்டாது; பிரிட்டனின் வேண்டுகோளை ஏற்று பிரான்சும் ரஷ்யாவும் இதே போன்ற உத்தரவாதங்களை வழங்கியுள்ளன."

இதே மாதிரியான மற்றொரு பிரகடனத்தை இந்தியாவின் பிரித்தானிய கவர்னர் ஹார்ரின் பிரபு கி. பி. 1915 ஜனவரி 12 ஆம் திகதி வெளியிட்டார்.

இத்தகைய வாக்குறுதிகளை எல்லாம் மீறியதாகத்தான் யுத்த முடிவின் பின்னரான நடவடிக்கைகள் அமைந்தன. போர் நடந்து கொண்டிருக்கும் போதே துருக்கியின் மீது இந்திய முஸ்லிம்கள் அனுதாபம் காட்டுவது இஸ்லாத்திற்கு அப்பாற்பட்ட ஒரு செயற்பாடு என்பதாக எடுத்துக் கூறும் "பத்வா" ஒன்றை இந்திய உலமாக்கள் ஊடாக வெளியிட பிரிட்டன் முயற்சித்தது. பறங்கி மஹாலைச் சேர்ந்த மௌலானா அப்துல் பாரி போன்றவர்கள் பகிரங்கமாக இதனை எதிர்த்ததால் அம்முயற்சி பலிக்கவில்லை.

நேச நாட்டுப் படைகள் துருக்கிய சாம்ராஜ்யத்தை சிதைத்து பலவீனப்படுத்தியிருந்த நிலையில் எஞ்சிய நிலப் பகுதியை அபகரிக்கும் நோக்கில் கிரேக்க நாட்டவர்கள் கி. பி. 1919 இல் படை எடுத்த போது துருக்கிக்கு உதவி செய்யுமுகமாக மௌலானா அப்துல் பாரி பம்பாயில் "மஜ்லிஸே கிலாபத்" எனும் இயக்கத்தைத் தோற்றுவித்தார். இதன் கிளைகள் இந்திய உபகண்டத்தின் பல பகுதிகளிலும் தோற்றுவிக்கப்பட்டன. இக் கிளைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமிர்தராஸில் ஒரு மகாநாட்டை அவர் நடாத்தினார். கிலாபத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காகவும், கிலாபத்தை சாத்தியமாக்குவதற்கு துருக்கியை, போருக்கு முன்பிருந்த நிலையில் வைப்பது அவசியம் என்பதை பிரித்தானியா, பிரான்சு முதலாம் ஐரோப்பிய நாடுகளுக்கு உணர்த்துவதற்காகவும் ஒரு தூதுக் கோஷ்டியை அனுப்ப அம்மாநாட்டில் முடிவெடுத்தனர். இக்குழுவில் மௌலானா முகம்மதலி ஜவ்ஹர், செய்யித் சுலைமான் நத்வி உட்பட முக்கிய ஐந்து பிரமுகர்கள் அடங்கியிருந்தனர். ஐரோப்பிய நாடுகள் பலவற்றுக்கு சுற்றுப்பிரயாணம் செய்த இத்தூதுக்குழு கி. பி. 1920 ஒக்டோபரில் வெறுங்கையுடன் திரும்பியது. இதனால் பிரித்தானிய ஆட்சிக்கு எதிரான உணர்வலைகள் இந்திய முஸ்லிம்களிடத்தில் எழுந்தன. இந்தியா ஒரு "தாருள் ஹர்பு" நாடு என்றும், இங்கு வாழ்வது ஆகாது என்றும், அயலில் உள்ள ஆப்கானிஸ்தானுக்கு ஹிஜ்ரத் செல்லுமாறும் அபுல் கலாம் ஆஸாத் உட்பட முஸ்லிம் அறிஞர்கள் பத்வாக்களை வெளியிட்டனர். கிலாபத்தை நிறுவும் முயற்சியைக் கைவிட விரும்பாத "மஜ்லிஸே கிலாபத்" துருக்கியின் இஸ்தாம்பூல் நகரில் இருந்து வெளிவரும் மூன்று செய்திப் பத்திரிகைகளில் கி. பி. 1923.12.05 ஆம் திகதி ஆகாகான், நீதிபதி செய்யித் அமீர் அலி ஆகிய இருவரது பெயரிலும் கிலாபத் அமைப்பைப் பாதுாக்குமாறு துருக்கிய அரசுக்கு வேண்டுகோள் விடுத்து ஒரு விளம்பரம் வெளியிட்டது. இவ் விளம்பரத்தில் கிலாபத் அமைப்பு பாதுகாக்கப்படுவதன் அவசியத்தை எடுத்துக் காட்டுவதற்கான பல நியாயங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப முதலே கிலாபத் அமைப்பை விரும்பாதிருந்த சமய சார்பற்ற சிந்தனைப் போக்கையுடைய முஸ்தபா கமால் இவ்விளம்பரத்தைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்தினான். ஆகாகானும், செய்யித் அமீர் அலியும் பிரபலமான ஷீயாக்கள் என்றும், அவர்கள் பிரித்தானிய அரசின் நலன்களைப் பேணுபவர்கள் என்றும், இந்தியாவில் முஸ்லிம் அல்லாத ஒருவரான காந்திஜி கிலாபத் அமைப்புக்குத் தலைமை தாங்குகிறார் என்றும், இந்துக்களுக்கும் ஷீஆக்களுக்கும் சுன்னத் வல் ஜமாஅத் வழியமைந்த கிலாபத் அமைப்பைப் பற்றிப் பேசுவதற்கு என்ன அருகதை இருக்கிறது என்றும் வினா எழுப்பி விமர்சித்து துருக்கியின் உள்நாட்டு விடயங்களில் இவர்கள் தலையிடுகிறார்கள் என்று முஸ்தபா கமால் குற்றம் சுமத்தினான். சமயம் என்பது இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவைப் பேசுகின்ற ஓர் ஸ்தாபனம். அதற்கும் அரசுக்கும் இடையிலான உறவு அவசியமற்றது. மேற்கு நாடுகளில் போலமைந்த சமய சார்பற்ற அரசு துருக்கியில் அமைதல் வேண்டும். மேற்குலகின் போக்கிலான முன்னேற்றத்திற்கு சமயம் இடைஞ்சலானது. ஆதலால் துருக்கிய அரசில் இருந்து கிலாபத்தை ஒழித்துவிட வேண்டும் என்ற சிந்தனையை முஸ்தபா கமால் கொண்டிருந்தான். தனக்கு தேசிய அசெம்பிளியில் உள்ள ஆதரவைப் பயன்படுத்தி கிலாபத் அமைப்பை ஒழிக்க நடவடிக்கை எடுத்தான். கி. பி. 1924 மார்ச் மூன்றாம் திகதி கிலாபத்தை ஒழித்து அரச குடும்பத்தை நாடு கடத்தும் மசோதாவை தேசிய அசெம்பிளி நிறைவேற்றியது. இம் மசோதாவை சமர்ப்பித்து முஸ்தபா முஸ்தபா கமால் உரையாற்றும்போது பின்வருமாறு குறிப்பிட்டான். "முற்றிலும் அறபுமயக் கோட்பாட்டையும் அறபுப் பண்பாட்டையும் கொண்ட இஸ்லாமிய சிந்தனையின் அடிப்படையில் துருக்கியப் பேரரசு உருவாக்கப்பட்டிருக்கிறது. இஸ்லாத்தைப் பின்பற்றும் ஒருவன் பிறப்பில் இருந்து இறப்பு வரையிலான தன் வாழ்க்கையை இஸ்லாத்தின் அடிப்படையில் வடிவமைத்துக்கொள்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாம் புதிய எதிர்பார்ப்புகளையும் புதிய முயற்சிகளையும் நசுக்குகிறது. இத்தகைய இஸ்லாத்தை தொடர்ந்தும் பின்பற்ற அனுமதிப்பது துருக்கியக் குடியரசுக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமையும். உதுமானியத் துருக்கியப் பேரரசை ஒழித்துக்கட்டும் காலம் வந்துவிட்டது. குடியரசின் எதிரிகள் துருக்கியக் குடியரசை அழிக்க கிலாபத்தை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்த முன்பு நாம் அதனை ஒழித்துக்கட்ட வேண்டும்.”

கிலாபத்தை ஒழித்துக்கட்டுவதற்கான காரணிகளாகப் பின்வரும் கருத்துக்களை முஸ்தபா கமால் முன்வைத்தான்:

(i) கிலாபத் அமைப்பினால் முஸ்லிம் உலகுக்கு நன்மையை விடத் தீமைகளே அதிகம் விளைந்துள்ளன.

(ii) இழி நடத்தையுடைய கொடுமை மிக்க கலீபாக்கள் கிலாபத்தைப் பயனற்றதும் செயலற்றதுமான ஓர் அமைப்பாக்கியுள்ளனர்.

(iii) கிலாபத் அமைப்பு பாதுகாக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுப்பவர்கள் முஸ்லிம் அல்லாதோரின் ஆட்சிக்கு உட்பட்ட முஸ்லிம்களே. கிலாபத் அமைப்பு பாதுகாக்கப்பட்டு கலீபாப் பதவியை ஒருவர் வகித்தாலும் அக்கலீபாவின் கட்டளைக்கு அடிபணிந்து நடக்கும் நிலையில் அவர்கள் இல்லை.

(iv) குடியரசு அமைப்பிலான ஆட்சிக்கு கிலாபத் ஆட்சி நிகரானதாக முடியாது.

கிலாபத் ஆட்சியை ஒழித்துவிட்டதுடன் திருப்தியடை யாத முஸ்தபா கமால் இஸ்லாமிய சிந்தனையின் தாக்கத்தை ஒழிப்பதற்காகவும் சில நடவடிக்கைகளை எடுத்தான். அதற்காக துருக்கிய ஆட்சி நிலவும் பகுதிகளில் இருந்த எல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்ரஸாக்களையும் கல்வி அமைச்சின் பரிபாலனத்தின்கீழ் கொண்டுவந்தான். அதற்கு அடுத்தகட்டமாக மத்ரஸாக் களை மூடிவிட்டான். ஏற்கனவே இருந்த "ஷரீஆ அவ்காப்" அமைச்சை ஒழித்து ஷரீஆ நீதிமன்றங்களை செயல் இழக்கச் செய்தான். கி. பி. 1924 ஏப்ரல் இருபதாம் திகதி தேசிய அசெம்பிளியில் நிறைவேற்றிய ஒரு மசோதாவின் மூலம் அதுகாலவரை அரச கரும மொழியாக இருந்த அறபு மொழியைப் புறந்தள்ளி, துருக்கி மொழியை அரசகரும மொழியாக்கினான். ஆட்சி அல்லாஹ்வுக்கே சொந்தம் என்ற இஸ்லாமியக் கோட்பாட்டைப் புறக்கணித்து இறைமை மக்களுடையதே என்று பிரகடனப்படுத்தினான். அத்துடன் துருக்கியரின் உள்ளத்தில் பதிந்துள்ள சமய செல்வாக்கை ஒழிக்க அன்றேல் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கலானான்.

துருக்கியர் அதுகாலவரை அணிந்து வந்த துருக்கித் தொப்பி உட்பட பல்வேறு வடிவிலான தொப்பிகளுக்குப் பதிலாக ஐரோப்பியர் அணியும் தொப்பியை அணியுமாறு வற்புறுத்தினான். வழக்கில் இருந்த தரீக்காக்களை தடைசெய்து தரீக்காக்களின் செயற்பாடுகள் இடம்பெற்ற "தக்கியா"க்களையும் மூடிவிட்டான். நாட்டின் வழக்கில் இருந்த சட்டங்களுக்குப் பதிலாக புதிய அரசின் இலட்சியங்களை நிறைவேற்றக்கூடிய புதிய சட்டக்கோவையை கி. பி. 1926 இல் அறிமுகப்படுத்தினான். துருக்கிய மொழியை அதுகாலவரை அறபுலிபியைக் கொண்டே எழுதினர். அதனை மாற்றி துருக்கிய மொழியை எழுதுவதற்கான புதிய எழுத்துக்களை அறிமுகப்படுத்தினான். கி. பி. 1928 நவம்பரில் வெளியீடுகள் அனைத்தும் இப்புதிய எழுத்துவடிவைக் கொண்டே வெளியிடப்படவேண்டும் என்றும் அறபு மொழி எழுத்துக்களை உபயோகிக்கக் கூடாது என்றும் ஒரு மசோதாவை நிறைவேற்றினான். கி. பி. 1926 இல் அறிமுகப்படுத்திய துருக்கிய சிவில் சட்டத்தின் மூலம் பலதார மணம் புரிவது தடைசெய்யப்பட்டது. முக்கிய நகர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துருக்கியப் பெயர்களாலேயே அழைக்கப்பட வேண்டும் என்றும் நகர்களின் துருக்கியப் பெயர்களைத் தாங்கி வராத கடிதங்கள் வினியோகிக்கப்பட மாட்டாது என்றும் அறிவித்தான். பிள்ளைகளுக்குப் பெயர் வைப்பத்திலும் துருக்கிய மரபு பேணப்பட வேண்டும் என்று வற்புறுத்தினான். வெள்ளிக் கிழமைகளுக்குப் பதிலாக சனி பி. ப. ஒரு மணி முதல் ஞாயிறு முழு தினத்தையும் வார விடுமுறை நாட்களாகப் பிரகடனப்படுத்தினான். ஐரோப்பிய சமூக அமைப்பை நிகர்த்ததாக துருக்கிய சமூகத்தை மாற்றியமைக்க இஸ்லாமிய சிந்தனையும் வாழ்க்கை முறையும் இடைஞ்சலாக இருக்கின்றன என்று கருதி மேற்குறித்த திருத்தங்களை மேற்கொண்டான்.

இந்திய முஸ்லிம்கள் கிலாபத்தைக் காப்பாற்றுவதற்கு எடுத்த முயற்சிகள் முஸ்தபா கமாலின் நடவடிக்கைகள் காரணமாக செயலற்றுப் போயின. இந்திய முஸ்லிம்கள் முதலாம் உலக மகா யுத்தத்தில் துருக்கி பங்கு கொண்டது முதலே துருக்கியின் நலவுரிமைகளைக் காப்பதில் அக்கறை காட்டினர். அப்போது கிலாபத் ஒழிப்புப் பிரச்சினை எழுந்திருக்கவில்லை. போரின் முடிவில் ஐரோப்பிய சக்திகளும் துருக்கிய தேசியவாதிகளும் எடுத்த முடிவுகள் காரணமாக கிலாபத் ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தகையதொரு சூழல் கிலாபத்தை மீண்டும் உயிர்ப்பிப்பதற்கான நடைமுறைச் சாத்தியக் கூற்றைக் கொண்டிருக்கவில்லை என்பதை இந்திய முஸ்லிம் பிரமுகர்களான முகம்மதலி ஜின்னா, அல்லாமா இக்பால் போன்றவர்கள் உணர்ந்து இந்திய கிலாபத் எழுச்சி நடவடிக்கைகளில் பங்குகொள்ளவில்லை.

குறிப்பாக கி. பி. 1838 முதல் அரசியல் நிர்வாகத்தில் பொது மக்களுக்குப் பங்களிக்கும் நோக்கமாக துருக்கியில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்த (தன்ழீமாத்) நடவடிக்கைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக கிலாபத் பற்றிய சாதக பாதகமான கருத்துக்கள் கலந்துரையாடப்பட்டதைக் காணமுடிகிறது.

நவீன சீர்திருத்தவாதிகளின் முன்னோடியான ஜமாலுத்தீன் ஆப்கானி தனி மனிதனின் கையில் ஆட்சி விடப்படுவதை விமர்சித்தார். அநியாயக்காரனான ஆட்சியாளனுக்கு எதிராக புரட்சி செய்யும் உரிமை பொது மக்களுக்கு உண்டு என்ற கருத்தை அவர் கொண்டிருந்தார். எனினும் ஜனநாயக வழிமுறையில் உள்ளது போன்ற சாத்வீகமான அதிகார மாற்றத்தை இஸ்லாமிய கிலாபத்தில் ஏற்படுத்துவதற்கான வழி பற்றி அவர் ஏதும் குறிப்பிடவில்லை. அவரது மாணவரான முஹம்மது அப்துஹு ஆட்சியாளனுக்கு அடிபணியவேண்டும் (உலுல் அம்ருக்கு வழிப்படுதல்) என்ற இஸ்லாமியக் கருத்தை மக்கள் தவறாகப் புரிந்துகொண்டுள்ளார்கள் என்று குறிப்பிட்டார். பொது மக்கள் அரசியல் அதிகாரத்தை பைஅத் செய்வதன் மூலம் கலீபாவிடம் ஒப்படைத்துவிட்டு அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொள்கின்றனர். மக்கள் ஆதரவின்றி அரசு செயற்படலாம் என்று அவர்கள் கருதியுள்ளனர் போலும் என்று சுட்டிக்காட்டினார். மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் பற்றி கலீபாக்கள் அறிந்திருக்கவில்லை என்றும் கருதினார். தகுதி இழக்கும் கலீபாவை பதவி நீக்க மக்கள் உரித்துடையவர்கள் என்றும் அவர் கருதினார்.

மற்றொரு நவீன சீர்திருத்தவாதியான றஷீத் ரிழா கிலாபத் ஆட்சியின் வீழ்ச்சிக்குக் காரணம் ஒழுங்கான ஓர் மஜ்லிஸுஸ் ஷுரா அமையாததே என்கிறார். உலுல் அம்ரு என்று தற்காலத்தில் அழைக்க முடிந்தவர்களில் அறிஞர்கள், தளபதிகள், பிரபல வர்த்தகர்கள், விவசாயிகள், அரசியற் கட்சிகளின் தலைவர்கள், மருத்துவர்கள், சட்டவாதிகள் என்பவர்கள் அடங்குவர் என்று இவர் கருதுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AL-Haj M.I.M. Abdullah J.P
President - MSSO

ஐரோப்பிய நாகரிகத்தால் கவரப்பட்டவரும் இந்திய முஸ்லிம்களின் மீள் எழுச்சியில் அதிக அக்கறை காண்பித்த வருமான சேர் செய்யித் அஹ்மத்கான் (கி. பி. 1817-1898) குர்ஆனினதோ சுன்னாவினதோ தெளிவான சட்டங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஓர் ஸ்தாபனம் அல்ல கிலாபத் என்று சுட்டிக் காட்டியுள்ளார். துருக்கி சுல்தான் அப்துல் ஹமீதை கலீபாவாக ஏற்பது "குறைசியரில் இருந்து கலீபா வருதல் வேண்டும்" என்ற ஹதீஸுக்கு மாற்றமான செயலாகும். அவரை கலீபாவாக நம்புபவர்கள் இந்த ஹதீஸின் பெறுமானத்தை மறுப்பவர்களாவர் என்றும், கலீபாவை சர்வதேச முஸ்லிம்களும் அங்கீகரித்தல் என்பது எவ்வகையிலும் பொருத்தமற்றது என்றும், கலீபாவின் ஆள்புல எல்லைக்கு அப்பால் வாழும் முஸ்லிம்களின் ஆட்சியாளராக - கலீபாவாக ஏற்கப்பட முடியாதவர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

செய்யித் அஹ்மத் கானின் வகுப்புத் தோழரான முஹ்ஸீன் முல்க் என்பவர் பின்வரும் கருத்தை வெளியிட்டுள்ளார். கலீபா மக்களுடன் கலந்துரையாடி முடிவு எடுக்கக் கடமைப்பட்டுள்ளார். தவறு செய்யும் கலீபாவை தடுக்கும் உரிமை ஒவ்வொரு முஸ்லிமுக்கும் உண்டு. கலீபா தொடர்ந்தும் தவறிழைப்பதிலேயே விடாப்பிடியாக இருந்தால் அவரைப் பதவியில் இருந்து வெளியேற்றிவிட முடியும். நான் நல்லது செய்தால் எனக்கு உதவி செய்யுங்கள். நான் தவறிழைத்தால் என்னைத் திருத்துங்கள் என்று முதலாம் கலீபா ஆற்றிய உரையைத் தனது கருத்துக்கு ஆதாரமாகவும் முன்வைத்தார்.

இவ்வாறு முஸ்தபா கமால் கி. பி. 1924 இல் கிலாபத் பதவியை ஒழிக்க முன்பே சுமார் அரை நூற்றாண்டு காலமாக துருக்கிய கிலாபத் அறிஞர்களின் விமர்சனத்துக்குள்ளாகி வந்துள்ளது. முஸ்தபா கமால் கிலாபத்தை ஒழித்துக் கட்டிய காலப் பகுதியில் வாழ்ந்த அறிஞர் அல்லாமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்பாலின் கருத்துக்கள் சீர்தூக்கிப் பார்க்கத் தக்கனவாகும். ஐரோப்பிய சிந்தனையின் தாக்கத்துக்குள்ளாகியிருந்த அல்லாமா இக்பால் கிலாபத் தன் அதிகாரத்தை நீண்ட காலத்துக்கு முன்பே இழந்து ஓர் அடையாளச் சின்னமாகவே உள்ளது என்று கருதினார். கிலாபத் சிதைவடையாதிருந்த காலத்தில் கலீபாவின் கீழ் ஒற்றுமைப்படுவது சாத்தியமாக இருந்தபோதும் தனித்தனி நாடுகளாக முஸ்லிம் பிரதேசங்கள் சிதைவடைந்துள்ள இக்காலப் பகுதியில் கலீபாவின் கீழ் முஸ்லிம் நாடுகள் ஒற்றுமைப்படுவது சாத்தியமில்லை என்பதே அவரது கருத்தாகும். கி. பி. 1909 இல் சுல்தான் அப்துல் ஹமீத் பதவி இறக்கப்பட்டு ஒருவகை ஜனநாயக ஆட்சி துருக்கியில் அறிமுகப்படுத்தப்பட்டபோது இஸ்லாமும் கிலாபத்தும் என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை அல்லாமா இக்பால் எழுதியிருந்தார். அதில் யாப்பினடிப்படையிலான அரசை அவர் ஆதரித்து எழுதியிருந்தார். அதுமாத்திரமன்றி மாறிச் செல்லும் அரசியற் சூழல் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்; அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் அரசியல் நடைமுறை முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் கருதினார். கடந்தகால இஸ்லாமிய வரலாற்று நிகழ்வு ஒன்றை எடுத்துக்காட்டி சமூக மாற்றங்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் கிலாபத்தில் ஏற்கனவே மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு பின்வரும் நிகழ்வைச் சுட்டிக் காட்டியுள்ளார்: குறைசியர் ஒருவரே கலீபாவாதல் வேண்டும் என்ற நியதி நீண்டகாலம் பின்பற்றப்பட்டது. அந்நியதி கைவிடப்பட்டு துருக்கிய இன ஆட்சியாளர் கலீபாவாக ஏற்கப்பட்டுள்ளார்.

குறைசியரின் அரசியல் ஆதிக்கம் ஒழிந்து விட்டதால் சம காலத்தில் அரசியல் ஆதிக்கத்தைக் கொண்டுள்ள ஆட்சியாளரை இமாமாக அல்லது கலீபாவாக ஏற்க வேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்ப்பந்தம் தோன்றியுள்ளது என்ற கருத்தை கி. பி. 1406 இல் மரணித்த பிரபல வரலாற்றாசிரியர் இப்னு கல்தூன் சுட்டிக் காட்டியுள்ளதையும் அவர் எடுத்தாண்டுள்ளார். ஆதலால் துருக்கியில் ஏற்பட்டுள்ள இம்மாற்றத்தை அங்கீகரிப்பதல்லாது மாற்று வழியில்லை என்று கருதியுள்ளார்.

கி. பி. 1924 இல் கலைத்துவிட்ட கிலாபத்தை மீண்டும் உருவாக்க வேண்டும் என்று முஸ்லிம்கள் சிலர் முயற்சித்துக் கொண்டிருக்கும்போது கி. பி. 1888 இல் எகிப்தில் பிறந்த சேஹ் அலி அப்துர் ராஸிக் என்பவர் கி. பி. 1925 இல் "இஸ்லாம் வஉசூலுல் ஹுகும்" எனும் நூலை எழுதி வெளியிட்டார். இந் நூலில் கலீபாவை நியமிப்பது சமயக் கடமை என்பதை நிறுவத் துணை செய்யும் ஒரு குர்ஆன் ஆயத்தையேனும் உலமாக்களால் சான்றாகக் காட்ட முடியவில்லை என்றும், அபூபக்கர் (றழி) தோற்றுவித்த அரசு இயல்பில் அறபு மயமானது என்றும் இராணுவப் பலத்தால் உருவாக்கப்பட்டது என்றும் எழுதியுள்ளார். பொய் நபிமாருக்கு எதிராக மேற்கொண்ட போர் சமய நோக்கில் அன்றி அரசியல் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது என்றும், அறபியர்களை ஐக்கியப்படுத்தி புதிதாகத் தோற்றுவித்த அரசைப் பாதுகாப்பதே அப்போரின் இலட்சியமாக இருந்ததன்றி சமயம் இலட்சியமாக இருக்கவில்லை என்றும் குறிப்பிட்டு, உலகியல் நலன்களைப் பேண முஸ்லிம்களுக்கு ஓர் அரசு தேவை எனின் ஏனைய நாடுகளைப் போல அவர்களும் ஓர் அரசை வைத்துக் கொள்ளலாம் என்ற கருத்துக்களையும் முன்வைத்துள்ளார். இதனால் எகிப்திய உலமாக்களில் ஒரு குழுவினர் அவருக்கு எதிராக பத்வா வழங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. பி. 1925 இல் அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்தில் இருந்தும் அவர் பதவிநீக்கம் செய்யப்பட்டார்.

இந்திய தேசியவாதியான அபுல்கலாம் ஆஸாத் (கி. பி. 1888-1979) கிலாபத்தை ஒழிக்கும் முஸ்தபா கமாலின் நடவடிக்கைகளை ஆதரித்தார். இஸ்லாமிய கிலாபத்தை மீண்டும் துருக்கியில் தோற்றுவிக்கும் சிந்தனையை அவர் முற்றாகக் கைவிட்டு, துருக்கியினரதும் அறேபியரதும் பிரதேச ரீதியானதும் சமய சார்பற்றதுமான தேசியவாத சிந்தனையை ஆதரித்தார். சமயசார்பற்றதும் ஜனநாயக வழியிலுமான அரசு ஒன்றை துருக்கியில் தாபித்தமைக்காக முஸ்தபா கமாலுக்கு தனது மனமார்ந்த வாழ்த்துச்செய்தியையும் அனுப்பி வைத்தார்.

இக்காலப் பகுதியில் வாழ்ந்த அமீர் அலி துருக்கியப் பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் இஸ்லாம் உலகத்தில் தனக்குரிய இடத்தைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமாயின் கலீபாவின் அந்தஸ்தும் கண்ணியமும் பேணப்பட வேண்டும் என்று சுட்டிக் காட்டினார். தான் நினைத்தவுடன் தன் இஷ்டப்படி கலைத்துவிட கிலாபத் ஒரு தேசிய நிறுவனம் அல்ல. சுன்னத் வல் ஜமாஅத் வழிமுறையில் இருந்து பிரிந்துவிடமுடியாதவாறு இணைந்த ஒரு நிறுவனம் அது. எந்த ஒரு தேசமும் தான் விரும்பின் இஸ்லாத்தை விட்டுவிடலாம் ஆயின், எந்த ஒரு நாடும் கிலாபத்தை தான் நினைத்தவாறு கலைத்துவிடும் உரிமையை-அதிகாரத்தைக் கொண்டிருக்கவில்லை என்றும் ஷீஆக் கோட்பாட்டைப் பின்பற்றிய செய்யித் அமீர் அலி சுட்டிக்காட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிலாபத் ஒழிப்பு இந்திய முஸ்லிம்களிடையே ஏற்படுத்திய உணர்வலைகளைப் போன்ற உணர்வலைகள் துருக்கியின் நேரடிப் பரிபாலனத்திற்குட்பட்டிருந்த மத்திய கிழக்குப் பிரதேச முஸ்லிம்களிடையே ஏற்படுத்தவில்லை. அறபு மக்களிடையே ஐரோப்பியர் புகுத்தியிருந்த தேசிய உணர்வும் அறபுக் கோத்திரத் தலைவர்கள் சிலர் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சித்தமையும் இதற்கான காரணங்களாக இருக்க முடியும்.

இஸ்லாமிய வரலாற்றில் முதன் முறையாக, ஸிப்பீன் யுத்தத்துடன் தோற்றம் பெற்ற காரிஜீக்கள், கிலாபத் சிந்தனை பற்றிய கலந்துரையாடல் ஒன்றைத் தோற்றுவித்திருந்தனர். அதன்பின் இருபதாம் நூற்றாண்டின் முதற்பகுதியில்தான் கிலாபத் சிந்தனை பற்றிய காத்திரமான கலந்துரையாடல் ஒன்று மீண்டும் இடம்பெற்றதைக் காண முடிகிறது. இக்கலந்துரையாடலில் அபுல்கலாம் ஆஸாத், அல்லாமா இக்பால், மௌலானா மௌதூதி போன்ற இந்திய உபகண்ட அறிஞர்களும் காத்திரமான பங்களிப்பைச் செய்ததைக் காண முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் IV

## இந்திய கிலாபத் இயக்கம்

நபிகளார் (ஸல்) அவர்களின் வபாத்தின்பின் பதவியேற்ற முதலாம் கலீபா முதல் கி. பி. 1924 இல் துருக்கியர் கிலாபத்தை உத்தியோகபூர்வமாக ஒழிக்கும் வரை இஸ்லாமிய இராச்சியம் கிலாபத் என்றும் அதனைப் பரிபாலிப்பவர் கலீபா என்றும் அழைக்கப்பட்டார். கிலாபத்தின் ஆள்புல எல்லைக்குள் வாழ்ந்த முஸ்லிம் குடிமக்கள் அவரை உலகியல் ஆன்மீகம் எனும் இரு துறைகளதும் தலைவராகக் கருதினர். கலீபாவின் ஆள்புல எல்லைக்கு வெளியே வாழ்ந்த முஸ்லிம்கள் அவரைத் தம் ஆன்மீகத் தலைவராக ஏற்றுக் கண்ணியப்படுத்தினர். இந்திய முஸ்லிம்கள் இப்பின்னைய நடைமுறையைத் தொடர்ந்து பின்பற்றினர்.

கி. பி. 711 இல் முஹம்மத் பின் காஸிமின் தலைமையில் சென்ற முஸ்லிம் வீரர்கள் இந்திய உபகண்டத்தின் சிந்து மாகாணத்தைக் கைப்பற்றினர். அது முதல் அப்பிரதேசம் ஈராக் கவர்னரின் பரிபாலனத்தில் உமைய, அப்பாசியக் காலப் பிரிவிலும், தொடர்ந்து இருந்தது. சிந்துக் குடிமக்கள் இக்கால பகுதியில் கலீபாவை உலகியல் ஆன்மீகத் தலைவராக அங்கீகரித்திருந்தனர். ஆப்கானிஸ்தானில் ஆட்சி அமைத்து வட இந்தியாப் பிரதேசங்களில் ஆதிக்கம் செலுத்திய கஸ்னி மஹ்மூத் (மர. கி. பி. 1030) பக்தாத் கலீபாவுக்கு பைஅத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து அவரை கலீபாவாக ஏற்றிருந்தார். டெல்ஹியின் சுல்தானாக பதவியேற்ற சுல்தான் இல்துமிஷ் (கி. பி. 1211-1236) பக்தாத் கலீபாவை அங்கீகரித்து பைஅத் செய்ததுடன் தான் வெளியிட்ட நாணயங்களில் கலீபாவின் பெயரையும் பதித்தார். கி. பி. 1258 இல் மங்கோலியர் பக்தாதிய கலீபாவைக் கொலை செய்து தலைநகர் பக்தாதை அழித்த பின்பும் டில்லி சுல்தான்கள் தாம் பதித்த நாணயங்களில் கலீபாவின் பெயரையே பொறித்ததுடன் குதுபாக்களில் கலீபாவை வாழ்த்தியும் வரலாயினர்.

டில்லியில் கி. பி. 1325-1351 வரை ஆட்சி செய்த சுல்தான் முஹம்மத் பின் துக்லக் எகிப்திய தலைநகரில் இருந்து பரிபாலனம் செய்த கலீபாவுக்கு பைஅத் செய்ததுடன் மூன்று முறை அவருக்குப் பரிசில்களை வழங்கி கௌரவித்தார் மைசூரில் ஆட்சி புரிந்த திப்பு சுல்தான் (கி. பி. 1782-1799) துருக்கிய ஆட்சி பீடத்தில் இருந்த கலீபாவுக்கு பைஅத் செய்து அவருக்குப் பரிசில்களையும் அனுப்பிவைத்தார்.

கி. பி. 1857 இல் இடம் பெற்ற சிப்பாய்க் கலகத்தின் பின் முழு இந்தியாவும் பிரிடிஷாரின் ஆட்சியின் கீழ் வந்த பின்பும் இந்திய முஸ்லிம்கள் துருக்கிய கலீபாவைத் தமது கலீபாவாக ஏற்று கண்ணியப்படுத்தினர். கலீபாவின் நேரடியான பரிபாலனத்துக்குட்படாத போதும் ஆன்மீக ரீதியான செயற்பாட்டிற்கு அவரையே தலைவராக ஏற்றனர். இந்நடைமுறையை இந்திய ஆட்சியாளர்களான பிரித்தானியரோ இந்தியாவின் பெரும்பான்மைக் குடிமக்களான இந்துக்களோ எதிர்க்கவில்லை.

இந்திய முஸ்லிம்கள் பிரிடிஷ் குடிமக்களாக இருந்த போதும், இஸ்லாமிய சகோதரத்துவ உணர்வால் உந்தப்பட்டு இத்தாலி கி. பி. 1911 இல் திரிப்போலியைத் தாக்கிய போது துருக்கிக்கு சார்பாகக் குரல் கொடுத்தனர். அஃதன்றி புனித ஸ்தலங்களை ஆக்கிரமிப்பாளரிடம் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பதற்காக பரங்கிமஹாலைச் சேர்ந்த மௌலானா அப்துல்பாரி, முஹம்மதலி ஜவ்ஹர் (1878-1931) சௌகத் அலி ஜவ்ஹர் (கி. பி. 1873-1938) என்பவர்கள் சேர்ந்து அன்ஜுமனே குதாஇ க.்.பா எனும் சங்கத்தைத் தாபித்தனர். எதிரிகளின் கெடுபிடியில் இருந்து புனித தலங்களைப் பாதுகாப்பதே இதன் நோக்கமாக இருந்தது. கி. பி. 1914 இல் உலக மஹா யுத்தம் ஆரம்பித்ததும் இச்சங்கத்தின் செயற்பாடுகள் நின்றுவிட்டன. எனினும் இச்சங்கத்தின் செயற்பாடு காரணமாக பின்வரும் மூன்று முக்கிய பணிகள் இடம்பெற்றன.

I. பல்வேறு சிந்தனைப் போக்குகளைக் கொண்டிருந்த முஸ்லிம் அறிஞர்கள் ஒரு முகப்படுத்தப்பட்டனர்.
II. ஹஜ்ஜாஜிகள் தம் கடமைகளை நிறைவேற்ற பல வழிமுறைகளூடாக உதவிபுரிந்தனர்.
III. பிரித்தானிய அரசு துருக்கியுடனான போரின் முடிவில் புண்ணிய தலங்களின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதாக பிரகடனப்படுத்தியது.

முதலாம் உலக மஹாயுத்தத்தின் போது துருக்கி பிரிட்டனுக்கு எதிராக ஜர்மனியுடன் கூட்டுச்சேர்ந்து போரிட்டது. இதனால் துருக்கி பிரிட்டனின் பகை நாடாகியது. பிரிடிச்சாரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த இந்தியாவில் வாழ்ந்த முஸ்லிம் குடிமக்கள் இப்புதிய சூழலிலும் துருக்கிய கலீபாவை தமது கலீபாவாகவே மதித்து நடந்தனர். அத்துடன் துருக்கிய கிலாபத்தின் நலனை பிரிடிஷார் பேணவேண்டும் என்றும் முஸ்லிம்கள் எதிர்பார்த்தனர். அவர்களிடம் கோரிக்கையும் விடுத்தனர். பிரிடிஷார் தமது இந்தியக் குடிமக்களான முஸ்லிம்களைப் பகைத்துக் கொள்வது தமது போருக்கான நடவடிக்கைகளைப் பாதிக்கும் என்று கருதி முஸ்லிம்களின் இக்கோரிக்கையை ஏற்பது போல நடித்தனர். அப்போதைய பிரிடிஷ் பிரதமர் லொய்ட்ஸ் ஜோர்ஜ் பல பொதுக்கூட்டங்களில் போரின் முடிவில் துருக்கியப் பேரரசு சிதைக்கப்படமாட்டாது என்று வாக்குறுதி வழங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தம் முடிவடைந்தபின் தான் அளித்த வாக்குறுதிகளை ஓரம் தள்ளிவிட்டு துருக்கியின் ஆள்புல எல்லைகளை மிகவும் சுருக்கினர். அறபுப் பிரதேசங்கள் துருக்கியின் ஆட்சியில் இருந்து விடுவிக்கப்பட்டன. ஹிஜாஸ் பிரிட்டனின் பாதுகாப்புப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டது. அதன் பரிபாலினம் அறபுகளிடம் ஒப்படைக்கப்பட்டது. இவ்வாறே சிரியா பிரான்ஸினதும், ஈராக், பலஸ்தீன் பிரிட்டனதும் பாதுகாப்புப் பிரதேசங்களாக்கப்பட்டன. இவ்வாறு துருக்கியப் பேரரசு சின்னாபின்னப்படுத்தப்படும்போது இந்திய முஸ்லிம்கள் பம்பாயில் மஜ்லிஸே கிலாபத் என்ற ஓர் இயக்கத்தை தோற்றுவித்தனர். இதன் இலக்கு கிரேக்கத்துக்கு எதிரான போராட்டத்தில் துருக்கிக்கு உதவுதல், கிலாபத்தின் கண்ணியத்தைக் காத்தல் என்பனவாகும். மவ்லானா அப்துல் பாரி இவ்வியக்கத்திற்கு தலைமை தாங்கினார். இதன் கிளைகள் இந்தியாவின் பல பகுதிகளிலும் ஆரம்பிக்கப்பட்டன.

மஜ்லிசே கிலாபத் ஒரு தூதுக்குழுவை இங்கிலாந்துக்கு அனுப்பியது. கிலாபத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தி, துருக்கி சுதந்திரமாக சிதையாமல் இருந்தால் மட்டுமே கிலாபத்தின் முக்கியத்துவத்தை பாதுகாக்கலாம் என்று இத்தூதுக்குழு வற்புறுத்தியது. இத்தூதுக்குழுவுக்கு மௌலானா ஜவ்ஹர் அலி தலைமை தாங்கினர், செய்யித் சுலைமான் நத்வி (1884-1953) அபுல் காஸிம், ஹஸன் முஹம்மத் ஹயாத் என்போர் அதன் ஏனைய உறுப்பினர்களாவர்.

இத்தூதுக்குழுவின் கோரிக்கை

I. துருக்கிய கிலாபத் போருக்கு முன்பு இருந்த நிலையில் இருத்தல்.

II. மக்கா, மதீனா, பைதுல் முகத்தஸ் கலீபாவின் பொறுப்பில் தொடர்ந்து இருக்க வேண்டும்.

இத்தூதுக்குழு கி. பி. 1920 மார்ச் 17 புறப்பட்டு சென்றது. இங்கிலாந்துப் பிரதமர் பின்வரும் பதிலை தூதுக்குழுவுக்கு அனுப்பி வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I. தோல்வியடைந்த - மற்றைய நாடுகள் நடத்தப்படும் விதமாக துருக்கியும் நடாத்தப்படும். விசேட சலுகைகள் கொடுக்கப்படமாட்டாது.

II. துருக்கிய பிரதேசம் மட்டுமே அதன் ஆளுகையில் விடப்படும். துருக்கியப் பிரதேசங்கள் அல்லாத வற்றை ஆளும் உரிமை அதற்கு வழங்கப் படமாட்டாது. தூதுக்குழு வெறுங்கையோடு திரும்பவேண்டியதாகியது.

இப்பதில் இந்திய முஸ்லிம்களின் உணர்வலைகளுக்கு எதுவித மதிப்பும் அளிக்கப்படவில்லை என்பதைக் காட்டுகிறது. இக்குழுவினர் தம்கோரிக்கைகளை முன்வைப்பதற்காக எட்டு மாதங்களாக ஐரோப்பிய நாடுகளில் சுற்றித் திரிந்தனர். ஈற்றில் வெறுங்கையோடு நாடு திரும்பினர். இத்தோல்வி ஏற்படுத்திய விரக்தி வேறு இரு இயக்கங்களின் தோற்றத்துக்கு வழிகோலியது.

I. ஹிஜ்ரத் இயக்கம்

II. அஹிம்சா வழியிலான ஒத்துழையாமை இயக்கம்

ஹிஜ்ரத் முஸ்லிம்களுக்குப் புதியதல்ல ஏற்கனவே அபிசீனியாவுக்கும், மதீனாவுக்கும் ஹிஜ்ரத் சென்ற அனுபவம் முஸ்லிம் சமூகத்துக்குண்டு. ஏற்கனவே ஆங்கிலேயர் ஆட்சியில் நாத்திகமும் கொடுங்கோண்மையும் வளர்வதால் இந்திய முஸ்லிம்கள் ஹிஜ்ரத் செல்லலாம் என்று சாஹ்வலியுல்லாஹ்வின் மகன் ஷாஅப்துல் அஸிஸ் (1746-1824) கி. பி. 1803 இல் ஒரு பத்வாவை வழங்கியிருந்தார். ஹிஜ்ரத் செல்வதனை அனுமதித்து மற்றொரு பத்வாவை ஷா முஹம்மத் இஸ்மாயில் ஷஹித் (கி. பி. 1781-1831) அவர்களும் கி. பி. 1828 இல் வழங்கியிருந்தார்.

கிலாபத் இயக்கம் வெற்றி தராததால் விரக்தியுற்ற முஸ்லிம்கள் ஹிஜ்ரத் பற்றி சிந்தித்தனர். மௌலானா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஹம்மதலிஜவ்ஹர், மௌலானா சௌகத் அலி ஜவ்ஹர் ஆகிய இருவரும் இந்தியாவின் பரிபாலகராகக் (வைஸ்ரோய்) கடமையாற்றியவருக்கு கி. பி. 1919 ஏப்ரல் 24 ஆம் திகதி ஒரு மனுவை சமர்ப்பித்தனர். அரசு இஸ்லாத்துக்கும் அதனைப் பின்பற்றும் முஸ்லிம்களுக்கும் பாதுகாப்புத்தராததால் ஜிஹாத் அல்லது ஹிஜ்ரத் எனும் இரண்டில் ஒன்றை தெரிவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் ஹிஜ்ரத் செல்வதொன்றே முஸ்லிம்களுக்கு உள்ள ஒரே வழி என்ற செய்தியை அம்மனு மூலம் அறிவித்தனர்.

கி. பி. 1920 இல் ஆப்கானிஸ்தானின் மன்னர் அமானுல்லாஹ் இந்திய முஸ்லிம்கள் ஆப்கானிஸ்தானில் குடியேறலாம் என்று பகிரங்கமாக அறிவித்தார். இவ்வறிவிப்பு அரசியல் நோக்கம் கொண்டதே அல்லாது உண்மையான அழைப்பாக இருக்கவில்லை என்பதை அறியாத கிலாபத் இயக்கத்தினர் ஹிஜ்ரத் செல்வதை ஆதரித்து பிரசாரம் செய்தனர். இச்சந்தர்ப்பத்திலும் பல அறிஞர்கள் ஹிஜ்ரத் செல்வதை ஆதரித்து பத்வா வழங்கினர். அபுல்கலாம் ஆஸாத் அவர்களும் (1885-1958) ஹிஜ்ரத் செல்வதை ஆதரித்து பத்வா வழங்கினார். அதில் அவர் உலக மகா யுத்தத்துக்கு முன்பு ஹிஜ்ரத் செல்வது இந்திய முஸ்லிம்களுக்கு விருப்புக்குரியதொன்றாக இருந்தது. தற்போது அது கடமையாகியுள்ளது என்றும் த.்.வா நோக்கில் வாழ்பவர் மட்டுமே இந்தியாவில் இருக்க அனுமதி உண்டு என்றும் குறித்திருந்தார். எனினும் அல்லாமா இக்பால், முஹம்மதலி ஜின்னா, ஹபீபுற்றகுமான் தேவ்பந்தி முதலானோர் ஹிஜ்ரத் செல்வதை ஆதரிக்கவில்லை.

இந்தியாவைப் பரிபாலித்த வைஸ்ரோய் ஆப்கானிஸ் தானுடன் நட்புறவை வளர்த்து ஹிஜ்ரத்தை தடுக்க முயற்சித்தார். இதற்கு இரையான ஆப்கான் அரசும் மக்களும் இந்திய முஸ்லிம்கள் தம் நாட்டுக்கு ஹிஜ்ரத் வருவதை எதிர்த்தனர். இந்திய அரசு கி. பி. 1920 இல் ஆப்கான் நுழையும் வழியை மூடிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் நிலபுலன்களை விற்றும் அரச உத்தியோகங்களைத் துறந்தும், தொழில்வாய்ப்புகளை உதரித்தள்ளியும், ஹிஜ்ரத் சென்ற சுமார் பதினெட்டாயிரம் முஹாஜிர்கள் இடைவழி தஞ்சமாயினர். அவர்கள் தம் ஊருக்கு மீண்டு வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பிரிடிஷ் ஆட்சியின் மீது முஸ்லிம்கள் கொண்டிருந்த வெறுப்பையே இந்நிகழ்வு காண்பிக்கிறது. இந்த ஹிஜ்ரத் போராட்டம் தோல்வி அடைந்ததற்குப் பின்வருவனவே காரணிகள் என்பர்.

I. ஆப்கானிஸ்தான் அரசின் எதிர்ப்பு
II. ஜமாஅதே உலமா ஹிந்து எனும் இயக்கமும் கிலாபத் இயக்கமும் ஹிஜ்ரத் செல்லும் திட்டத்தை எதிர்த்தன. ஹிஜ்ரத் என்பது தனிமனித விருப்புக்குரியதே அன்றி திட்டமிட்டு வழி நடத்துவதல்ல என்று அவ்வியக்கங்கள் கருதின.
III. அல்லாமா இக்பால், முஹம்மதலி ஜின்னா போன்ற தலைவர்கள் இத்திட்டத்தை எதிர்த்தமை.
IV. ஹிஜ்ரத் செல்ல எடுத்த முடிபு திட்டமிடப்படாத நிலையில் உணர்ச்சிவயப்பட்டு எடுத்ததாகும்.
V. ஆப்கானிஸ்தானில் நிலவிய வறுமையும் பொருளாதாரமுடமையும்.

கிலாபத் இயக்கம் இந்தியாவின் பல பகுதிகளிலும் தனது பிரசாரப் பணியை மேற்கொண்டது. மகாநாடுகளை நடாத்தியது. கி. பி. 1928 இல் மட்ராஸ் நகரில் நடைபெற்ற கிலாபத் இயக்கக் கூட்டத்திற்கு இலங்கைப் பிரமுகர்கள் சிலருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய மர்ஹூம் டி. பி. ஜாயா அக்கூட்டத்தில் கலந்துகொண்டார். கிலாபத்தை ஒழிக்க எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக டி. பி. ஜாயா தனதாதரவாளர்களுடன் இணைந்து இலங்கையிலும் பல விழிப்புணர்வுக் கூட்டங்களை நடாத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிலாபத்துக்கு ஆதரவான விழிப்புணர்வுக் கூட்டங்கள் இந்திய உபகண்டத்தில் நடந்துகொண்டிருக்கும் பின்னணியில் "இறைமை மக்களிடமே உள்ளது" என்ற கோட்பாட்டை ஏற்று கி. பி. 1922 இல் துருக்கி ஒரு குடியரசு என்ற பிரகடனத்தை துருக்கிப் பாராளுமன்றம் அங்கீகரித்தது. இந்நிலையில் இந்தியாவில் வாழ்ந்த பிரசித்தி பெற்ற நபர்களான மூன்றாம் ஆகாகாண் (1877-1957) செய்யித் அமீர் அலி (1849-1928) எனும் இருவரும் கிலாபத் ஒழிக்கப்படக்கூடாது என்பதற்கான ஏழு காரணங்களைக் காட்டித் துருக்கிய பத்திரிகை ஒன்றில் விளம்பரம் ஒன்றைப் பிரசுரித்தனர்.

இதனை வாசித்த முஸ்தபா கமாலும் தோழர்களும் சீற்றமடைந்தனர். இவ்விருவரும் பிரித்தானியரின் தூண்டுதலால் தான் இவ்வாறு விளம்பரப்படுத்தியுள்ளனர் என்றும், தமது உள்நாட்டு விடயங்களில் தலையிடுகின்றனர் என்றும், சுன்னத் வல் ஜமாஅத்தினரின் கிரீடமாகக் கருதப்படுகின்ற கிலாபத்தை சீஆக்கள் அங்கீகரிப்பதில்லை. அவ்வாறிருக்க இவ்விரு சீஆக்களும் சுன்னத்வல் ஜமாஅத்தினரின் நலன்பேண நன்நோக்குடன் வரவில்லை என்றும் எடுத்துக்காட்டி துருக்கிய மக்களின் மனப்பாங்கில் எதுவித செல்வாக்கையும் இவ்விளம்பரம் ஏற்படுத்துவதைத் தடுத்தனர்.

இந்தியாவில் இருந்து கிலாபத் இயக்கத்தைச் சேர்ந்த ஒரு தூதுக்குழுவினர் துருக்கிக்கு செல்ல முயற்சித்தனர். அவர்களில் சிலருக்கே அரசு "பாஸ்போட்" கொடுத்தது. சீஆக்கள் பிரிடிசார் சார்பாக செயற்பட்டார்கள் என்று காரணம் காட்டி முஸ்தபா கமால் இத்தூதுக் குழுவினரை சந்திக்க மறுத்தார்.

இந்திய கிலாபத் இயக்கம் பிரிடிஷாருக்கும் தலையிடி யாகியது. இந்திய முஸ்லிம்களுக்கு உலக மகாயுத்தத்தின் போது புனித தலங்களைப் பாதிப்புக்குள்ளாக்கமாட்டோம் என்று அளிந்திருந்த வாக்குறுதியை மீறி செயற்பட்டதால் இந்திய முஸ்லிம்கள் ஆத்திரம் அடைந்திருந்தனர். காந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிலாபத் இயக்கத்தில் வைத்திருந்த தொடர்பும் அவரது அஹிம்சா இயக்க நடவடிக்கைகளும் பிரித்தானியரின் இந்திய நலன்களுக்குத் தலையிடியைக் கொடுத்தன. அதனால் இந்தியக் கிலாபத் இயக்கத்தை பலவீனப்படுத்துவதில் அவர்கள் அக்கறை செலுத்தினார்கள். கிலாபத்தையே இல்லாதொழித்துவிட்டால் இந்திய முஸ்லிம்களின் கிலாபத் இயக்கம் பலவீனமடைந்து விடுமென்று கருதினர். அதனால் தமக்கும் முஸ்தபா கமாலுக்கும் தலையிடியைக் கொடுத்த கிலாபத்தை கலீபா பதவியை ஒழித்துவிடுமாறு பிரித்தானியா முஸ்தபா கமாலைத் தூண்டியது. இப்பின்னணியில் துருக்கிய தேசிய அசெம்பிளி (பாராளுமன்றம் கி. பி. 1924 மார்ச் 03 ஆம் திகதி துருக்கிய கலீபா அப்துல் மஜீதை நாடு கடத்தி கிலாபத்துக்கு முற்றுப்புள்ளிவைத்தது.

அறபு பிரதேசங்களின் ஆட்சி உரிமையையும் கலிபாப் பதவியையும் அடையலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கும் துருக்கிய அரசின் கவர்னராக நின்று மக்கா, மதீனா பிரதேசங்களை பரிபாலித்து வந்த சரிப் ஹுசைன் பெரிதும் ஏமாற்றமடைந்தார். தனக்கு வாக்களித்தபடி பிரித்தானியர் நடக்காது தன்னை ஏமாற்றிவிட்டனர் என்று கருதினார். அதனால் கி. பி. 1924-03-03 ஆம் திகதியில் இருந்து காலியான கலீபாப் பதவிக்கு கி. பி. 1924-03-07 ஆம் திகதி தன்னையே கலீபாவாகப் பிரகடனப்படுத்தினார்.

தமது பாதுகாப்புப் பிரதேசத்துள் இருந்து கொண்டு தமது அனுமதியில்லாமல் எப்படி கலீபாவாகப் பிரகடனப்படுத்த முடியும் என்று பிரித்தானியர் சரீப் ஹுசைனை அச்சுறுத்தினர். அத்தோடு சஉதிக் கோத்திர ஆட்சியாளரான அப்துல் அஸிஸை சரிப் ஹுசைன் மீது படை எடுக்குமாறு தூண்டினார். பிரிடிஷாரின் ஆதரவு கிடைத்ததால் அடுத்த ஆறு மாதங்களில் சரிப் ஹுசைனுக்கு எதிராகப்படை எடுத்து மக்கா, மதீனா நகர்கள் உட்பட்ட ஹிஜாஸ் பிரதேசத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். அறபுப் பிரதேச மக்களை அமைதிப்படுத்து முகமாக ஸஊதிக் கோத்திர ஆட்சியாளரான அப்துல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸீஸ் கி. பி. 1924 ஒக்டோபரில் மக்கா, மதீனாப் புனிதலங்களை உள்ளடக்கிய ஹிஜாஸ் மாகாணம் முஸ்லிம் உம்மத்துக்கு உரியது என்று பிரகடனப்படுத்தினார்.

கலீபாப் பதவியை ஒழித்தமை மார்க்க விரோதமான செயல் என்று கருதிய அல் அஸ்ஹர் அறிஞர் குழாத்தினர் புதிய சூழலை எதிர்கொண்டு ஒரு கலீபாவை நியமிப்பதற்காக அவசர மகா நாடு ஒன்றுக்கு அழைப்பு விடுத்தனர். எகிப்து ஒரு சுதந்திர நாடல்ல. பிரீட்டனின் பாதுகாப்புப் பொறுப்பில் உள்ள ஒரு நாடு ஆதலால் "அல்அஸ்ஹர்" பல்கலைக்கழகத்தினருக்குத் தாம் நினைத்தவாறு செயற்படும் உரிமை இல்லை என்று எடுத்துக்கூறி அல் அஸ்ஹரின் முயற்சியைத் தடுக்குமாறு பிரிடிஷார் எகிப்திய மன்னர் புஆதை நிர்ப்பந்தித்தினர். அதனால் மன்னர் புஆத் "அல் அஸ்ஹர்" அழைப்பு விடுத்த மகாநாட்டை கி. பி. 1926 ஜூலை மாதம் வரை பிற்படுத்தினார்.

அல் அஸ்ஹரின் கிலாபத் ஆதரவுச் சிந்தனைக்கு மாற்றீடாக கி. பி. 1926 மே மாதத்தில் ஹஜ் காலத்தில் சஊதி மன்னர் மக்காவில் முஸ்லிம் நாடுகளின் பிரதிநிதிகள் மட்டுமல்லாது முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்கின்ற அஜமி நாடுகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கி ஒரு மகா நாட்டைக் கூட்டினார். அல் அஸ்ஹர் அழைத்த மகாநாட்டிற்கு அறபு நாட்டில் பிரதிநிதிகள் மட்டுமே பங்கு பற்றினர். மக்கா மகா நாட்டில் முஸ்லிம் உம்மாவின் பிரதிநிதிகள் அறபி, அஜமி வேறுபாடின்றிக் கலந்து கொண்டனர். ஆயினும் இம்மகாநாட்டின் நிகழ்ச்சி நிரலில் கிலாபத் பற்றிய கலந்துரையாடலுக்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

மாறாக மக்கா, மதீனாப் புனித பூமியில் ஆட்சியாளராக அப்துல் அஸீஸை அங்கீகரிக்குமாறு ஒரு பிரேரணை முன்வைக்கப்பட்டது. இம்மாநாட்டில் கலந்து கொண்ட இந்தியத் தூதுக்குழுவின் அங்கத்தவரான மௌலான ஜவ்ஹர் அலி இப்பிரேரணையை மறுத்துப் பேசி நிராகரித்தார். அம்மகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் கலந்து கொண்ட மற்றும் பல பிரதிநிதிகளும் இக்கோரிக்கையை நிராகரித்தனர். அதனால் இப்பிரேரனை அங்கீகரிக்கப்படவில்லை. அல் அஸ்ஹர் அறிஞர்களால் கூட்டப்பட்ட மகாநாடோ சஊதி மன்னர் அப்துல் அஸீஸ் கூட்டிய மகா நாடோ காலியான கிலாபத்தை நிரப்புதற்கான வழிகாட்டலையேனும் வழங்க முடியவில்லை. ஆதலால் கிலாபத் பதவி தொடர்ந்து காலியாகவே உளது.

துருக்கியே தனது கிலாபத்தைத் தூக்கிஎறிந்ததால் விரக்தியடைந்த இந்திய கிலாபத் இயக்கம் தனது முயற்சியைக் கைவிட்டு இந்திய முஸ்லிம்களின் சமூக நலனில் அக்கறை காண்பிக்க ஆரம்பித்தது. அஃதன்றி கி. பி. 1926 இல் கைரோவில் நடக்கும் கிலாபத் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு விடுத்த அழைப்பையும் புறக்கணித்தது.

முஸ்தபா கமாலின் கிலாபத் ஒழிப்பு நடவடிக்கைக்கு இந்திய முஸ்லிம் அறிஞர்கள் சிலரும் ஆதரவாக இருந்தனர். அவர்களில் அபுல்கலாம் ஆஸாத் (1888-1958) குறிப்பிடத்தக்க ஒருவர். இஸ்லாமிய சமய இயலில் ஆழமான அறிவுடையவர். ஒரு தேசியவாதி, இஸ்லாம் மறுசீர் அமைக்கப்பட வேண்டும் என்று கருதியவர். ஆன்மீகத் தலைமைத்துவம் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் மட்டுமே உரியது என்று அவர் நம்பினார். கலீபாவுக்குக் கட்டுப்படுதல் சுன்னத்து வல் ஜமாஅத்து முஸ்லிம்கள் மீது கடமையாயினும் அது அல்லாஹ்வுக்கோ அவனது தூதருக்கோ கட்டுப்படுதல் என்ற அந்தஸ்தில் அல்ல என்பதும் அவரது கருத்தாகும். இவரது இக்கருத்து கிலாபத்தை ஒழித்தல் என்ற எல்லைக்கு செல்வதற்குப் போதுமானதா என்பதும் சிந்திக்கத்தக்கதே.

அல்லாமா இக்பாலும் கிலாபத்தை ஒழிப்பதை ஆதரித்தார். பின்வரும் காரணிகளைச் சுட்டிக்காட்டினார். உதுமானிய கிலாபத் வெறுமனே ஓர் அடையாள சின்னமாக இருந்ததே அன்றி நடைமுறை வாழ்வில் செல்வாக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்தும் ஒன்றாக இருக்கவில்லை. ஈரானியர் தமது சீஆக் கோட்பாட்டின் காரணமாக கிலாபத்தில் இருந்து ஏற்கனவே தூர விலகி உள்ளனர். மொரக்கோ வாசிகள் கிலாபத்தைச் சந்தேகக் கண்கொண்டு பார்த்தனர். அறேபியர்க்கு கிலாபத் பற்றிய ஆசை இருக்கிறது. இஸ்லாமிய சாம்ராஜ்யம் சிதையாது ஒற்றுமைப்பட்டிருந்த காலத்தில் கிலாபத் பயனுடையதாகவும் நடைமுறைச் சாத்தியப்பாடுடையதாகவும் இருந்தது. இன்றுள்ளது மாதிரியான தனித்தனி நாடுகளான முஸ்லிம் நாடுகளை ஒன்றிணைப்பதற்கு அக்கோட்பாடு தடையாக உள்ளது.

இக்குறைபாடுகளை களைவதற்காகவே துருக்கிய அறிஞர்கள் தெரிவு செய்யப்பட்ட ஒரு சபையில் அல்லது ஒரு குழுவின் பொறுப்பில் கிலாபத் இருப்பது உகந்தது என்று கருதி தேசிய அசெம்பிளியைத் தெரிவு செய்துள்ளனர். குடியரசு அமைப்பு இஸ்லாமிய சிந்தனையுடன் இணைந்தது மட்டுமன்றி தற்கால இஸ்லாமிய உலகில் ஏற்பட்டுள்ள சிந்தனைத் தாக்கத்தின் காரணமாக அவசியமானது என்றும் இக்பால் கருதுகின்றார்.

இந்திய கிலாபத் இயக்கம் தனது இலட்சியத்தில் வெற்றி காணாத போதும் ஏகாதிபத்தியவாதிகளான பிரிடிஷாருக்கு எதிரான கருத்துணர்வுகளை வளர்த்தது. சுதந்திர உணர்வை வளர்த்து அதற்காகப் போராடி சோதனைகளை எதிர்கொள்ளும் மனப்பாங்கு வளரப் பின்னணியாகியது. கிலாபத் இயக்கத்தின் ஊடாகவே மகாத்மா காந்தி சமூக தலைமைத்துவத்தை நோக்கி நகர்ந்தார் என்பதும் கருத்திற் கொள்ளத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் V

# கிலாபத் கோட்பாடும் நடைமுறையும் ஒரு வரலாற்றுப் பார்வை

## (1) கிலாபத் அறிமுகம்

நபிகளார் (ஸல்) அவர்கள் மதினாவுக்கு ஹிஜ்ரத் சென்றது முதல் இறை தூதை ஒப்புவிக்கும் பணியுடன் சேர்த்து மதினா நகரின் அரசியற் தலைமைத்துவத்தையும் தாங்கி நின்றார்கள். எனினும் அவர்களை ஆட்சியாளர் என்ற அந்தஸ்திலன்றி இறைதூதர் என்ற அந்தஸ்திலேயே மனிதர்கள் கண்ணியப்படுத்தி அவருக்கு அடிபணிந்து நடந்தார்கள்.

மதினா சாசனம், ஹுதைபியா உடன்படிக்கை போன்ற சமாதான சகவாழ்வுக்கான உடன்படிக்கைகளை எதிர் தரப்பாருடன் செய்தல், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டல், நீதி செலுத்துதல், மனிதர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல் போன்ற அரசியல் நடவடிக் கைகளை அவர்கள் மேற்கொண்டிருந்த போதும் அரசியற் தலைவராக அவர் இனங்காட்டப்படாது இறை தூதராகவே இனங்காட்டப்பட்டார். அரசியற் தலைமைத்துவத்தை விட நபித்துவம் கண்ணியம் மிக்கதாக இருந்தமையும், நபித்துவம் என்பது அரசியல் உட்பட உலகியல் விடயங்கள் அனைத்துடன் ஆன்மீகத் துறையையும் உள்ளடக்கியதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தமையும், நபித்துவம் என்பது மனிதர்களால் முயற்சித்துப் பெற்றுக்கொள்ளமுடியாத ஓர் இறை அருளாக இருந்தமையும், நபிகளார் (ஸல்) அவர்கள் ஆட்சியாளர் என்றல்லாது இறை தூதராக மக்களால் கண்ணியப்படுத்தப்படுதற்கான காரணங் களாயின. நபிகளார் (ஸல்) அவர்களின் "வபாத்துடன் நபித்துவம் முற்றுப் பெற்றதும் அவர்களின் பிரதிநிதியாக நின்று குலபாஉற்றாசிதூன்கள் ஆட்சி செய்த காலப்பகுதியிலேயே அரசியல் முதன்மை பெற்றதுடன் இஸ்லாமிய அரசியல் கோட்பாடும் நடைமுறைக்கு வந்தது.

நபிகளார் (ஸல்) அவர்கள் வபாத்தாகும் கால கட்டப்பகுதியில் அறேபிய தீபகற்பத்திற்கு மேற்கே உரோமப் பேரரசும், கிழக்கே பாரசிகப் பேரரசும் செல்வாக்குப் பெற்று இருந்தன. இவ்விரு அரசிலும் தெய்வீக உரிமைக் கோட்பாட்டினடியிலான வாரிசுரிமை வழிமுறையே அடுத்த ஆட்சியாளரைத் தெரிவு செய்வதற்கு வழி காட்டியது.

நபிகளார் (ஸல்) அவர்களின் "வபாத்தை" அடுத்து பதவியேற்கும் அடுத்த கலிபாவைத் தெரிவு செய்வதற்கு நபிகளார் (ஸல்) அவர்களின் நபித்துவப் பதவி வழி தெய்வீகக் கோட்பாட்டுனான வாரிசுரிமை நடைமுறையைப் பின்பற்றுவது சாத்தியமானதாக இருந்தபோதும் நபிகளார் (ஸல்) அவர்களின் கீழ் பயிற்சி பெற்ற சஹாபாக்கள் இவ்வழிமுறையைப் பின்பற்றவில்லை.

நபிகளாரின் வபாத்தின் பின் காலியாகும் தலைமை பீடத்தை நிரப்புவது எவ்வாறு என்ற அறிவுறுத்தல்கள் எதனையும் அல்குர்ஆனோ நபிகளாரோ நேரடியாக வழங்கவில்லை. அவ்வாறு வழங்கியிருந்தால் அதனை எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அரசியற் சூழல் மாற்றங் களை கருத்திற் கொள்ளாது உலகம் முடியும் வரை அவ்வழிமுறை ஒன்றை மட்டுமே பின்பற்ற வேண்டிய நிர்ப்பந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டிருக்கும். அவ்வழிமுறையில் திருத்தங்களையோ மாற்றங்களையோ கூட்டலையோ குறைத்தலையோகூட செய்யமுடியாதிருக்கும்.

ஆதலால் நேரடியான ஒரு வழிமுறையைக் காண்பிக்காது பிரச்சினைகள் தோன்றும் போது அவற்றைத் தீர்க்க கையாளவேண்டிய வழிமுறைகளை இஸ்லாம் வழங்கியிருந்தது. "... அவர்களுடைய ஒவ்வொரு காரியத்தையும் தங்களுக்குள் கலந்தாலோசிப்பார்கள்....." (42:38)

"... செயற்பாடுகளின் போது அவர்களைக் கலந்தாலோசிப்பீராக..." (3 :159) என்று பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரு வழிமுறையாக கலந்தாலோசித்தலை அல்குர்ஆன் அறிமுகப்படுத்தியிருந்தது.

அல்குர்ஆனின் நேரடி வழிகாட்டலோ, முன்னைய வேதங்களின் வழிகாட்டலோ இல்லாத பல சந்தர்ப்பங்களில் நபிகளார் (ஸல்) சஹாபாக்களுடன் கலந்துரையாடித் தீர்மானங்களைப் பெற்றிருந்தார்கள். பத்ருப் போர்க் கைதிகளை யாது செய்வது என்ற அறிவுறுத்தல் எதனையும் நபிகளார் முன்னைய வேதங்களிலேனும் கண்டு கொள்ளாததால் சஹாபாக்களைக் கூட்டி ஆலோசனை கேட்டுப் பெற்றுக் கொண்ட முடிவையே அமுலாக்கினார்கள்.

அல்குர்ஆனினதும் நபிகளாரதும் இவ்வழி காட்டல் சஹாபாக்களின் மனதில் ஆழமாகப் பதிந்திருந்ததால் "ஸகீபா பனி ஸாஈதா என்றழைக்கப்பட்ட கலந்துரையாடல் மண்டபத்தில் ஒன்று சேர்ந்து கலந்து கதைத்து அபூபக்ர் (றழி) அவர்களைத் தமது தலைவராக, ரஸூலுல்லாஹ்வின் பிரதிநிதியாக (கலிபதுற்றசூல்) ஏற்று பைஅத் செய்தார்கள். அதுமுதல் கலீபா என்ற பதம் இஸ்லாமிய அரசியலில் வழக்கிற்கு வந்தது. உமர் (றழி) பதவியேற்றதும் அவர் நபிகளாரின் பிரதிநிதியின் பிரதிநிதி (கலிபத, கலிபத ரஸூலல்லாஹ்) என்றழைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியேற்பட்டது. அது அழைப்பதற்கு சிரமமான ஒரு சொற்றொடரராகும். அ∴தன்றி அபூபக்ர் (றழி) பிரதிநிதி என்பது இஸ்லாமிய சிந்தனை வழி பொருத்தமற்றதாகவும் இருந்தது. மக்கள் நலனைப் பேணுவதற்காக உழைப்பது ஆட்சியாளரின் கடமை என்பதாலும், மக்களே பைஅத் செய்து கலீபாவிடம் ஆட்சி பொறுப்பை ஒப்படைப்பதாலும் பொதுமக்களின் பிரதிநிதி அல்லது பொது மக்களின் தலைவர் என்பதே பொருத்தமானது என்று கருதி இரண்டாம் கலீபாவை "அமீருல் முஉமினீன்" என்றழைத்தனர். அதன் பின் வந்த ஆட்சியாளர்களை விளிக்கும் போது அமிருள் முஉமினீன் என்றழைத்த போதும் அவர்களைப் பொதுவாக எல்லோரும் கலீபா என்றே அழைத்தனர். மக்களின் தெரிவு முறையாலன்றி ஆயுத பலத்தால் ஆட்சியைக் கைப்பற்றிய உமைய, அப்பாசிய ஆட்சியாளர்களும் தம்மை கலீபாக்கள் என்றே அழைத்துக் கொண்டனர். அ∴தன்றி இஸ்லாம் அறிமுகப்படுத்திய இவ்வரசியல் வழிமுறையும் சிந்தனையும் "கிலாபத்" கோட்பாடு என்றே அழைக்கப்பட்டது.

உமையா, அப்பாசிய ஆட்சியாளர்கள் வாரிசுரிமை அடிப்படையிலேயே பதவியேற்றனர். குலபாஉற்றாசிதூன்கள் காலத்தில் இருந்த தெரிவு முறையோ அக்காலத்தில் கலீபா ஒருவரிடம் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்ட தகைமைகளோ இவர்களிடம் இருக்கவில்லை. விசாலமான ஒரு நிலப்பரப்பை ஆட்சிபுரிந்த அவர்கள் உரோம, பாரசிக முடி மன்னர்கள் போல சிம்மாசனத்தில் அமர்ந்து ஆட்சிபீடத்தை அலங்கரித்தனர். கிலாபத் கோட்பாட்டுடன் தொடர்புடைய "பைஅத்" செய்தல் போன்ற சில பண்புகளை சடங்கு ரீதியாகப் பின்பற்றினர். ஆயின் குலபாஉற்றா சிதூன்கள் கால பைஅத்தின் உயிரோட்டம் அதில் இருக்கவில்லை. பைதுல்மால் அமைப்பிலும் இதே நடைமுறையே இருந்தது.

அப்பாசிய ஆட்சியின் பிற்காலப் பகுதியில் மத்திய அரசு பலம் குன்றி சிற்றரசுகளின் ஆதிக்கம் வலுவடைந்திருந்தது. கலீபா வெறும் பெயர் அளவிலான ஓர் அடையாளச் சின்னமாகவே இருந்தார். அரச நிர்வாகத்தைத் தானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பார்வை செய்யும் அதிகாரம் அவருக்கு இருக்கவில்லை. கிலாபத் கோட்பாடு மக்களது அங்கீகாரத்தைப் பெற்று, சமய சிந்தனையுடன் இணைந்ததாக இருந்ததால் சிற்றரசுகள் கிலாபத்தை ஒழிக்காது கலீபாவைத் தம் கைப்பாவையாகப் பயன்படுத்தவே முயற்சித்தன. கலீபா குறைசிக் குலத்தவராக இருக்க வேண்டும் என்ற ஒரு நியதி ஏற்கனவே பின்பற்றப் பட்டு வந்ததால் சிற்றரசுகள் கலீபாப் பதவிக்கு உரிமை கொண்டாடவோ கலீபா என்று தம்மை அழைத்துக்கொள்ளவோ முன்வரவில்லை.

கலீபாவின் பெயரால் இடப்படும் சட்டங்களையே பொதுமக்கள் அங்கீகரித்ததால் தாம் விதிக்கும் சட்டவிதிகளை சிற்றரசுகள் கலீபாவின் அங்கீகாரத்துடன் அவரது சட்டமாகவே மக்களிடை அறிமுகப்படுத்தின. இதனால் கலீபா என்று சிற்றரசர்கள் நாமம் சூட்டிக் கொள்ளாது தங்களை அமீர்கள் என்றே அழைத்துக் கொண்டனர். ஆயினும் கலீபாவுக்குரிய உலகியல் அதிகாரங்கள் அனைத்தையும் அவர்கள் தம் இஷ்டம் போல பயன்படுத்திக் கொண்டனர்.

இஸ்லாமிய வரலாற்றில் கி. பி. 632 - 661 வரை ஆட்சி செய்த குலபாஉற்றாசிதீன்களில் முதல் மூவரும் மதினாவையும் நாலாமவர் கூபாவையும் தலை நகராகக் கொண்டு ஆட்சி செய்தனர். அதன் பின் உமையாக்கள் டமஸ்கஸைத் தலைநகராகக் கொண்டு கி. பி. 661-750 வரையும் அப்பாசியர் பக்தாதைத் தலைநகராகக் கொண்டு கி. பி. 750 - 1258 வரையும் ஆட்சி செய்தனர். மங்கோலியர் கி. பி. 1258இல் பக்தாதைக் கைப்பற்றியதால் அப்பாசியர் கி. பி. 1258-1517 வரை கெய்ரோவைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். உதுமானியத் துருக்கியரான சுல்தான் ஸாலிம் (கி. பி. 1512 - 1520) கி. பி. 1517 இல் எகிப்தைக் கைப்பற்றினார். அது முதல் அவரை முஸ்லிம் உலகு கலீபாவாக ஏற்றுக் கண்ணியப்படுத்தியது. அதனால் கி. பி. 1517-1924 வரை உதுமானியத் துருக்கியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்தன்பூலை தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். முஸ்தபா கமாலின் தலைமையில் ஆட்சி புரிந்த துருக்கிய தேசியவாதிகள் தமது பாராளுமன்றத்தில் கி. பி. 1924 இல் மசோதா ஒன்றை நிறைவேற்றி கிலாபத் ஆட்சியை ஒழித்துக் கட்டினர். அது முதல் கிலாபத் ஆட்சி உலகில் எங்கும் நடைமுறையில் இல்லை.

கலீபா குறைசியராக இருத்தல் வேண்டும் என்ற கருத்தைத் தரும் ஹதிஸ் ஒன்று பிரபல்யமாகி இருந்தது. அதனால் கி. பி. 1517-1924 வரை ஆட்சி செய்த உதுமானியத் துருக்கியரும் கி. பி. 1526-1857 வரை இந்தியப் பிரதேசங்களை ஆட்சி செய்த மொகலாய ஆட்சியாளர்களும் தம்மை கலீபாக்கள் என்றழைக்காது சுல்தான்கள் என்றே அழைத்துக் கொண்டனர்.

அப்பாசிய ஆட்சியின் போது கி. பி. பத்தாம் நூற்றாண்டில் இருந்து கலீபா பக்தாதில் ஆட்சி பீடத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும் போதே அப்பாசிய ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களில் சிற்றரசுகள் பல தம் ஆட்சியை நிறுவி இருந்தன. அவற்றுள் பாதிமிக்கள் தவிர்ந்த ஏனைய சிற்றரசுகள் பெயரளவிலேனும் கலீபாவை அங்கீகரித்திருந்தன. ஆதலால் இக்காலப்பகுதியில் சிற்றரசுகளை ஒன்றிணைக்கும் தொடுகயிறு போல கிலாபத் அமைந்திருந்தது. ஆயினும் நடைமுறையில் இப்பிற்கால அப்பாசிய ஆட்சியாளர்கள் பெயரளவிலான கலீபாக்களாகவே இருந்தனர்.

மதீனாவில் மாநகர ஆட்சியாக நபிகளார் (ஸல்) அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட இஸ்லாமிய ஆட்சி அவர்கள் "வபாத்" ஆகும் காலப்பகுதியில் அறபுத் தீபகற்பம் முழுவதையும் அளாவியதாக விரிவடைந்திருந்தது. இரண்டாம் கலிபாவின் காலத்தில் ஏற்பட்ட முதற்கட்ட இராச்சிய வியாபகம் கீழைத்தேய உரோம சாம்ராஜ்யத்தின் ஆசிய, ஆபிரிக்க பிரதேசங்களையும் பாரசிக சாம்ராஜ்யத்தையும் உள்ளடக்கியிருந்தது. பரந்த இப்பிரதேசத்தை நிருவகிக்க உமர் (றழி) அவர்கள் நிதி, நீதி, நிர்வாகம் முதலாம் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகளில் புதிய சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தினார்கள். இச்சீர்திருத்தங்களை சஹாபா சமூகத்து மூத்த அறிஞர்கள் இராச்சிய நிர்வாகத்தின் தவிர்க்க முடியாத அங்கங்களாக ஏற்று கிலாபத் கோட்பாட்டின் வளர்ச்சிக்கு அங்கீகாரம் அளித்தனர்.

உமையாக் காலத்தில் இஸ்லாமிய இராச்சியம் மேற்கே வடஆபிரிக்க கரையையும் ஸ்பெயினையும் உள்ளடக்கி, கிழக்கே இந்திய உபகண்டத்தின் சிந்து நதிப்பிரசேத்தையும் உள்ளடக்கி வியாபித்திருந்தது. கி. பி பத்தாம் நூற்றாண்டின் பின் தூர கிழக்குப் பிரதேசமான இந்தோனேசியா வரை இஸ்லாமிய ஆட்சி வியாபித்தது.

எனினும் மூன்று கண்டங்களிலும் வியாபித்திருந்த கிலாபத்தின் நிர்வாகத்தை இரண்டாம் கலிபாவின் முன்மாதிரியைப் பின்பற்றியேனும் திறன் மிக்க நிர்வாகமாக மாற்ற பின்வந்த ஆட்சியாளர்கள் முயற்சிக்கவில்லை. உமர் இப்னு அப்துல் அஸிஸ் (றஹ்) அதற்கான முயற்சியை மேற்கொள்ள ஆரம்பித்த போதும் அவரது ஆட்சிக்காலம் மிகக் குறுகியதாக இருந்ததால் அம்முயற்சி பயன் தரவில்லை.

கிலாபத் கோட்பாடு காலத்தின் தேவைகளுக்கு முகங்கொடுக்குமுகமாக விரிவாக்கப்படவேண்டும் என்ற தேவையை முஸ்லிம் அறிஞர்கள் உணர்ந்து செயற்பட ஆரம்பித்தனர். தமது சுயநலனைப் அது பாதிக்கும் என்று கருதிய ஆட்சியாளர்கள் அதனை ஊக்குவிக்கவில்லை. மன்னராட்சியின் நலன்களுக்கு இத்தகைய முயற்சிகள் குந்தகத்தை ஏற்படுத்தும் என்று ஆட்சியாளர்கள் கருதியதால் இத்துறையில் ஈடுபாடு காட்டிய சில அறிஞர்களைத் தண்டிக்கவும் அவர்கள் தயங்கவில்லை. எனினும் மிகச் சிலர் இத்துறை சார்ந்த சில ஆக்கங்களை விட்டுச் சென்றுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தனைக் குழுக்களின் கிலாபத் கோட்பாடு பற்றிய கருத்துக்கள்

நபிகளார் (ஸல்) உயிர்வாழ்கின்ற காலப்பகுதியில் இஸ்லாமிய சமூகமும் இஸ்லாமிய அரசும் அவரது ஆளுமையை மையமாக வைத்தே வளர்ந்தன. அவர்களது மரணத்தின் பின்பே அரசியற் கோட்பாடு பற்றிய கருத்து முரண்பாடுகள் முஸ்லிம்களிடையே தோற்றம் பெற்றன.

நபிகளார் (ஸல்) அவர்களின் வாரிசு என்ற தோரணையிலும் நபிகளாரின் ஆன்மீக ரீதியான பிரதிநிதி என்ற தோரணையிலும் அலி (றழி) அவர்களுக்கும், அலி-பாதிமா வாரிசுகளுக்கும் கலீபாப் பதவி வழங்கப்படுதல் வேண்டும் என்ற கொள்கையை சீஆக்கள் முன்வைத்தனர். நபிகளார் (ஸல்) அல்லாஹ்வினால் நியமிக்கப்பட்டவர். அல்லாஹ்வினால் நியமனம் பெற்றவர் தனக்குப் பின் பதவி வகிப்பவரை நியமிக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினர். இவ்வகையில் கலீபா என்பவர் தெய்வீக நியமனம் பெற்றவர் என்கின்றனர். அஃதன்றி கலீபாவைத் தெரிவு செய்யும் உரிமை மக்களுக்கு இல்லை என்ற சிந்தனையையும் முன்வைத்துள்ளனர்.

சுன்னத் வல் ஜமாஅத்தினர் கலீபா மக்களால் தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தனர். அதனாலே தான் முதல் நான்கு கலீபாக்களும் வித்தியாசமான வழிமுறையிலேனும் மக்களால் தெரிவு செய்யப்பட்டனர்.

காரிஜிக்கள் மக்களின் தெரிவை அங்கீகரித்து முதல் இரு கலீபாக்களை ஏற்றுக்கொண்ட போதும் பின் இரு கலீபாக்களின் இறுதிக் காலப்பகுதி ஆட்சியை அவர்கள் பாவம் செய்தவர்கள் என்ற காரணத்தைக் காட்டி நிராகரித்தனர். நன்மையை ஏவித் தீமையைத் தடுப்பது பொதுமக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமை என்று கருதினர். பெரும்பாவம் செய்தவர்கள் கலீபாப் பதவியை வகிக்கத் தகுதி அற்றவர்கள் என்றும், அவர்கள் காபிர் என்றும் கருதினர். இவ்வாறான ஆட்சியாளருக்கு எதிராக போரிடுவதும் கிளர்ச்சி செய்வதும் சமய அங்கீகாரம் பெற்ற செயல் என்றே கருதினர். கலீபா குறைசியராக இருக்க வேண்டும் என்ற கருத்தையும் நிராகரித்தனர்.

முர்ஜிக்கள் என்போர் ஒருவனை முஸ்லிம் என்றோ காபிர் என்றோ தீர்மானிக்கும் உரிமை அல்லாஹ்வுக்கு மட்டுமே உண்டு. கலீபா பாவம் செய்பவராக இருந்தபோதும் அவருக்கு அடிபணிவது குடிமக்களின் கடமை என்று கருதினர்.

"கதரிய்யாக்கள் மனிதன் செயற் சுதந்திரம் உடையவன், அவனின் செயற்பாட்டிற்கு அவனே பொறுப்பானவன் என்றனர். அதன்வழி ஆட்சியாளன் தனது செயற்பாட்டுக்கு அல்லாஹ்விடம் பதில் கூறக் கடமைப்பட்டவன். அவன் தவறு செய்யும் பட்சத்தில் பதவியைத் துறக்குமாறு வற்புறுத்த வேண்டும் இல்லையேல் பதவியில் இருந்து அவரை நீக்கி விட வேண்டும் என்று கருதினர். குறைசியர் தான் கலீபாவாக வேண்டும் என்ற கருத்தை நிராகரித்து தக்வாவுடையவர் எவரும் கலீபா பதவியை வகிக்கலாம் என்ற கருத்துடையவர்களாக இருந்தனர்.

மு:.ததிலாக்களும் மனிதன் செயற் சுதந்திரம் உடையவன் என்ற கருத்தை வலியுறுத்தினர். ஆட்சியாளர் நீதமாக நடப்பவராக இருக்க வேண்டும். முஸ்லிம் உலகிற்கு ஒரே நேரத்தில் ஒருவர் மட்டுமே தலைவராக இருக்க வேண்டும் என்றும் நீதியற்ற முறையில் ஒருவர் ஆட்சியைக் கைப்பற்றினால் மட்டுமே அவருக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்யலாம் என்று கருதினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தனையாளர்கள் சிலரின் கிலாபத் கோட்பாடு பற்றிய கருத்துக்கள்

அரசியற் சிந்தனைக் குழுக்களில் கருத்துக்கள் மேற்குறித்தவாறு இருந்தபோதும் கி. பி. 661 இல் உமையா ஆட்சி தோற்றம் பெற்றது முதல் கி. பி. 1924 இல் கிலாபத் ஒழிக்கப்படும் வரை வாரிசுரிமை அடிப்படையிலான மன்னராட்சியே, உமைய, அப்பாசிய, உதுமானிய துருக்கிய ஆட்சியின் போது நிலவியது என்பது வரலாற்று உண்மையாகும். அப்பாசியர் காலத்தில் ஏற்பட்ட அறிவியல் புரட்சி காரணமாக விஞ்ஞானம், மருத்துவம், பிக்ஹ் தொழில்நுட்பம், வரலாறு, தத்துவ இயல், மெய்ஞ்ஞானம், அழகியல் முதலாம் பலதுறைகளில் வளர்ச்சி ஏற்பட்டு அவ்வத்துறையில் பல நூல்கள் வெளிவந்த போதும் அரசியல் விஞ்ஞானம் சார்ந்த ஆக்கங்கள் விரல் விட்டு எண்ணத்தக்கதாகவே வெளிவந்தன.

உமைய, அப்பாசிய, ஆட்சியாளர்கள் தங்களை கலீபாக்கள் என்றழைத்துக் கொண்ட போதும் முடிமன்னர்கள் போல ஆட்சி செய்தனர். தாம் விமர்சிக்கப்படுவதையோ மன்னராட்சிச் சிந்தனைக்கு முரணான கருத்துக்கள் பரப்பப்படுவதையோ அவர்கள் சகிக்காமையே அரசியல் விஞ்ஞானம் பற்றிய கலை வளராமைக்கான காரணம் எனலாம். இருந்த போதும் ஆட்சியாளர்களின் அடக்கு முறைக்கு மத்தியிலும் சிலர் ஆட்சியாளர்களை விமர்சிக்கத் தயங்கவில்லை.

பகுத்தறிவு வாதத்திற்கு உயிரூட்டி அதனை அரசோச்சவைக்க முயற்சித்த கலீபா மாமூனும் (கி. பி. 813 - 833) அடுத்து பதவி வகித்த முஉதஸிமும் பகுத்தறிவு வாதத்தை எதிர்த்தவர்களைக் கடுமையாக தண்டித்தனர். கலீபாவை விமர்சித்தார் என்ற ஒரு குற்றத்துக்காக மப்சூத் எனும் ஹனபி மத்ஹப் சார்ந்த நூலை எழுதிய இமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சறக்சி (மர. கி. பி. 1090) என்பவரை கலீபா பதினைந்து வருடங்கள் சிறையில் அடைத்து வைத்தார். கி. பி. 1382 இல் மரணித்த பிரபல வரலாற்றுத் தத்துவ இயலாளரான இப்னு கல்தூன் நிர்வாக விடயங்களில் இராணுவத்தின் தலையீடு இருந்ததைச் சுட்டிக் காட்டியுள்ளார். கி. பி. 1013 இல் மரணித்த பாகிலானி ஆட்சியாளரை "பைஅத்" மூலம் உறுதிப்படுத்தும் அதிகாரம் மக்களுக்கு இருந்த போதும் அவரைப் பதவியின் நீக்கும் அதிகாரம் மக்களுக்கு இருக்கவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளார். கி. பி. 1876 இல் அமுலுக்கு வந்த துருக்கிய அரசியல் யாப்பில் காலியாகும் கலீபாவின் வெற்றிடத்தை நிரப்பும் வழி முறை கூறப்பட்டிருந்த போதும் கலீபாவைப் பதவியில் இருந்து நீக்குவது பற்றி எதுவுமே குறிப்பிடப்பட்டில்லை.

இவ்வாறான அரசியற் பின்னணியிலும் மிகச் சிலர் கிலாபத் கோட்பாடு பற்றிய சில நூல்களை எழுதியுள்ளனர். அவர்களில் சிலரது கருத்துக்கள் பற்றி அறிவது கிலாபத் கோட்பாடு பற்றிய வரலாற்று ரீதியான அறிமுகம் ஒன்றைப் பெற உதவ முடியும்.

## இமாம் அபூயூசுப்

வாசகருக்கு இன்றும் கிடைக்கும் அரசியற் கோட்பாடு பற்றிய மிகப் பழைய நூல் இமாம் அபூஹனிபாவின் மாணவரான இமாம் அபூயூசுப் (மர. கி. பி. 798) எழுதிய "கிதாப் அல்கராஜ்" என்பதாகும். இமாம் அபூயூசுப் ஒரு வறிய மாணவர். அதனால் இமாம் அபூஹனிபா வழங்கிய நன்கொடையில் காலம் கழித்தார். அவர் இறந்த பின் அவ்வுதவித் தொகை கிடைக்காததால் வறுமையில் வாடினார். ஒரு தினம் வீட்டுச் செலவுக்கு வழி இல்லாததால் தன் மனைவியின் வீட்டில் இருந்த நீர் இறைக்கும் தூலாயின் கம்பத் தடியை விற்றார். இதனால் அவரது மனைவியின் தாய் அவரைக் கடுமையாகக் கடிந்து கொண்டார். உரோசம் அடைந்த அபூயூசுப் தொழில் தேடி தலைநகர் பக்தாதுக்கு கி. பி. 782 இல் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமையின் காரணமாக கலீபா மஹ்தி வழங்கிய கிழக்கு பக்தாதின் நீதிபதிப் பதவியை ஏற்றார். அப்பதவியில் அவர் தொடர்ந்து ஹாதியின் காலத்திலும் பணி ஆற்றினார். அடுத்து கலீபா பதவி ஏற்ற ஹாரூன் அவரை அப்பாசிய சாம்ராஜ்யத்தின் பிரதம நீதியரசராக நியமித்தார். அவருக்கு வழங்கப்பட்ட இப்பதவி உயர்வு நீதி அமைச்சுப் பதவியையும் உள்ளடக்கி இருந்தது. தன் கீழ்வரும் நீதிமன்றங்களுக்கான நீதிபதிகளை நியமிக்கும் பொறுப்புடன் சட்டத்துறை சார்ந்த விடயங்களில் அரசுக்கு ஆலோசனை வழங்கும் பொறுப்பும் அவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

வறுமையின் கோரப் பிடியில் இருந்து தன்னைக் காத்துக் கொள்வதற்காக நீதிபதிப் பதவியை அவர் பொறுப்பு ஏற்ற போதும் தீர்ப்பு வழங்கும் போது தன் தொழில் பறி போகலாம் என்ற அச்ச உணர்வுக்கு ஆளாகமலே தீர்ப்பு வழங்கினார். தன்னை நீதிபதிப் பதவியில் அமர்த்திய கலீபா ஹாதிக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கில் ஹாதியின் பக்கம் நியாயம் இல்லை என்று கண்டு ஹாதிக்கு எதிராகவே தீர்ப்பு வழங்கினார். நிலம் ஒன்றின் உரிமை பற்றி கலீபா ஹாரூனுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கிலும் ஹாரூன் பக்கம் நியாயம் இல்லை என்று கண்டு கலீபாவுக்கு எதிராகவே தீர்ப்பு வழங்கினார்.

ஹாரூனின் பிரதம அமைச்சரான அலி இப்னு ஈசா பொய்பேசுபவர் என்று எடுத்துக்காட்டி அவரது சாட்சியத்தை ஏற்க மறுத்தார். இவை அபூயூசுப் கலீபாவின் கீழ் பணிபுரிந்தாலும் அவர்களுக்கு பக்கசார்பாகவோ, நீதிக்கு முரணாகவோ செயற்படாதிருக்கும் துணிவு அவரிடம் இருந்தது என்பதைக் காண்பிக்கின்றன. அவர் கலீபா ஹாரூனின் சுபாவத்தை நன்கு அறிந்திருந்தார். இறை அச்சத்தின் ஆதிக்கத்துக்கு ஹாரூன் உட்பட்டிருக்கும் வேளைகளில் உள்ளம் உருகும் மனநிலை அவருக்கு இருந்தது. அபூயூசுப் அதனைப் பயன்படுத்தி யாப்பு ஒன்றிற்கு உட்பட்டதான நிர்வாகத்தை மேற்கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹாரூனைத் தூண்டினார். அதற்காகவே "கிதாப் அல் ஃகராஜ்" எனும் நூலை எழுதினார். உமையாக் கால முதல் சர்வாதிகாரப் போக்கில் ஆட்சியாளர்கள் தம் இஷ்டம் போல செயற்பட்ட நிதித்துறை சார்ந்த நடவடிக்கைகளை இஸ்லாமிய அரசியல் நெறிக்கு இணக்கமாக்க இந்நூல் மூலம் முயற்சித்துள்ளார்.

இந்நூலின் பெருவாரியான உள்ளடக்கம் ஃகராஜ், உஷ்ர், ஜித்யா போன்ற வரிகள், கடல் உற்பத்திகள், கனிவர்க்கங்கள், மேய்ச்சற் தரைகள், முதலியன மூலம் கிடைக்கும் வருமானங்கள், நீதிபதிகள் கவர்னர் முதலானோருக்கு வழங்கும் சம்பளம் பொருளாதாரத்துறையில் இடம் பெறும் ஊழல்கள், களவுகள் குற்றச் செயல்களுக்கான தண்டனைகள் என்பன பற்றியும் விளக்கம் அளித்துள்ளார். வரி அறவீட்டின்போது மக்களைச் சுரண்டுவதைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தியுள்ளார். அதன்போது குர்ஆன், சுன்னா, குலாபாஉற்றாசிதூன்கள் பின்பற்றிய நடைமுறை என்பவற்றை மேற்கோள் காட்டி விளக்கம் அளித்துள்ளார். எனினும் உமையா, அப்பாசிய ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளை மேற்கோள் காண்பிப் பதைத் தவிர்த்துள்ளார். இப்பொருளடக்கத்தை மையமாக வைத்தே இந்நூலுக்கு அவர் கிதாப் அல் ஃகராஜ் (நில வரி பற்றிய புத்தகம்) என்று பெயரிட்டுள்ளார் என்று கருத முடியும்.

இமாம் அபூயூசுப் இந்நூலுக்கான தனது அறிமுகவுரையில் கிலாபத் கோட்பாடு, அதன் யாப்பு சார் பண்புகள் என்பன பற்றி விளக்கியுள்ளார்.

அல்லாஹ்வுக்குப் பொறுப்புக்கூறுதல்

உமைய, அப்பாசிய அரசுகள் இதுகாலவரை பின்பற்றிய பைஸாந்திய, ஈரானிய அரசியல் மரபுகளைக் கைவிட்டு குலபாஉற்றாசிதூன்களின் அரசியல் வழிமுறையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்ற வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியுள்ளார். ஹாரூன் தனது முன்னோர்களின் அரசியல் வழிமுறையைக் கைவிடவேண்டும் என்று நேரடியாகக் கூறாத போதும் அம்முன்னோர்களின் முன்மாதிரியை ஒரு பொழுதும் எவ்விடத்தும் எடுத்தாளவில்லை. தனது கருத்துக்களுக்காதாரமாக, குர்ஆன், சுன்னா, குலபாஉற்றாசிதூன்களின் வழிமுறையையே எடுத்தாண்டுள்ளார். உமைய அப்பாசிய ஆட்சிக்காலப் பகுதியில் உமர் இப்னு அப்துல் அஸிஸ் ஆட்சி செய்த இரண்டரை வருட கால ஆட்சியை மட்டுமே முன்னுதாரணமாக எடுத்தாண்டுள்ளார்.

புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே உரித்து என்று சுட்டிக்காட்டி அவன் மிகப் பெரியதோர் பொறுப்பை கலீபாவின் மீது சுமத்தியுள்ளதாகவும் அதனை கலீபா உரிய முறையில் நிறைவேற்றினால் மதிப்பிட முடியாத மிகப் பெரியதோர் பரிசு கிடைக்கும் என்றும், அதில் தவறினால் மிகக் கொடிய தண்டனை கிடைக்கும் என்றும் அபூயூசுப் சுட்டிக் காட்டியுள்ளார். தனது பொறுப்பில் விடப்பட்டுள்ள மக்களின் நலனைப் பேணாவிட்டால் மந்தைச் சொந்தக்காரன் இடையனிடம் கேள்வி கணக்கு கேட்பது போல மறுமையில் அல்லாஹ்வும் கலீபாவிடம் கேள்வி கேட்பான் என்றும் தவறான வழிமுறையைக் கலீபா பின்பற்றினால் குடி மக்களும் அவ்வழிமுறையையே பின்பற்றுவர் என்றும் எச்சரித்துள்ளார்.

அல்லாஹ்வின் சட்டத்துக்கு முன் அனைவரும் சமமானவர், தவறு செய்த நிலையில் அல்லாஹ்வின் முன்தோன்ற வேண்டாம், அல்லாஹ் ஒருவனின் பதவியையோ அந்தஸ்தையோ, குடிப்பிறப்பையோ நோக்குவதில்லை அவனின் செயற்பாட்டையே நோக்கித் தீர்ப்பளிப்பான் என்றும் கலீபாவிடம் சுட்டிக் காட்டினார்.

கலீபா சாம்ராஜ்யத்தின் சொந்தக்காரர் அல்லர் என்றும், அல்லாஹ்வே முழு இறைமையும் உடையவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும், கலீபா அல்லாஹ்வின் பிரதிநிதி மட்டுமே என்றும் சுட்டிக்காட்டி கலீபா சுதந்திரமாக நாட்டைப் பரிபாலிக்கும் உரித்துடையவர் அல்லர். அல்லாஹ்வின் வழிகாட்டலுக்கு ஏற்பவே பரிபாலிக்கும் கடமையுடையவர் என்பதையும் அபூயூசுப் கலீபாவுக்கு நினைவுறுத்தியுள்ளார்.

அல்லாஹ்வுக்குப் பொறுப்புக்கூறுவது போலவே கலீபா பொதுமக்களுக்கும் பதில் கூறும் கடமைப்பாடுடையவர் என்று சுட்டிக்காட்டியுள்ளார். கலீபாவின் செயற்பாட்டை விமர்சிக்கும் உரிமை மக்களுக்குண்டு. நன்மையை ஏவித் தீமையைத் தடுக்கும் உரிமையை அல்லாஹ் பொது மக்களுக்கு வழங்கியுள்ளான். இவ்வாறு செய்வது மக்களுக்கும் அரசுக்கும் நன்மைபயக்கும் என்கின்றார். மக்கள் தன்னிடம் முன்வைக்கும் கருத்துகளுக்கு செவிசாய்ப்பது கலீபாவின் கடமையாகும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். ஜனநாயக சமூகத்தில் காணக்கூடிய பண்புகளே இவை என்பது நோக்கத்தக்கதாகும்.

### கலீபாவின் கடமைகள்

I. அல்லாஹ்வின் உரிமைகளை அவன் குறித்துக் காட்டியுள்ள எல்லையுள் நிலை நாட்டுதல்.

II. இறைவன் மற்றையோருக்கு வழங்கியுள்ள உரிமைகளை இனங்கண்டு அவற்றை அவர்கள் அனுபவிக்க வழி வகுத்தல்.

III. அநியாயங்களைத் தடுத்து அநியாயங்களுக் குள்ளானவர்களின் துயரைத் துடைத்தல்.

IV. அல்லாஹ்வுக்கு அடிபணியச் செய்து பாபச் செயல்களில் ஈடுபடாது மக்களைப் பாதுகாத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V. இறைகட்டளைகளால் பாதிக்கப்படுபவர் யார் என்பதைக் கருத்திற் கொள்ளாது அதனைத் தான் பின்பற்றுவதுடன் பிறரைப் பின்பற்ற தூண்டுதல்.

VI. சட்டபூர்வமான வரிகளை மட்டும் அறவிடுதல் சட்டபூர்வமான வழிமுறைகளில் மட்டும் செலவிடுதல்.

முஸ்லிம் குடிமக்களின் கடமைகள்

I. கலீபாவுக்கு அடிபணிதல் கலீபாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடாதிருத்தல், ஆட்சிக்கு எதிராக ஆயுதபோராட்டங்களை மேற்கொள்ளாதிருத்தல், கலீபாவை ஏமாற்றாதிருத்தல்.

II. கலீபாவின் நன்மை பயக்கும் செயல்களுக்கு துணையாயிருத்தல் தவறான செயல்களில் கலீபா ஈடுபட்டால் திருத்த முயற்சித்தல்.

நீதித்துறை -

I. நீதியை நிலை நாட்டல்.

II. குற்றம் இழைக்காதவரைத் தண்டிப்பதோ குற்றம் செய்தவரைத் தண்டிக்காது விடுவதோ மன்னிக்க முடியாதது.

III. குற்றச் செயல் சந்தேகமற நிறுவப்படாத விடத்து குற்றவாளி என்று கருதப்பட்டவரை தண்டிக்க கூடாது (சந்தேகத்தின் பேரில் தண்டிக்க கூடாது)

IV. தவறுதலாக மன்னிப்பது தவறுதலாகத் தண்டிப்பதை விடச்சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V. எவன் ஒருவனின் பட்டம் பதவியோ, எவருடைய விதந்துரைப்போ நீதி வழங்குதலில் தலையிடக் கூடாது.

## தனி மனித சுதந்திரம்

ஒருவன் மீது குற்றம் சுமத்துவதால் மட்டும் அவன் குற்றவாளியாகி விடமாட்டான். நியாயமான நீதி விசாரணைக்கான வாய்ப்பு குற்றம் சுமத்தப்பட்டவனுக்கு வழங்க வேண்டும். நீதி விசாரணையின் போது குற்றம் நிறுவப்பட்டால் அவனை சிறைசெய்யலாம் ; இல்லையேல் விடுதலை செய்தல் வேண்டும். குற்றம் சுமத்தப்பட்டவனை துன்புறுத்துதல் கூடாது நீதிமன்றம் பிரகடனப்படுத்தாத எந்த தண்டனையும் குற்றம் சுமத்தப்பட்டவனுக்கு வழங்கக் கூடாது.

சிறைக் கைதிகள் அனைவருக்கும் உணவு, உடை என்பவற்றை அரசு வழங்க வேண்டும். விலங்கிடப்பட்ட நிலையில் பாதையில் நடப்பித்து அவர்களின் உணவுக்காக யாசிக்கும் உமைய, அப்பாசிய நடைமுறைகளை அபூயூசுப் கடுமையாக விமர்சித்தார்.

ஊழல் செய்பவர்களையும் மக்களுக்கு கொடுமை செய்பவர்களையும் அரச சேவையிலோ திணைக்களங்களிலோ உத்தியோகத்தர்களாக நியமிப்பதை நிறுத்த வேண்டும்.

தக்வாவும் கண்ணியமும் நேர்மையான நடத்தையும் உடையவர்களையே உத்தியோகத்தர்களாக நியமிக்க வேண்டும்.

மக்களின் முறையீடுகளுக்கு கலீபா பொறுமையுடன் செவிமடுக்க வேண்டும். பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் கலீபாவிடம் முறையிட வாய்ப்பளிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரி அறவீடு பற்றிய அவரது கருத்துக்கள் :

I. ஒருவரிடம் இருக்கும் மேலதிக சொத்துக்களில் இருந்து மட்டுமே வரி அறவிடப்படுதல் வேண்டும்.

II. வரி இறுப்பாளரின் பொருள் வளத்துக்கு ஏற்பவே வரி நிர்ணயிக்கப்படுவதால் வரியின் அளவு ஆளுக்கு ஆள் வேறுபடலாம்.

III. வசதிபடைத்தோரிடம் இருந்து அறவிடப்படும் வரி ஏழைகளின் நலன்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

IV. இஸ்லாத்தை ஏற்ற "திம்மி" க்களிடம் இருந்து ஜித்யா அறவிடுவதை நிறுத்த வேண்டும்.

V. பைத்துல்மால் கலீபாவின் சொத்தல்ல. அவர் அதன் பாதுகாவலர் மட்டுமே. அநாதைகளின் சொத்தைப் பரிபாலிப்பவருக்கு குர்ஆன் கொடுத்துள்ள அளவிலான உரிமை மட்டுமே பைதுல்மாலைப் பரிபாலிக்கும் கலீபாவுக்குண்டு.

அப்பாசியர் ஆட்சியின் எழுச்சிக் காலத்தில் அப்பாசியக் குடும்பத்தவர் தவிர்ந்த மற்றெவருக்கும் ஆட்சி உரிமையில் பங்கு வழங்க அப்பாசியர் விரும்பவில்லை. அதனால் தமக்குப் போட்டியாக எழக்கூடிய எவரையும் அவரின் குடும்பம், அந்தஸ்து என்ற எதனையும் நோக்காது ஒழித்துக் கட்டினர். அப்பாசிய ஆட்சிக்கு எதிராக விரல் நீட்டுவதைக் கூட அவர்கள் விரும்பவில்லை. அதனால் தான் இஸ்லாமிய சிந்தனை வழி செல்லாத உமைய, அப்பாசிய ஆட்சியாளர்களின் கீழ் இமாம் அபூஹனிபா நீதிபதிப் பொறுப்பை ஏற்கவில்லை. அப்பாசியரின் கீழ் உயர் பதவியில் இருப்பதை விட சிறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வதை மகிழ்வோடு ஏற்றார். இவரின் கீழ் பயிற்சி பெற்ற இமாம் அபூயூசுப் தன் வறுமை நிலை காரணமாக (காழி) நீதிபதிப் பதவியைப் பொறுப்பேற்றார். ஹாரூனின் கீழ் நீதி அமைச்சராகவும் பிரதம நீதியரசராகவும் கடமையேற்ற அவர் எந்த எல்லையுள் கலீபாவுடன் தொடர்பு வைப்பது பொருத்தம் என்பதையும் அறிந்திருந்தார்.

அதனால் நடைமுறைச் சாத்தியமான எல்லையுள், நீதி அமைச்சர், பிரதம நீதியரசர் என்ற தோரணையில் சில அரசியற் சீர்திருத்தங்களை முன்வைத்துள்ளார். கலீபாவின் தெரிவு முறை பற்றியோ, மஜ்லிசு சூரா அமைப்பு முறை பற்றியோ அவர் எக்கருத்தையும் முன்வைக்கவில்லை. அது நடைமுறைச்சாத்தியம் அற்றது என்பது மட்டுமன்றி அவர் முன்வைத்த ஏனைய சீர்திருத்தங்களையும் நடைமுறைப்படுத்தும் வாய்ப்பு அதனால் அற்றுப் போகலாம் என்றும் அவர் கருதியிருக்க முடியும்.

கி. பி. எட்டாம் நூற்றாண்டின் இறுதிக் காலப்பிரிவில் அவர் முன்வைத்துள்ள அரசியற் கருத்துக்கள் அவரது சொந்தக் கருத்துக்கள் அல்ல. குர்ஆன், சுன்னா குலபா உற்றாசிதூன்களின் கருத்துக்கள் என்பனவற்றில் இருந்து பெற்றுக்கொண்டவை ஆகும்.

## அல்பாராபி

அபூ நஸ்ர் அல்பாராபி (கி. பி. 872-950) தத்துவ இயலாளராக புகழ் பெற்றவர். மத்திய ஆசியாப் பிரதேசத்தில் பிறந்த இவர் டமஸ்கஸில் மரணித்தார். இருபது வருடங்கள் பக்தாதில் தங்கியிருந்தார். அலப்போவில் புவைஹ் ஆட்சியாளரான சைபுத்தவ்லாவின் அரசவை உறுப்பினராக இருந்தார். அவ்வரசவையில் பிரபல கவிஞர்கள், தத்துவ இயலாளர்கள், மொழியியலாளர்கள் போன்ற பல்துறை அறிஞர்கள் உறுப்பினராக இருந்தனர். இருப்பினும் அரசியலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடுவதைத் தவிர்த்து, சூபிச ஆடை அணிந்தவராக மாணவர்க்கு கல்வியூட்டுவதில் ஈடுபட்டார். அவர் கிரேக்க தத்துவ இயலாளர்களின் ஆக்கங்களில் ஈடுபாடுகாட்டினார். கிரேக்க தத்துவ இயல் சிந்தனையின் தாக்கமும் அவரில் இருந்தது. பல நூல்களை அவர் எழுதியுள்ளார். அவர் எழுதிய "மதீனதுஸ் ஸஆதா" எனும் நூலில் இஸ்லாமிய அரசியல் பற்றி குறித்துச் சென்றுள்ளார். சமூக உடன்பாட்டுக் கோட்பாடு பற்றி விளக்கம் அளித்த முதல் முஸ்லிம் அறிஞர் இவர் என்பர். முன்மாதிரியான ஓர் அரசியல் சூழலில் மட்டுமே மனிதன் உண்மையான மகிழ்ச்சியை அடையலாம் என்று அவர் கருதினார். அவ்வாறான அரசியல் சூழலைத் தரக்கூடிய ஒரு சமூகத்தின் தலைவரிடம் பின்வரும் தகைமைகள் இருத்தல் வேண்டும் என்கின்றார்.

I. சவால்களை எதிர்கொள்ளத்தக்க திடகாத்திரம் உடையவராதல்

II. பேச்சாற்றல், தீர்ப்பு வழங்கும் ஆற்றல், தூர திருஷ்டி, அறிவு ஞானம், வாய்மை, பரந்த நோக்கு எளிமை எனும் பண்புகளையும் கொண்டிருத்தல்.

III. செல்வம் உடையவராகவும் பேராசை அற்ற வராகவும் இருத்தல்.

IV. நிர்வாகத் திறமையும் மக்களைப் பரிபாலிக்கும் ஆற்றலும் உடையவராதல்.

V. நாட்டையும் மக்களையும் எதிரிகளிடம் இருந்து காக்கும் தீரமும் துணிவும் உடையவராதல்.

VI. இவற்றுக்கு மேலதிகமாக கலீபா குறைசி வம்சத்தை சேர்ந்தவராக இருத்தல் வேண்டும் என்ற நியதியையும் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல்மாவர்தி

அபுல் ஹசன் அல்மாவர்தி கி. பி. 974 இல் பஸராவில் பிறந்தார். மக்கா, மதினா, கூபா என்பன போல பஸராவும் கல்வி, கலாசாரம் போசிக்கப்படும் நகர்களில் ஒன்றாகப் பிரபல்யம் பெற்றிருந்தது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இளமையிலேயே பல்வேறு துறைகளில் தன் திறமைகளை மாவர்தி வளர்த்துக் கொண்டார். எனினும் நீதித்துறையே அவருக்குப் பிரியமான துறையாக இருந்ததால் அத்துறையில் விசேட அறிவைப் பெற்று பல்வேறு நகர்களில் நீதிபதியாக கடமையாற்றி ஈற்றில் பக்தாத் நகரின் நீதிபதியாகக் கடமையாற்றினார். கலீபா அல் காதிர் (கி. பி. 991-1038) என்பவர் கி. பி. 1037 இல் சாபி மத்ஹப் அடிப்படையில் இஸ்லாமிய சட்டத் தொகுப்பு ஒன்றை எழுதுமாறு அல்மாவர்தியிடம் கேட்டுக் கொ்ணடார். அவர் தொகுத்து எழுதிய ஆக்கத்தால் கவரப்பட்ட கலீபா காதிர் அவரை பக்தாதின் பிரதம நீதியரசராக நியமித்தார். கி. பி. 1058 இல் மாவர்தி மரணிக்கும் வரை அப்பதவியில் அவர் தொடர்ந்து கடமையாற்றினார்.

மாவர்தி ஸுன்னத் வல்ஜமாஅத் குழுவைச் சேர்ந்தவர் சாபி மத்ஹபைப் பின்பற்றுபவர். அவர் சட்டத்துறை, அரசியல்துறை சார்ந்த சில நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் கிதாப் அல் ஹாவி, அல் இக்னா, சியாஸத் அல் முல்க், கவானீன் அல் விதாரா, ஆதாப் அத்துன்யா வத்தீன், அல்அஹ்காம்அல்-சுல்தானியா என்பன குறிப்பிடத்தக்கனவாகும். இவற்றுள் அல் அஹ்காம் அல் சுல்தானியா அரசியல் விஞ்ஞானத் துறையில் முதன் முதல் எழுதப்பட்ட விஞ்ஞான ரீதியான ஆக்கம் என்பர். இந்நூல் கிலாபத் கோட்பாடு அரசின் சட்ட விதிகள் என்பன பற்றிப் பேசுகிறது.

மாவர்தி ஒரு தத்துவ இயலாளர் அல்லர். அவர் ஒரு வரலாற்றுத்துறை ஆய்வாளரும் சட்ட அறிஞருமாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலபா உற்றாசிதூன்கள் கால முதல் தனது காலம் வரையிலான கிலாபத்தின் வரலாற்றுத் தகவல்களைத் திரட்டிப் பதிந்துள்ளார். அவர் தகவல்களைப் பதியும் போது தனது அறிவு ஞானத்தைப் பயன்படுத்தி விளக்கமளித்துள்ளார். மாவர்தி வாழ்ந்த காலத்தில் அப்பாசிய கலீபாக்கள் சம்பிரதாய ரீதியான ஆட்சியாளர்களாக மட்டுமே இருந்தனர். கி. பி. 861 இல் கலீபா முதவக்கில் மரணமடைந்ததைத் தொடர்ந்து பல சிற்றரசுகள் அப்பாசிய கிலாபத்தில் தோன்றி ஆதிக்கம் செலுத்தின. அவற்றுள் கி. பி. 945-1055 காலம் வரை ஆதிக்கம் செலுத்திய சீஆக்களான புவைஹித்கள் அப்பாசிய கிலாபத்தின் தலைநகராகிய பக்தாதையே தம் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்திருந்தனர். அப்பாசிய கலீபா தான் விரும்பியோ, விரும்பாமலோ சிற்றரசுகளின் ஆட்சி அதிகாரத்தை அங்கீகரித்து ஆசிர்வாதம் வழங்கும் நிர்ப்பந்த நிலைக்கு உட்பட்டிருந்தார். சில சம்பிரதாய ரீதியான சடங்குகளை அலங்கரிப்பவராகவும் ஆன்மீகத்துறை சார்ந்த அதிகாரங்களை மட்டும் கொண்டவர்களாகவும் அப்பாசிய கலீபாக்கள் இருந்தனர். உலகியல் ரீதியான ஆட்சி அதிகாரம் புவைஹித்களிடமே இருந்தது. இவ்விரு தரப்பாருக்கும் இடையே முரண்பாடு தோன்றிய சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு இடையே கலீபாவின் பிரதிநிதியாகத் தூது சென்று பிரச்சினைகளைத் தீர்க்கும் பணியில் ஈடுபடுமளவு மாவர்தி தகைமையும் சமூக அங்கீகாரமும் பெற்றிருந்தார்.

அவர் குலபாஉற்றாசிதூன் கால இலட்சியபூர்வமான இஸ்லாமியக் குடியரசு பற்றியும், உமைய அப்பாசிய ஆட்சி மரபு பற்றியும், சிற்றரசுகளின் யதார்த்த பூர்வமான அரசியல் ஆதிக்கம் பற்றியும் ஆழமான அறிவுடையவராக இருந்தார். அவர் குலபாஉற்றாசிதூன்கள் கால இஸ்லாமியக் குடியரசின் கலீபாத் தெரிவுமுறை கலீபாக்களுக்கு இருக்க வேண்டிய தகைமை என்பவற்றை விளக்கியுள்ளார். எனினும் குலபாஉற்றாசிதூன்கால வழிமுறையைப் பின்பற்றாது ஆட்சியைக் கைப்பற்றியுள்ள தலைவர்களுக்கான தகைமைகள் பற்றி அவர் எதுவும் குறிப்பிடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிலாபத் கோட்பாடு பற்றிப் பின்வரும் கருத்துக்களை அவர் முன்வைத்துள்ளார்.

(i) கிலாபத் அவசியம் என்பதை பகுத்தறிவு அவாவி நிற்கிறது என்ற பகுத்தறிவுவாதிகளின் கருத்தை நிராகரித்து "சரீஆ கிலாபத்தை அவசியமாக்கியுள்ளது" எனினும் கலீபா மக்களின் சம்மதத்துடன் நியமிப்படுவது கடமையானது என்கின்றார். (இது மு.:தஸிலாக்களின் கருத்துக்கு முரண்பட்ட சிந்தனையாகும்.)

(ii) கலீபாக்கள் தேர்தல் மூலமே தெரிவு செய்யப்படுதல் வேண்டும். அவரைத் தெரிவு செய்யும் தேர்தல் குழுவில் விசேட தகைமை படைத்தவர்களே பங்கு கொள்தல் வேண்டும். கலீபா பதவிக்கான வேட்பாளர்களும் குறித்த சில தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். (இச்சிந்தனை சீஆக்களின் தெய்வீக நியமனக் கோட்பாட்டிற்கு முரணானதாகும்.)

(iii) கலீபாவைத் தெரிவு செய்யும் உரிமை தலைநகருக்கு வெளியே உள்ளவர்களுக்கும் உண்டு. எனினும் கலீபா ஒருவர் இறந்த செய்தி தலைநகரில் உள்ளவர்களுக்கே முதலில் தெரிய வரும். ஒரு நாளேனும் கலீபா இல்லாதிருப்பது அரசியல் ரீதியான புதிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் என்பதாலும் தேர்தல் குழுவில் பங்கு பற்றும் தகைமையுடையோர் பலர் தலைநகரில் வாழ்வதாலும், தலைநகரில் வாழ்வோர் புதிய கலீபாவைத் தெரிவு செய்கின்றனர் என்கின்றார்.

(iv) கலீபாப் பதவிக்கான வேட்பாளர்கள் ஏழு தகைமைகளையுடையவர்களாக இருக்க வேண்டும் என்றுச் சுட்டிக்காட்டியுள்ள அவர் அவ்வேழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகைமைகளில் ஒன்றான "குறைசியராக இருத்தல் வேண்டும்" என்ற தகைமைக்கு முக்கியத்துவம் கொடுத்தள்ளார். இந்நிபந்தனையால் குறைசியர்கள் அல்லாதவர்கள் புறக்கணிக்கப்படுவர் என்பதைக் காட்டி இந்நிபந்தனையை மறுப்போரின் கருத்துக்கு செவிமடுக்கத் தேவையில்லை என்று மாவர்தி குறிப்பிட்டுள்ளார். தனது கருத்துக்கு ஆதரவாக பின்வரும் தகவலைத் தந்துள்ளார். "இஸ்லாத்தையும் நபிகளாரையும் நன்கு புரிந்து கொண்டிருந்த அபூபக்ர் (றழி) அவர்கள், ஸகீபா பனிசாஈதாவில் இத்தகைமைக்காக வாதாடினார்.

(V) கலீபாப் பதவிக்கான வெற்றிடம் பின்வரும் இரு வழிமுறைகளில் ஒன்றன் மூலம் நிரப்பப்படலாம் என்கின்றார்.

(i) தேர்தல் குழவினால் அவர் நியமிக்கப் படலாம்.
(ii) உயிர்வாழ்கின்ற கலீபா அடுத்து பதவியேற்ப வரை நியமிக்கலாம்.

மாவர்தியின் காலப்பிரிவில் தேர்தல் குழுபற்றிப் பின்வரும் கருத்துக்கள் நிலவின. முக்கிய நகர்களில் உள்ள எல்லாத் தேர்தல் குழுக்களினாலும் கிலாபத்துக்குரிய வேட்பாளர் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். வேறு சிலர் அபூபக்ர் (றழி) மதினாவாசிகளால் மட்டுமே கலிபாவாகத் தெரிவு செய்யப்பட்டார் என்ற காரணத்தைக் காட்டி மேற்குறித்த கருத்தை நிராகரித்தனர்.

அபூபக்ர் (றழி) அவர்களதும் உதுமான் (றழி) அவர்களதும் தெரிவை உதாரணமாகக் காட்டி தேர்தல் குழவில் ஐவர் இருப்பது போதுமானது என்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கருத்துக்களை எல்லாம் மாவர்த்தி நிராகரித்து கலீபாவை நியமிப்பதற்கு தகுதிபடைத்த ஒருவரே போதுமானவர் என்கின்றார். தனது கருத்துக்கு ஆதாரகமாக ஹதிஸ் தரும் பின்வரும் நிகழ்வை எடுத்துக்காட்டகின்றார். நபிகளார் (ஸல்) அவர்கள் "வபாத்" ஆனதும் அப்பாஸ் (றழி) அவர்கள் அலி (றழி) அவர்களிடம் சென்று உங்களது கையை நீட்டுங்கள் உங்களை கலீபாவாக ஏற்று நான் பைஅத் செய்கின்றேன். நபிகளாரின் பெரியப்பா நபிகளாரின் மருமகன் அலி (றழி) வுக்காக பைஅத் செய்துள்ளார் என்று மக்கள் அறிந்ததும் உங்கள் தலைமைத்துவத்தை ஒருவரும் எதிர்க்கமாட்டார்கள் என்று கூறினார்.

(vi) கலீபாப் பதவிக்கும் போட்டியிடும் வேட்பாளர்களில் முதன்மை பெறும் இருவர் சமதகைமைகளைப் பெற்றிருப்பின் எதுவித நியாயமும் காட்டாது. அவ்விருவருள் ஒருவரைத் தேர்தல் குழு நியமனம் செய்யலாம்.

(vii) அதிக தகைமையுடைய ஒருவர் இருக்கும் போதும் அடிப்படைத் தகைமையுடைய எனினும் முன்னையவரை விடவும் குறைவான தகைமையுடையவரை தேர்தல் குழு நியமனம் செய்யலாம் என்று மாவர்தி குறிப்பிட்டள்ளார். இக்கருத்து தகுதியற்ற சிலர் இப்பதவியை அடைய வழி வகுக்க முடியும். மாவர்தி முன்வைத்துள்ள இக்கருத்து சுன்னத் வல் ஜமாஅத் அறிஞர்களினதும் கருத்தாகும். இது சீஆக்களின் கருத்துக்கு முற்றிலும் முரணான ஒரு கருத்தாகும்.

(viii) தகைமை படைத்த ஒரு வேட்பாளர் மட்டுமே உள்ள இடத்து அவர் தேர்தல் குழுவின் சிபாரிசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றியே கலீபா பதவியை அடைந்தவராக கருதப்படுவார் என்பதே மாவர்தியின் கருத்து என்பர். இக்கருத்தை மறுப்போர் கலீபா பதவி சட்டபூர்வமாவதற்கு தேர்தல் குழுவின் தெரிவு அவசியம் என்பர்.

(ix) சமகாலத்தில் ஓர் ஆட்சிப் பிரதேசத்துக்கு இருவர் கலீபாவாக இருக்க முடியாது என்பதை வலியுறுத்துகின்றார். இதன்மூலம் எகிப்தின் பாதிமி ஆட்சியாளர்களதும் ஸ்பெயினின் உமைய ஆட்சியாளர்களதும் கிலாபத் உரிமைக் கோரிக்கையை நிராகரிக்க அவர் முனைந்துள்ளார் என்பர்.

(x) பதவி வகிக்கும் கலீபா பதவியேற்கக்கூடிய அடுத்த கலீபாவை நியமனம் செய்ய முடியும் என்பதையும் மாவர்தி சரிகண்டுள்ளார். உமர் (றழி) அவர்களை அடுத்த கலீபாவாக அபூபக்ர் (றழி) தனது பிரகடனம் ஒன்றின் மூலம் நியமித்தார். உமர் (றழி) அவர்களும் தனக்குப் பின் பதவியேற்க உள்ளவரை தான் நியமித்த ஆறுபேர் கொண்ட குழுவில் இருந்து மட்டுமெ தெரிவு செய்ய கட்டளையிட்டதன் மூலம் நியமன வழித் தெரிவே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று புலனாகிறது என்கின்றார்.

(xi) பதவியில் இருக்கும் கலீபா தனது தந்தையை அல்லது தனது மகனைத் தவிர தகுதியுடைய மற்றெவரையும் தன்னை அடுத்து பதவி ஏற்கக்கூடிய கலீபாவாக நியமிக்கலாம்.

(xii) தனக்குப் பின் ஒருவர் பின் ஒருவராக பதவியேற்க முடிந்த வகையில் இருவரையோ அதற்கு மேற்பட்டவர்களையோ கலீபா நியமிக்க முடியும் என்றும் மாவர்தி கருதுகின்றார். தனது இக்கருத்துக்கு ஆதாரமாக நபிகளார் (ஸல்) அவர்கள் மூத்தாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போருக்கான தளபதியை நியமிக்கும் போது ஒருவர் பின் ஒருவராக தளபதிப் பதவியேற்க ஸைத் பின் ஹாரிஸ், ஜ:.பர் பின் அபூதாலிப், அப்துல்லாஹ் பின் ரவாஹா எனும் மூவரை நியமித்ததை சுட்டிக் காட்டுகின்றார்.

கலீபா ஒருவர் தன் பதவியை இழக்கக் கூடிய சூழல் பற்றியும் கலந்துரையாடியிருப்பதுடன் கலீபாவின் கடமைகளைப் பற்றியும், தனது கால அரசின் நிர்வாக அமைப்பு பற்றியும் விரிவான விளக்கத்தையும் தந்துள்ளார். இவற்றை அவர் ஓர் அரசியற் சிந்தனையாளர் என்ற தோரணையில் அன்றி வரலாற்றாய்வாளர் என்ற பின்னணியிலேயே எடுத்துக்காட்டியுள்ளமை சுட்டிக் காட்டத்தக்கதாகும். எனினும் அரசியற் சிந்தனையாளரின் கண்ணோக்கில் இவற்றை முன்வைக்காமை யாப்பின் அடிப்படையிலான ஜனநாயக அரசியற் சிந்தனை வளர வழி வகுக்கவில்லை எனலாம்.

## இமாம் கஸ்ஸாலி (றஹ்)

மறுவுலகில் மனிதனை மகிழ்ச்சியாக வாழவைப்பதே அரசின் இலட்சியமாக இருக்க வேண்டும் என்று கி. பி. 1111 இல் (ஆயிரத்தி நூற்றிப் பதினொன்றில்) இறந்த இமாம் கஸ்ஸாலி (றஹ்) கருதுகிறார். சமயத்தின் செந்நெறியை மேற்பார்வை செய்வதும் உலகியல் நிகழ்வுகளில் தலைமை தாங்குவதும் அரசின் கடமையாகும் என்றும், சமயமும் அரசியலும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்றும் கருதுகின்றார். ஆட்சியாளனின் பெலவீனமும் கொடுங்கோண்மையும் நாட்டை அழித்து விடும் என்கின்றார். கலீபா ஒருவருக்கு இருக்க வேண்டும் என்று அல்பாராபி கருகின்ற தகைமைகளுக்கு மேலதிகமாக கலீபா ஆண் பிள்ளையாகவும் வயது வந்தவராகவும் இருத்தல் வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்னு தைமியா

கி. பி. 1328 இல் மரணித்த இப்னு தைமிய்யா (றஹ்) சிஆக்களின் அரசியற் கோட்பாட்டை முற்றாக நிராகரித்தார். சமயமும் அரசும் பிரிக்க முடியாதவாறு ஒன்றிணைந்தது என்றும் ஆட்சியாளர் நீதி தவறி நடந்தபோதும் மக்கள் கலீபாவுக்கு முற்றாகக் கீழ்படிந்து நடக்கவேண்டும் என்றும் அவர் கருதுகின்றார். ஓர் இரவு ஆட்சியாளன் இல்லாதிருப்பதை விட அறுபது வருடங்கள் கொடுங்கோல் ஆட்சியாளனின் கீழ்வாழ்வது மேலானது என்கின்றார். அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யும் காரிஜிக்களின் சிந்தனையை முற்றாக நிரகாரிக்கின்றார். நீதிமன்றத்தில் சாட்சியம் கூறக்கூடிய ஒருவருக்கு இருக்கவேண்டிய தகைமைகள் இருப்பதை கலீபாப் பதவியேற்பதற்குப் போதுமான தகைமையாகக் கருதுகின்றார். கலீபா குறைசியராக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்றும் கருதுகின்றார்.

## இப்னு கல்தூன்

டியுனிசியாவில் பிறந்த இப்னு கல்தூன் (கி. பி. 1332-1406) பல நாடுகளில் வாழ்ந்த பின் எகிப்தில் மரணமானார். அவர் தனது கிதாப் அல் இபர் எனும் பிரசித்திபெற்ற உலக வரலாற்று நூலுக்கு எழுதிய “முகத்திமா” என்றழைக்கப்படும் முகவுரை பலரது பாராட்டையும் பெற்றதொன்றாகும்.

மனித சமூகத்தின் ஆன்மீக உலகியல் நலன்களைப் பேணுவதே அரசின் இலட்சியம் என்று கருதுகின்றார். நபிகளாரின் வழிகாட்டலில் இருந்தே முஸ்லிம் சமூகம் தோற்றம் பெற்றது. உலகியல் நலன்களுக்கு முக்கியம் கொடுக்கும் ஏனைய சமூகங்களில் இருந்து அது வேறுபட்டது. அதனால் அதனை வழிநடத்த விசேட வழிகாட்டல் அவசியமாகும். இச்சமூகத்தின் தலைமைத்துவம் மக்கள் சம்மதத்தின் (இஜ்மா) மூலமே நிரப்பப்பட வேண்டும். கலீபாவை அங்கீகரிப்பதும் அவருக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்படிவதும் பகுத்தறிவின் வழியில் அன்றி இஸ்லாமியப் போதனை வழி கடமையாகிறது என்று கருதுகின்றார்.

கலீபாப் பதவிக்கான வேட்பாளர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்று கருதுகின்றார்.

(i) சரீஆவில் ஆழ்ந்த புலமையும் தேர்ச்சியும் உடையவராதல்.
(ii) நேர்மையும் களங்கமில்லா வாழ்வும் உடையவராதல்.
(iii) அங்கவீனம் இல்லாதும், புலன்களிலும் மன நலனிலும் குறைபாடில்லாதிருத்தல்.
(iv) செயற்திறன் உடையவராதல்.

**ஷாஹ் வலியுல்லாஹ் (றஹ்)**

கி. பி. 1703 இல் இந்தியாவின் முஸப்பரா நகரில் பிறந்த ஷாஹ் வலியுல்லாஹ் கி. பி. 1762 இந்தியாவில் டெல்லி நகரில் இறந்தார்.

மனிதனின் சமூக உறவை நெறிப்படுத்தும் கலையே அரசியல் விஞ்ஞானம் என்று கருதுகின்றார். முஸ்லிம் அரசியலில் இஸ்லாம் அல்லாத நடைமுறைகள் புகுந்துள்ளன என்றும் சுட்டிக் காட்டியுள்ளார். அரசியலில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் அனைத்தும் அறிவியற் புரட்சியின் விழியிலேயே ஏற்படுத்தப்படவேண்டும் என்று கருதும் அவர் முதலாளித்துவக் கோட்பாட்டையும். ஏழைகளை சுரண்டுவதையும் விமர்சிக்கின்றார். கலீபாவுக்கான தகைமைகளாக உயர் குணப்பண்பு, புத்திசாதுரியம் வள்ளற் தன்மை, துணிபு, எளிமை, நேர்மை என்பவற்றையே கருதுகின்றார். நாட்டை பகைவர்களிடம் இருந்து காத்தல், சமய நெறியை மேம்படுத்துதல், நீதி வழங்கலை பரிபாலித்தல், நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தல் கல்வியையும், நாட்டின் வளத்தையும் விருத்தியாக்குதல் என்பன கலீபாவின் கடமைகள் என்று கருதுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச குடும்ப உறுப்பினர்கள் என்ற தகைமையில் அன்றி தகுதிபடைத்த அறிஞர்களுடன் கலந்துரையாடியே கலீபா தீர்மானங்களை எடுத்தல் வேண்டும் என்றும் சரீஆவை அமுலாக்குவதில் போதிய அக்கரை காண்பிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

## அல்லாமா இக்பால்

அல்லாமா இக்பால் இந்தியா உபகண்டத்தின் சியால்கோட் நகரில் கி. பி. 1887 இல் பிறந்தார். பாகிஸ்தானின் லாஹூர் நகரில் கி. பி. 1938 இல் இறந்தார். இவர் ஒரு சிறந்த கவிஞரும், தத்துவ இயலாளரும் நவீன சட்டத்துறை அறிஞரும் (பரிஸ்டர்) ஆவார்.

இஸ்லாமிய சமூகமும் அரசும் நபிகளாரின் வழிகாட்டலில் தோற்றம் பெற்றன. முஸ்லிம் சமூகத்தின் உயிரோட்டம் அவர்களது அறிவுஞானம் ஆகும். ஏகத்துவக் கோட்பாடே அச்சமூகத்தை ஒருங்கிணைக்கிறது. அதுவே அச்சமூகத்தின் சமத்துவம், தனித்துவம், சுதந்திரம் என்பவற்றினது அடிப்படையாகும்.

இஸ்லாம் ஜனநாயகக் கோட்பாட்டுப் பண்புகளைக் கொண்டது. எனினும் அது மேற்குலக ஜனநாயகத்தில் இருந்து வேறுபட்டது. மேற்கு நாட்டு ஜனநாயகம் கொடுங்கோண்மைப் பண்புகளைக் கொண்டது. இஸ்லாமிய ஜனநாயகம் நீதி நேர்மையை அடித்தளமாகக் கொண்டது.

அவரது காலத்தில் கோலோச்சிய தேசிய வாதச் சிந்தனையை அவர் முற்றாக நிராகரித்தார். இஸ்லாமிய சாம்ராஜ்யத்தைச் சிதைப்பதற்காக காலனித்துவ ஆட்சியாளர்கள் கையாண்ட ஆயுதமே தேசிய வாதக் கோட்பாடு என்று கருகின்றார். முஸ்லிம் நாடுகள் கலனித்துவ ஆட்சியாளர்களிடம் இருந்து விடுதலை பெற்று முஸ்லிம் பொது நலவாயம் ஒன்றை அமைக்க வேண்டும். அப்பொதுநலவாய மன்றத்தின் சட்ட மன்றம் கிலாபத் பீடமாக அமையலாம் என்று கருதுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ஈ) கிலாபத்தின் மீள் அமைப்பு பற்றிய சில கருத்துக்கள்

மூன்றாம் கலீபாவின் காலத்தில் யூதனான அப்துல்லாஹ் பின் சபாவின் தூண்டுதலால் கிலாபத்தில் கிளர்ச்சிகள் தோன்றின. ஜாஹிலிய்யாக் காலத்தில் உமையா, ஹாசிமி கோத்திரத்தாரிடையே வேரூன்றி இருந்த "அஸபிய்யா" எனும் கோத்திர உணர்வு மூன்றாம், நாலாம் கலிபாக்கள் காலத்தில் மீண்டும் உயிரூட்டப்பட்டது. அதனால் இரு தரப்பினரும் சிப்பீன் போர்க்களத்தில் சந்தித்தனர்.

ஸிப்பீனைத் தொடர்ந்து தீவிரவாத சிந்தனைப் போக்குடையவர்களான காரிஜிக்கள் கொரில்லாப் போர் வழிமுறையில் கலீபாவை எதிர்த்ததோடு நில்லாது கிலாபத் அவசியமற்றது என்ற கருத்தையும் அவர்களில் ஒரு சாரா பிரசாரம் செய்தனர்.

கர்பலா நிகழ்வு முஸ்லிம் சமூகத்தை அரசியல் ரீதியாக சீஆ, சுன்னத் வல் ஜமாஅத் என்ற இருதரப்பினராக்கி முஸ்லிம்களைப் பிளவுபட வைத்தது. இஸ்லாமியக் குடியரசு தோற்றம் பெற்று ஒரு நூற்றாண்டு கழிவதற்குள் உமைய-ஹாசிமி கோத்திர உணர்வு உச்ச வளர்ச்சி அடைந்தது. ஹாசிமிக்களின் வாரிசுகளான அப்பாசியர்கள், இஸ்லாமியக் குடியரசை உமையாக் கோத்திர அரச வம்சத்தினரிடம் இருந்து கி. பி. 750 ஆயுத முனையில் அபகரித்தனர். அப்பாசியர்களின் ஆட்சி ஸ்திரம் அடையும் முன்பே உமையக் கோத்திர இளவரசனான அப்துற்றகுமான் ஸ்பெயினை அப்பாசியரிடம் இருந்து கி. பி. 756 இல் கைப்பற்றி அங்கு உமையாக்களின் கீழ் சுதந்திரமாக இயங்கும் ஓராட்சியை நிறுவினார்.

உதுமானியத் துருக்கியர் கிலாபத்தின் தலைமைப்பீடமாக இருந்த எகிப்தை கி. பி. 1517 இல் கைப்பற்றி கிலாபத்தை அப்பாசியரிடம் இருந்து பொறுப்பேற்று அதனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பதிலும் அதனைக் கண்ணியப்படுத்துவதிலும் கவனம் செலுத்தினர். இவ்வாறு அரசியல் ரீதியான குழறுபடிகளும் ஆயுதப் போராட்டங்களும் கிலாபத்தில் இருந்த போதும் குறைந்தபட்சம் ஆன்மிக ரீதியாகவேனும் முழு முஸ்லிம் சமூகத்தையும் ஒரு குடைக்கீழ் வைத்திருக்கும். ஆற்றலை கிலாபத்தின் தோற்ற கால முதல் கி. பி. 1924 இல் கிலாபத் ஒழிக்கப்படும் வரை கிலாபத் தன்னிடம் கொண்டிருந்தது.

முஸ்லிம் உலகு வல்லரசாக ஆதிக்கம் பெற்றிருந்த காலத்தில் முஸ்லிம் ஸ்பெயின், சிசிலி எனும் நாடுகளூடாக இஸ்லாம் ஐரோப்பாவுக்கு ஒளியூட்டியது. முஸ்லிம்கள் உருவாக்கிய கோர்டோவாப் பல்கலைக்கழகம் போன்ற கல்வி நிலையங்கள் ஊடாக, அரசியற் சிந்தனைகள், சுதந்திரம், சமத்துவம் மனித உரிமைகள், விஞ்ஞானத் தொழில்நுட்ப அறிவுகள் முதலானவற்றை ஐரோப்பா பெற்றுக் கொண்டது. அதன்வழி ஐரோப்பிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டு கைத்தொழில் புரட்சியைத் தோற்றுவித்தது. அதன் மூலம் மத்திய கிழக்கிலும் கீழைத்தேய நாடுகளிலும் ஐரோப்பியர் காலனித்துவ நாடுகளைப் பெற்றுக்கொண்டனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வட ஆபிரிக்கக் கரையோர நாடுகள் உட்பட எகிப்தையும் மத்திய கிழக்கில் உள்ள பல முஸ்லிம் பிரதேசங்களையும் இந்தியாவின் முஸ்லிம் ஆட்சியாளர்களான மொகலாயர்களின் ஆட்சிப் பிரதேசங்களையும் ஐரோப்பியர் தம் நேரடியான ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தும், அறேபிய தீபகற்பத்தில் துருக்கியன் கீழ் இருந்த கோத்திர அடிப்படையிலான ஆட்சியாளர்களையும் தம் நட்பு நாடாக்கிக் கொண்டும் இருந்த நிலையிலும்கூட ஐரோப்பாவின் நோயாளி என்றழைக்கப்பட்ட துருக்கியை முற்றாக வீழ்த்த முடியவில்லை.

அதனால் துருக்கியின் பலத்தை மேலும் குன்றச் செய்து நலிவுபடுத்தும் நோக்கில் துருக்கியின் ஆட்சிக்குட்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசங்களில் வாழ்ந்த பல்லின மக்களிடையே தேசிவாத சிந்தனையைத் திட்டமிட்டு வளர்த்தனர். அஃதன்றி அறபு மக்களுக்கும் துருக்கிய மக்களுக்கு இடையே பகைமை உணர்வை வலுவடையச் செய்யும் நோக்கில் துருக்கியரின் பழம் பெருமையை துருக்கியர் இடையேயும், அறேபியர்களின் பழம் பெருமையை அறேபியர்களிடையேயும் வளர்த்து அறேபியரும் துருக்கியரும் ஒருவருக்க ஒருவர் சளைத்தவர்கள் அல்லர் என்ற உணர்வை ஏற்படுத்தி அவர்களை மோதவிட கீழைத்தேய ஆய்வாளர்களைக் கொண்டு நூல்களை எழுதுவித்து வெளியிட்டனர்.

ஐரோப்பியர்களின் தேசியவாத சிந்தனையாலும் தாராண்மைக் கோட்பாட்டினாலும் கவரப்பட்டிருந்த முஸ்லிம்களான புதிய படித்த வர்க்கத்தினரைத் தூண்டி கிலாபத் கோட்பாட்டை விமர்சிக்கும் பணியை கச்சிதமாகச் செய்தனர்.

இஸ்லாத்திற்கும் கிலாபத்துக்கும் இடையே வஹி வழியிலோ சரிஆ வழியிலோ ஒரு தொடர்பும் இல்லை என்று எடுத்துக்காட்டினர். கிலாபத் கோட்பாட்டை விட ஐரோப்பாவின் ஜனநாயக வழி முறையே மேம்பட்டதும் பயனுடையதும் ஆகும் என்ற கருத்தை துருக்கிய இளம் பரம்பரையினரிடையேயும், அறபு வாலிபர்களிடையேயும் பிரசாரம் செய்து கிலாபத்தை ஒழிக்கும் முயற்சிக்கு சகல வழிகளிலும் ஊக்குவிப்பு வழங்கினர். இச்சிந்தனைத் தாக்கத்துக்குட்பட்ட முஸ்லிம் குடிமக்களைக் கொண்டே கிலாபத்தை ஒழிக்கும் சட்டமூலத்தை முஸ்தபா கமால் 1924 இல் துருக்கிய பாராளுமன்றத்தில் நிறைவேற்றினார்.

மூன்றாம் கலீபாவின் காலத்தில் இஸ்லாத்தை ஏற்ற அப்துல்லாஹ் இப்னு ஸபாஹ் எனும் யூதனே முதன் முதலில் கிலாபத்துக்கு எதிரான கிளர்ச்சியை மூன்றாம் கலீபாவின் காலத்தில் ஆரம்பித்து கிலாபத் ஒழிப்பு முயற்சியைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கி வைத்தான். இஸ்லாத்தை ஏற்ற யூத பரம்பரையைச் சேரந்தவன் என்று நம்பப்படும் முஸ்தபா கமால் என்பவனே கி. பி. 1924 இல் கிலாபத் ஒழிப்பை நிறைவு செய்தான் என்பது நோக்கத்தக்கதாகும்.

முதலாம் உலக மகா யுத்த முடிவில் தோல்வியுற்ற துருக்கியை தலைநகர் அங்காராவுக்குள் முடக்கி அதன் கீழ் இருந்த பிரதேசங்களை அபகரித்து குட்டிக்குட்டி நாடு களாகி பலவழி முறைகளூடாகவும் துருக்கியைப் பலம் குன்றச் செய்தனர். எனினும் உலகளாவிய முஸ்லிம் சமூகத்தினர் உள்ளங்களில் இருந்து துருக்கியின் ஆன்மீகத் தலைமைத்துவத்தை அபகரிக்க முடியவில்லை. அதனால் தான் செத்த பாம்பை அடித்துக் கொல்வது போல கிலாபத் ஒழிப்பு மசோதாவைக் கொண்டுவந்த ஆன்மீக ரீதியாகவும் துருக்கியை முடக்கிவிட ஐரோப்பியர் முஸ்தபா கமால் ஊடாக முயற்சித்தனர்.

இதனால் எதிர்கால முஸ்லிம்கள் ஆன்மீக ரீதியாக வேனும் ஒன்றிணைய முடியாத நிலை தோன்ற முடியும் இது சமூகத்தில் பாரிய இழப்புக்களைத் தோற்றுவிக்கும். அதனைத் தவிர்ப்பதற்காக கிலாபத்திற்கு மீண்டும் உயிரூட்ட வேண்டும் என்று முஸ்லிம் அறிஞர்கள் சிலர் முயற்சித்தனர். அல் அஸ்ஹர் பல்கலைக்கழக உலமாக்கள் சிலரும் இந்திய உலமாக்கள் சிலரும் இப்பணியில் ஆர்வமாக ஈடுபட்டனர். இதனால் இதுகாலவரை கிலாபத் கோட்பாட்டை அரசியல், இராணுவ ரீதியாக எதிர்கொண்டதற்கு மேலதிகமாக அறிவியல் ரீதியாகவும் எதிர்க்க மேற்கத்தியர் சிந்தித்தனர். அதற்காக மேற்கத்திய சிந்தனைத் தாக்கத்துக்குட்பட்ட சமய சார்பற்ற உலமாக்கள் சிலரை ஊக்குவித்தனர். அவர்கள் கிலாபத் சமய பின்னணி கொண்டதல்ல என்று அறிவியல் ரீதியாக நிறுவ முயற்சித்தனர். அவர்களில் எகிப்தைச் சேர்ந்த அலி அப்தல் றாதிக் என்பவர் குறிப்பிடத்தக்கவராவார். எகிப்தின் காலனித்துவ ஆட்சிக்காலம் பிரிவில் பொருளாதார பலமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் பின்னணியும் உடைய ஒரு குடும்பத்தில் அலி அப்துற்றாசிக் (கி. பி. 1888-1966) பிறந்தார். அவரது தந்தை ஒரு பெரும் பண்ணையாளர். "உம்மா" எனும் அரசியற் கட்சியை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்தவர். அவரது சகோதரர் முஸ்தபா அப்துற்றாசிக் அல் அஸ்ஹரில் தத்துவ இயல் கற்றவர். பிரபல சீர்திருத்தவாதியான அப்துஹுவின் மாணவர் அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக கடமை புரிந்தவர்.

அலி அப்துற்றாசிக் அல் அஸ்ஹரில் சரீஆத் துறையில் கல்வி பயின்று கி. பி. 1911 இல் அல் ஆலிம் சான்றிதழ் பெற்றார். 1912 இல் இங்கிலாத்தின் ஒக்ஸ் போர்ட் பல்கலைகழகத்தில் இணைந்து பொருளாதார அரசியற் துறைகளில் கல்வி பயின்றார். கி. பி. 1915 இல் எகிப்துக்கு மீண்டார். எகிப்தின் அல்மன்சூரா நகரின் "காழியாக நியமிக்கப்பட்டார். எகிப்திய அரசின் அவ்காப் அமைச்சராக இருமுறை பதவி வகித்தார். சமய சார்பற்ற சிந்தனை கொண்ட ஓர் ஆலிமாக அவர் பிரசித்தமானார்.

துருக்கியின் அதிபராக இருந்த முஸ்தபா கமால் கி. பி. 1924 இல் கிலாபத் பதவியை உத்தியோகபூர்வமாக ஒழித்துக் கட்டிய பின் கிலாபத்தை மீள் உருவாக்க வேண்டும் என்ற குரல் எகிப்து, உட்பட அறபு தீபகற்பத்திலும் இந்தியாவிலும் வலுவடைந்த போது கிலாபத் அவசியமற்றது என்ற சிந்தனையை நிலைநாட்டுவதற்காக அலி அப்துற்றாசிக் முன் நின்று உழைத்தார். கி. பி. 1925 "அல் இஸ்லாம் வ உசூல் அல் ஹுகூம்" எனும் நூலையும் கி. பி. 1947 இல் "அல் இஜ்மா பி அஷ்ஷரீஆ அல் இஸ்லாமிய்யா" எனும் நூலையும் தன் கருத்தை நிலை நாட்டும் நோக்கில் எழுதி வெளியிட்டார். சமயமும் அரசும் ஒரு நாணயத்தின் இரு புறங்கள் அல்ல வெவ்வேறானவை என்ற கருத்தை கொண்டிருந்தார். சமய சார்பற்ற இஸ்லாமிய சிந்தனையின் தந்தை என அவர் கருதப்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிலாபத் அவசியமா இல்லையா என்ற வாதப் பிரதி வாதங்களில் அவர் கலந்து கொண்டு மக்கள் நலனையும் சமூக நலனையும் பேணக்கூடிய சமயம் சார்ந்த அல்லது சமயம் சாராத எந்த ஓர் அரசையும் ஆதரிக்கலாம் என்ற கருத்தை முன்வைத்தார். கிலாபத் கோட்பாடு பற்றிய அவரது கருத்துக்கள் பின்வருவனவாகும்.

(அ) குர்ஆனோ சுன்னாவோ கிலாபத் கோட்பாட்டை ஆதரிக்கவும் இல்லை எதிர்க்கவும் இல்லை. இஸ்லாம் எந்த ஒரு ஆட்சிமுறையையும் விதந்துரைக்கவில்லை.

(ஆ) கிலாபத்தின் அவசியத்தை நிறுவ மக்கள் சம்மதத்தைக் காட்டும் ஏகோபித்த முடிபு (இஜ்மா) ஒன்று எட்டப்படவில்லை.

(இ) கிலாபத் முஸ்லிம் சமூகத்துக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதையே கடந்த கால வரலாறு காண்பிக்கிறது.

(ஈ) தமது கிலாபத்தைக் கிளர்ச்சியாளர்களிடம் இருந்து பாதுகாக்க சமயத்தை ஒரு கேடயமாகப் பயன்படுத்தலாம் என்பதாலேயே முன்னைய ஆட்சியாளர்கள் கிலாபத்தை நியாயப்படுத்த சமயத்தை ஆதாரமாகக் கொண்டனர்.

மேற்குலக ஜனநாயகப் போக்கிலான ஓர் அரசியலமைப்பையே அவர் ஆதரிக்கின்றார் என்பது அவரது கருத்துக்களில் இருந்து புலனாகிறது என்பர்.

கிலாபத்துக்கு எதிரான மேற்குலகின் நீண்டகாலப் போராட்டமும், மேற்கு மயப்பட்ட சமய சார்பற்ற முஸ்லிம் அறிஞர்கள் சிலரதும், சுயநலம் மிக்க முஸ்லிம் அரசியற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர்கள் சிலரதும் நடவடிக்கைகளும் கிலாபத்தை மீள உருவாக்கும் கனவு நனவாகமாலே கலைதற்கு வழிகோலின.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கிலாபத் ஆட்சி மீண்டும் உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்து முஸ்லிம் சமூகத்தில் பலரால் முன்வைக்கப்பட்ட போதும் அது சாத்தியமானதல்ல என்பதையே வரலாற்று நிகழ்வுகள் காண்பிக்கின்றன. பெயரளவிலான ஒரு கிலாபத் ஆட்சியைத்தானும் தோற்றுவிக்கமுடியாத ஓர் அரசியற் சூழலில் முஸ்லிம் நாடுகள் இன்று உள்ளன என்பதும் நிதர்சனமான உண்மையாகும்.

கிலாபத் ஆட்சி நடைமுறையில் இருந்த குலபா உற்றாசிதூன்களின் காலத்தில் ஒரு நாடு, ஒரு தலைவர், ஒரு யாப்பு என்ற நிலை இருந்தது. சமூகத்தலைவர்களாகக் கருதப்பட்ட குழுவினர் ஏகத்துவக் கருத்தோட்டத்துடன் இணைந்திருந்தனர். தற்கால முஸ்லிம் உலகின் நிலை இதற்கு முற்றிலும் மாற்றமானது. ஒரே தலைமையின் கீழ் முன்பு ஒரு காலத்தில் இருந்த முஸ்லிம் பிரதேசம் இன்று ஐம்பதுக்கு மேற்பட்ட சின்னச் சின்ன நாடுகளாகியுள்ளது. இந்நாடுகள் ஒவ்வொன்றும் தனக்கென்று ஒரு தலைவரையும், தனத்தனி யாப்பையும் கொண்டுள்ளது. முஸ்லிம் பிரதேசங்களை ஒன்றிணைக்கும் மொழியாக அன்று அறபு மொழி இருந்தது. அதனைத் தாய் மொழியாகக் கொண்டில்லாத நாடுகளில் சமய மொழி என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அ்ஃதல்லாது இன மொழி பிரதேச ரீதியான வேறுபாடுகளும் அவர்களிடையே ஆதிக்கம் செலுத்துகின்றன. இ்ஃதன்றி இன்று முஸ்லிம் உலகு சீஆ, சுன்னத் வல்ஜமாஅத்தினர் என்ற இரு குழுவாகி ஒன்றை ஒன்று அழிக்கும் அளவு பகைமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரோதமும் கொண்டு இரு துருவங்களாகச் செயற்படும் தன்மை சாதாரண மக்களுக்கம் விளங்குமளவு வளர்ந்துள்ளது. இஃதன்றி ஒவ்வொரு நாட்டினதும் குடிமக்களும் அரசியற் கட்சி ரீதியாகப் பிளவுபட்டுள்ளார்கள்.

ஜனநாயகவாதிகள் அல்லது முதலாளித்துவ வாதிகள், கம்யூனிசவாதிகள் அல்லது சோஷலிசவாதிகள் என்று சிந்தனை ரீதியாகவும் முஸ்லிம்கள் பிளவுற்றுள்ளனர். மேற்குலகு அறிமுகப்படுத்திய தேசியவாத சிந்தனைக்கும் அவர்கள் இரையாகியுள்ளனர். முன் ஒரு காலத்தில் பல நூற்றாண்டுகள் உலகை வழிநடத்திய முஸ்லிம்கள் மீண்டும் ஒன்றுபடுவதைக் கண்டு தற்கால உலக வல்லரசுகள் பயப்படுகின்றன. ஆதலால் ஐக்கியத்தை நோக்கி நகரக்கூடிய முஸ்லிம்களின் செயற்பாடுகள் அனைத்தையும் அவை திட்டமிட்டு நசுக்குகின்றன. இதற்காக அவை தம்மிடம் உள்ள தொழில்நுட்ப, வெகுசனத் தொடர்புச் சாதனங்களையும், பொருளாதார, இராணுவ பலத்தையும் இராஜதந்திரத்தையும் பயன்படுத்துகின்றன. தம்மைப் பீடித்துள்ள நோய் இன்னதென்றே அறிய முடியாத அளவு அறிவியல் ரீதியாக தற்கால முஸ்லிம்கள் பின் தங்கியுள்ளனர். இத்தகையதோர் பின்னணியில் கிலாபத்தை மீண்டும் தோற்றுவிக்க முயற்சிப்பது சாத்தியமற்ற பணியாகும்.

இவ்வாறான தடைகள் எல்லாவற்றையும் மீறி கிலாபத் ஆட்சியைத் தோற்றுவித்தாலும் அதன் அசல் நிலையில் கிலாபத் ஆட்சியை நடைமுறைப்படுத்தக்கூடிய சூழல் தற்கால உலகில் இல்லை.

இஸ்லாம் அங்கீகரிக்காத வட்டியை அடிப்படையாகக் கொண்ட உலக வங்கியை மையமாக வைத்தே உலகின் அனைத்து நாடுகளது பொருளாதாரமும் சுழல்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இஸ்லாமிய சரிஆவை அமுல்படுத்துகிறோம் என்று கூறிக் கொள்ளும் முஸ்லிம் நாடுகளால் கூட வட்டியை மையமாகக் கொண்ட பொருளாதார சூழலில் இருந்து விடுபட முடியவில்லை. அ..தன்றி எந்த ஒரு நாடும் தனித்துத் தன்னிறைவை அடையவோ, தனிமையாக தன் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தவோ முடியாத நிலை இன்றுண்டு. இத்தகையதொரு சூழலில் விஞ்ஞான தொழில்நுட்ப இராணுவத்துறைகளில் வளர்ச்சி காணாத நிலையில் உள்ள முஸ்லிம் நாடுகள் ஒன்றிணைந்தாலும் வளர்ச்சியடைந்துள்ள உலக நாடுகளின் போக்கிற்கு முரணாக தனித்துவமாக இயங்க முடியாது என்பது கவனத்திற் கொள்ளப்படவேண்டிய ஓர் அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உலகின் மிகப் பழைய
பல்கலைக் கழகமான
கைரவான் பல்கலைக்கலகத்தை
ஒரு முஸ்லிம் பெண்
மொரோக்கோவின் பெஸ் (Fez)
நகரில் கி.பி. 859 இல்
தோற்றுவித்தார். இங்கிலாந்தின்
ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம்
கி.பி. 1036 இலேயே
ஆரம்பிக்கப் பட்டது.

"உரோமப் பேரரசு கி.பி. 70 இல்
ஜெருசலத்தை கைப்பற்றியதும்
அங்கு வாழ்ந்த யூதர்களை
வெளியேற்றியது. கி.பி.637
முஸ்லிம்கள் அந்நகரத்தை
கைப்பற்றிய பின்பே ஜெருசலத்தில்
குடியேற யூதர்களுக்கு
முஸ்லிம்கள் அனுமதி
வழங்கினர்."

FIRAS ALKHATEEB
(LOST ISLAMIC HISTORY)
ஆயின் இன்று...

ISBN 978-955-38379-3-6

ISLAMIC BOOK HOUSE
00011449 – 1
Usmaniya Thurukkiyar
Elu/Is/Ki/V – MIM Ameen
06.09.2020
Rs. 400.00
11 – 268 88 51

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org